
# தேனகம்

முத்தமிழ் விழா
சிறப்பு மலர்



பிரதேச செயலக கலாசாரப்பேரவை
மண்முனைவடக்கு - மட்டக்களப்பு

- 1999 -

சுபீட்சத்தை நோக்கிய பாதையில்

உங்கள்

வாழ்க்கையின் சகல பருவத்திலும்

தொழிலின் சகல துறைகளிலும்

– உச்ச பலன் பெற

உங்களுடன் கைகோர்த்து நிற்கும்

ஒரே நண்பன்

**மக்கள் வங்கி**

**மக்களின் உயிர் நாடி**

# தேனகம்

ஏழாவது ஆண்டு

## முத்தமிழ் விழா சிறப்பு மலர்

வெளியீடு

பிரதேச செயலக கலாசாரப் பேரவை
மண்முனை வடக்கு
மட்டக்களப்பு
1999

# பிரார்த்தனா
## Prarthana

ஒரு நீண்ட பயணத்தின் ஆரம்பம் ......................

**பிரார்த்தனா - சின்னஞ்சிறுவருக்கான பரிசு என்பதன் காரணம் ?**
பிரார்த்தனா பத்திரங்கள் மூலம் உங்கள் பிள்ளையின் பெயரில் பத்தாயிரம், இருபத்தையாயிரம், ஐம்பதாயிரம் அல்லது ஒரு லட்சம் ருபா வரையில் சேமிக்க உங்களாலும் முடியும். ஆரம்பத்தில் செலுத்த வேண்டியது குறித்த பெறுமதியின் சிறு தொகையை மட்டுமே. உங்கள் பிள்ளைக்கு 16 வயதாகும் வேளையில் பிரார்த்தனா பத்திரங்கள் கால எல்லையும் பூர்த்தியடையும், அவ்வேளையில் பெருந்தொகையொன்று பெருகியிருக்கும். பிரார்த்தனா சின்னஞ்சிறுவருக்கான சிறந்த பரிசு என்பதன் பொருள் அதுவே.

**பிரார்த்தனா அதிர்ஷ்டம் கிடைக்கும் முறை**

(உதாரணம்)
பிள்ளையின் பிறப்பிலிருந்து ஒரு மாதத்துக்குள் பிரார்த்தனா சான்றிதழ் வாங்கப்பட்டிருந்தால்

| வைப்புச் செய்ய வேண்டிய தொகை | பிள்ளைக்கு 16 வயது பூரணமாகும் போது கிடைக்கும் தொகை |
|---|---|
| 18,829.00 | 100,000.00 |
| 9,415.00 | 50,000.00 |
| 4,707.00 | 25,000.00 |
| 1,883.00 | 10,000.00 |
| 942.0 | 5,000.00 |

**அதி உயர் வட்டியையும்,**
**அரசாங்க உத்தரவாதத்தையும்**
**வழங்கும் உன்னத வங்கி**
**தேசிய சேமிப்பு வங்கியாகும்.**

தேசிய சேமிப்பு வங்கி
மட்டக்களப்பு.

## மண்முனை வடக்குப்பிரதேச செயலக கலாசாரப்பேரவை 1999

**தலைவர்**

திரு. செ. புண்ணியமூர்த்தி

*(பிரதேச செயலாளர்)*

**செயலாளர்**

திருமதி. கலாமதி பத்மராஜா

*(உதவிப்பிரதேச செயலாளர்)*

**இணைப்பாளர்**

திருமதி. நிர்மலா ஜெயராஜா

*(சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்)*

**பேரவை உறுப்பினர்கள்**

திரு. காசுபதி நடராஜா

மாஸ்டர் சிவலிங்கம்

திரு.எஸ். தங்கவேல்

திரு. கதிர் பாரதிதாசன்

திரு.ஐ. நடேசன்

திருமதி ஹபீபா காதர்

திரு. க. கணேசானந்தம்

திரு. அ. நேசதுரை

திரு. எஸ். மோசஸ்

திருமதி திலகவதி ஹரிதாஸ்

செல்வி மிருணாளினி தவராஜா

திரு. இ.தவராஜா

செல்வி பாரதி குணரெத்தினம்

**மலர்க்குழு**

திரு காசுபதி நடராஜா

மாஸ்டர் சிவலிங்கம்

திரு. இ. தவராஜா

திரு. எஸ். மோசஸ்

**விடய எழுதுநர்**

செல்வி தர்மினி தியாகலிங்கம்

## ஆறு தசாப்தங்களாக அர்ப்பணச்சேவையில் ஈடுபட்டுவரும் இலங்கை வங்கியிடமிருந்து உங்களுக்குக்கிடைக்கிறது

## ரண் கினும் வாசனா

**இலங்கை வங்கியில் சேமிக்கும் உங்களுக்கே இந்த நல்ல செய்தி !**

ஆறு தசாப்தங்களாகக் கட்டியெழுப்பிய நிலையான நம்பிக்கையுடன் முன்னணி அரச வங்கியின் உச்சமான பாதுகாப்பும் அதி உயர்ந்த வர்த்தக வங்கி வட்டிவீதமும் வழங்கிடும்.

**இலங்கை வங்கியிலிருந்து**

சேமிப்புக்கணக்கு வைத்திருப்போர் பெறுமதிமிக்க பரிசுகளை வென்றிட பொன்னான தருணம் இது. இலங்கை வங்கி அதன் 60 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வழங்குகிறது.

**"ரண் கினும் வாசனா" மாபெரும் சீட்டிழுப்பு (பொற்கணக்கு அதிர்ஷ்டம்)**

1000 ரூபா போன்ற சிறிய தொகைப்பணத்தை முதலீடு செய்துள்ள சிறிய சேமிப்பாளர்களுக்கும் அதிர்ஷ்ட வாய்ப்பு !

தேசிய ரீதியிலான சீட்டிழுப்பு மற்றும் மாகாண ரீதியிலான சீட்டிழுப்பு என இரு சீட்டிழுப்பு வாய்ப்புகள் !

**தேசிய ரீதியிலான பரிசுகள்**

- முதலாம் பரிசு 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான வீடொன்று அல்லது அதன் பெறுமதி பணமாக
- இரண்டாம் பரிசு 1.25 மில்லியன் ரூபா பெறுமதியான சொகுசுக்கார் - 2 பரிசுகள்
- மூன்றாம் பரிசு 5 லட்சம் ரூபா பெறுமதியான கார் - 3 பரிசுகள்
- ஆறுதல் பரிசு 20 வர்ணத்தொலைக்காட்சிப்பெட்டிகள்
  20 குளிர்சாதனப்பெட்டி
  20 துணி துவைக்கும் இயந்திரங்கள்

**மாகாண ரீதியிலான பரிசுகள் (ஒவ்வொரு மாகாணத்திற்கும்)**

- 5 லட்சம் பெறுமதியான கார் ஒன்று
- ஒரு மூன்று சக்கர ஓட்டோ வண்டி
- ஒரு இரண்டு சக்கர கையுழவு இயந்திரம்
- நான்கு 20 அங்குல வர்ணத்தொலைக்காட்சிப்பெட்டி
- பத்து தையல் இயந்திரங்கள்
- பத்து துவிச்சக்கர வண்டி
- பத்து காஸ் அடுப்புகள்
- நூறு கணக்கில் உள்ள தொகைக்கு சமமான தொகைகள்

*மேலதிக விபரங்களுக்கு அண்மையிலுள்ள இலங்கை வங்கி முகாமையாளரைச் சந்தியுங்கள்.*

# ஆசிச் செய்தி

## 'தேனகம்' மலர்ந்து மணம்பரப்ப வாழ்த்துக்கள்

*மட்டக்களப்பின் கலாசாரம் பற்றிய ஒரு தேடல் அண்மைக்காலமாக இங்குள்ள அரச திணைக்களங்கள் மத்தியில் பெரிதும் உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது. இன்றுள்ள இறுக்கமான சூழ்நிலையில் இது மக்கள் மனங்களில் அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்படுத்தவல்ல நல்ல நிகழ்வாகும்.*

*அந்த வகையில் மண்முனை வடக்கு பிரதேச செயலகக்கலாசாரப் பேரவையானது ஏழாவது தடவையாக மலர் வெளியிட்டு, முத்தமிழ்விழா நடத்திச் சிறப்பித்து வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.*

*ஒவ்வோர் இனமும் தங்களது இருப்பின் அடையாளங்களை வெளிப்படுத்தும் போது தத்தம் மரபுசார் கலைகளுக்கே முன்னுரிமையளித்துச் செயற்பட்டு வருகின்றன.*

*இயற்கையாகவும், செயற்கையாகவும் மனித நாகரிங்களைச் சேதப்படுத்திய புயல், வெள்ளம், கறையான், யுத்தம், நெருப்பு போன்ற அனர்த்தங்களிலிருந்து பாதுகாத்து வந்து மூதாதையர் நமக்களித்த அரிய கலைகளை இன்றையச்சூழலில் இழந்து விடாமலும், மறந்து விடாமலும் இருக்க, இத்தகைய பண்பாட்டு விழாக்களை ஆண்டுதோறும் தவறாது நிகழ்த்தி வருதல் ஒரு காலத்தேவை என எண்ணுகின்றேன்.*

*மண்முனை வடக்கு பிரதேச செயலாளர், உதவிப்பிரதேச செயலாளர், கலாசாரப்பேரவை உறுப்பினர்கள், அலுவலகம் சார் உத்தியோகஸ்தர்கள் மற்றும் தொடர்புடைய அன்பர்கள் அனைவரும் இத்தகைய பணிகளில் அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாகச்செயற்பட்டு வருகின்றனர். இத்தகைய பணிகள் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவையே.*

*இந்த நிகழ்ச்சிகள் வெற்றி பெறவும் விழா மலர் விரிந்து சிறப்படையவும் எல்லாம் வல்ல பரம்பொருளை நானும் பிரார்த்திக்கின்றேன்.*

*இறைபணியில்,*
*சுவாமி ஜீவனானந்தா*

**மட்டக்களப்பு
இராமக்கிருஷ்ண மிஷன்
தலைவர்**

**சுவாமி ஜீவனானந்தாஜி
மகராஜ் அவர்கள்**

# ஆசிச் செய்தி

மண்முனை வடக்கு கலாசாரப்பேரவை வெளியிடும் தேனகம் மலருக்காக ஆசிச்செய்தி ஒன்றை வழங்குவதில் பெரிதும் மகிழ்வடைகிறேன்.

இப்பிரதேச கலை கலாசார மரபுகளைப் போற்றிக்காப்பதிலும் வளர்ப்பதிலும் கலாசாரப் பேரவை தொடர்ந்து ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியது. ஆண்டு தோறும் நடைபெற்று வரும் கலாசார விழாவும் தேனகம் மலர் வெளியீடும் இதற்குத்தக்க சான்றாகும்.

நாளும் பொழுதும் மக்கள் சொல்லொண்ணாத்துன்பங்களையும். அழிவுகளையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் இச்சூழ்நிலையில் அவர் தம் தனித்துவத்தையும் அடையாளத்தையும் உறுதிப்படுத்தும் கலாசார. இலக்கிய நிகழ்வுகள் இடம்பெறுவது புத்துணர்ச்சியையும். மனவுறுதியையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

இம்முயற்சியில் அயராது ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டுகிறேன். தேனகம் மலர் சிறந்ததொரு ஊடகமாக வெளிவர வாழ்த்துக்களைத்தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல இறையருள் நிறைய பிரார்த்திக்கிறேன்.

இறையன்பில்

அதி.வண. ஆயர் யோ. கிங்சிலி சுவாம்பிள்ளை

**திருமலை-மட்டக்களப்பு**
**மறைமாவட்ட ஆயர்**

**பேரருள் கலாநிதி**
**யோ. கிங்சிலி சுவாம்பிள்ளை**
**அவர்கள்**

# வாழ்த்துச் செய்தி

மண்முனை வடக்குக்கலாசாரப் பேரவையின் தலைவரிடமிருந்து

மண்முனை வடக்கு கலாசாரப்பேரவை கடந்த ஆறு ஆண்டுகளாக, மட்டக்களப்பின் பாரம்பரிய கலாசார நிகழ்வுகளைக்கொண்ட முத்தமிழ் விழாவையும், இப்பிரதேசத்தின் கலை இலக்கியத்துறை சார்ந்த ஆக்கங்களையும் தாங்கியதாகத் தேனகம் என்ற சிறப்பு மலரையும் மலர்வித்து வருகின்றது.

அந்த வகையில் இன்று நடைபெறுகின்ற முத்தமிழ்விழாவும் வெளிவருகின்ற தேனகம் மலரும் ஏழாவது ஆண்டு நிகழ்வாகவும், இந்த நூற்றாண்டின் இறுதி வெளிப்பாடுகளாகவும் அமைந்து, வரலாற்றுப்பெறுமதி வாய்ந்த பதிவாக அமைவதையிட்டு மகிழ்வுறுகின்றேன்.

கலாசாரப்பேரவை திட்டமிட்ட இலக்குகளுடன் இந்நிகழ்வினை நிறைவேற்றி வருகின்ற போதும், இவ்வாண்டில் ஏற்பட்ட காலதாமதத்துக்கான பின்புலங்கள் பலவுண்டு. மலருக்கான ஆக்கங்கள் பெறுவதில் ஏற்பட்ட சிரமங்கள், நிதி திரட்டுவதிலேற்பட்ட தடைகள் என்பன முக்கியமான தடைகளாக இருந்தன.

எனினும் பல்வேறு பணிகளுக்கு மத்தியில், கலாசாரப்பேரவையின் அயரா உழைப்பின் அறுவடையாக இன்று இந்நிகழ்வுகள் நிறைவெய்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வழமையான நிகழ்வுகளுடன், அமரத்துவம் எய்திய பேரவையின் ஆரம்பகால உறுப்பினர்களின் பணிகளை நினைவுகூர்ந்து பாராட்டுதல், விருது பெற்ற மூத்த உறுப்பினர்களைப்பாராட்டுதல் என்பன இவ்வாண்டின் சிறம்பம்சங்களாகும்.

மேலும், நாடகத்துறையில் ஏற்பட்டு வரும் மலர்ச்சியைக்கருத்திற் கொண்டு பாடசாலைமட்டப் போட்டியில் நாடகத்துறைக்கு இடமளித்திருப்பதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன எமக்கு நிதியுதவி வழங்கியுள்ளன. அதற்கு உதவியாகவிருந்த இந்துசமய கலாசாரத்திணைக்களப்பணிப்பாளர் திரு.சி.தில்லை நடராஜா, திரு.எஸ்.தெய்வநாயகம் ஆகியோருக்கு எமது நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், தொண்டர் நிறுவனங்கள், வர்த்தகர்கள் ஆகியோருக்கும், ஆசிச்செய்திகள், வாழ்த்துச்செய்திகள், ஆக்கங்கள் வழங்கியோருக்கும், சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் நன்றிகூறி, விழாவை நிறைவேற்றித்தந்த கலாசாரப்பேரவை உறுப்பினர்களை வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

பிரதேச செயலாளர்
மண்முனை வடக்கு

**திரு. செ. புண்ணியமூர்த்தி அவர்கள்**




# LANKA
# மருத்துவமனை

உலகிலுள்ள மருத்துவ சேவைகளில் ஹோமியோபதி மருத்துவமும் இன்று போட்டி போட்டுக் கொண்டு முன்னேறி வருகிறது. ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்க்க முடியாத பழைய, முற்றிய நோய்களையும் தீர்க்க முடியும். இலங்கை அரசாங்கத்தின் மூலம் பாகிஸ்தான் பல்கலைக்கழகத்தில் கற்றுவந்த Dr.A.C. Suriyah அவர்களிடம் லங்கா டிஸ்பென்சரியில் சகலவிதமான மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் எந்த நோய்களுக்கும் கணணி (Computer) முறையிலான ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

வேறு மருத்துவ முறைகளால் குணப்படுத்த முடியாத நோய்களையும் ஹோமியோபதி மருத்துவ முறையால் குணப்படுத்த முடியும்.

குறிப்பாக ஆஸ்த்மா, கசரோகம், மூட்டுவாதம், மகப்பேறற்றவர்கள், ஆண் சக்தி இழந்தவர்கள் போன்றவர்கள் நேரடியாகச்சந்தித்து ஆலோசனைகளைப் பெற முடியும்.

24 மணி நேரமும் சேவை செய்யக்காத்திருக்கிறார்கள்.

## லங்கா மருத்துவமனை

இல. 1, மார்க்கட் மேல்மாடி,
மட்டக்களப்பு.

தொலைபேசி இல. 065-23185

மலர்க்குழுவிடமிருந்து..............................

## 21ம் நூற்றாண்டின் எதிர்பார்ப்புக்கள்

- நூற்றாண்டொன்று (Millenium) முடிவடைந்து புதிய நூற்றாண்டை எதிர்கொள்ளக்காத்திருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலப்பகுதியில் முத்தமிழ் விழா ஏழாவது மலர் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

- 21 ம் நூற்றாண்டை வரவேற்கவும், புதிய சவால்களை எதிர்கொள்ளவும் உலகநாடுகள் யாவும் பாரிய திட்டங்களைத்தயாரித்துக் கொண்டிருக்கின்றன.

- பிற நாடுகளின் சிந்தனையோட்டம் விரிந்து செல்ல நமது எண்ணங்களும் ஆக்க முயற்சிகளும் தேக்கநிலையிலா......... ?

- தேனகத்துக்கான ஆக்கங்கள் தேடி அலைந்த வேளைகளில் எழுந்த விசனங்கள் இவை.........

- எமது சந்தேகங்களுக்கு விடை தந்தது கிழக்குப்பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் சந்திப்பு.

- நுண்கலைப்பீடம் கற்கை நெறி மாணவர்கள், விரிவுரையாளர்களுடன் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்ற மட்டக்களப்புப்பிரதேசம் பற்றிய கள ஆய்வுகளும், எடுத்துக்கொண்டுள்ள விடயங்களும் எம்மை வியக்க வைத்தன ; ஆவணப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள், எதிர்காலத்துக்கான நவீன எண்ணக்கருக்களுடனான ஆயத்தங்கள் !

- பல்கலைக்கழகத்துக்கு வெளியேயுள்ள கலைஞர்கள் அறிஞர்கள் என இணைந்த வட்டத்தோடு முன்னெடுக்கப்படுகின்ற கலைமுயற்சிகள், நவீன பாணியிலான கலை வடிவங்கள் - எனப்பல்வேறு அம்சங்கள்.

- இவையெல்லாம் 21 ம் நூற்றாண்டை நோக்கிய ஆயத்தங்களில் நாமும் சளைத்தவர்களல்ல என்ற மகிழ்ச்சியான செய்தியைத்தருகின்ற விடயங்களாகும்.

- இப்பிரதேசம் பற்றிய ஆய்வாளர்கள், படைப்பாளிகள் நுண்கலைப்பீடத்துடன் இணைந்து தமது ஆக்க முயற்சிகளை மேற்கொண்டால் மிகவிரிந்ததோர் பரப்பை உள்ளடக்கிய, ஆழமானதும், தேவையானதுமான மிகச்சிறந்த படைப்புக்களைத் தொடர்ச்சியாக உருவாக்க முடியும். புதிய படைப்பாளிகள் பலர் வெளிவருவர் என்பது உறுதி. எனவே இப்பிரதேசம் பற்றிய அக்கறை கொண்டவர்கள் இப்புதிய நோக்கில் ஈடுபட முனைய வேண்டும் என்பதே தேனகம் விடுக்கின்ற செய்தியாகும்.

- பேராசிரியரின் ஒத்துழைப்புடன் கிழக்குப்பல்கலைக்கழகத்திலிருந்து நான்கு கட்டுரைகளும், தெரிவு செய்யப்பட்ட சில எழுத்தாளர்களிடமிருந்து பெற்ற ஆக்கங்களும் தேனகத்தை அலங்கரிக்கின்றன.

- தேனகத்தைச் சிறப்புற நிறைவேற்ற ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக !

மலர்க்குழு

# தேனகத்தின் உள்ளே

## கட்டுரைகள்


- மண்முனை வடக்குப்பிரதேசத்தில் வாழ்ந்த ஓர் மக்கள் கவிஞன் சுபத்திரன் பற்றிய ஒரு சிறு அறிமுகம் - பேராசிரியர் சி.மௌனகுரு 1
- மட்டக்களப்பில் பறங்கியர் இனம் - திரு. இரா.துரைரத்தினம் 4
- மட்டக்களப்பு பிரதேச சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி - திரு. செ.யோகராசா 8
- காத்தவராயன் கூத்து தோற்றமும் ஒப்பீடும் (ஆய்வு நோக்கு) - திரு. க.சிவரெட்ணம் 12
- மட்டக்களப்பில் மதம் சாராக் கட்டடக்கலை - செல்வி. பிரஷாந்தி மகாலிங்கசிவம் 18
- மட்டக்களப்புக் கவிகளும் நானும் - திரு. வ.சிவசுப்ரமணியம் 23
- மட்டக்களப்புக்கல்வி நிலை - திருமதி. தி.ஹரிதாஸ் 29
- மட்டக்களப்புக்கலை இலக்கிய வரலாற்றில் மண்முனை வடக்கு கலாசாரப்பேரவையின் ஐந்தொகை - திரு. காசுபதி நடராசா 48


## கவிதை


- மீட்டுத்தரும் தெய்வம் - திரு. ச.அ.பாய்வா 11
- வல்ல சபதமொன்று மங்கையரே செய்திடுவோம் - திருமதி. ராஜினி புண்ணியமூர்த்தி 27
- நீண்ட கால நேரகூசி - திரு. எ.நவரெத்தினராஜா குருஸ் 41


## சிறுக்தை


- இது ஒன்றும் புதிய கதை அல்ல - திரு. ஈ.நவரெத்தினராசா குருஸ் 32


## தொகுப்பு


- வாழ்த்துப் பெறும் கலைஞர்கள் - திருமதி. நிர்மலா ஜெயராஜா 36
- விசேட விருது பெற்ற மூத்த கலைஞர்கள் - திருமதி. நிர்மலா ஜெயராஜா 42
- இலக்கிய இழப்புக்கள் 1999 - திரு. அன்பழகன் குருஸ் 57
- அமரர்களான ஆரம்ப உறுப்பினர்களை நினைவுகூர்ந்து வழங்கும் விசேட கௌரவம் - திருமதி. நிர்மலா ஜெயராஜா 62


## போட்டி முடிவுகள்


- மண்முனை வடக்குக் கலாசாரப்பேரவை நடத்திய போட்டி முடிவுகள் 61


## நிகழ்ச்சி நிரல்


- முத்தமிழ் விழா 1999 67

# மண்முனை வடக்குப்பிரதேசத்தில் வாழ்ந்த ஓர் மக்கள் கவிஞன்

## கவிஞர் சுபத்திரன் பற்றிய ஒரு சிறு அறிமுகம்

*பேராசிரியர். சி.மௌனகுரு*

சுபத்திரன் என்ற புனைபெயர் கொண்ட க.தங்கவடிவேல் என்கின்ற கவிஞர் மண்முனை வடக்குப்பிரதேச மக்கள் கவிஞர்களுள் ஒருவர். படிப்பறிவில்லாதோரும் கவிபாடும் மக்கள் கவிகள் நிறை மண்முனைப்பிராந்தியத்தில் படிப்பறிவோடும், அரசியல் ஞானத்தோடும் மக்களை - குறிப்பாக உழைக்கும் மக்களைப்பற்றிப்பாடிய மக்கள் கவிஞர் சுபத்திரன்.

1935 ஆம் ஆண்டிலே பிறந்த இவர் 1979 இல் காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 44. தனது 44 வயதுக்குள் அவர் கவிதையிலும், சமூகச்செயற்பாடுகளிலும் காட்டிய தீவிரம் மிகுந்த கணிப்பிற்குரியது. 1950 களின் பிற்பகுதி தொடக்கம் 1980 வரை உள்ள 30 ஆண்டுகளில் குறிப்பாக இலங்கை வரலாற்றிலும், சிறப்பாக மட்டக்களப்பு வரலாற்றிலும் ஒரு முக்கிய மனிதராக இருந்தவர். அவரைப்பற்றிய செய்திகள் அவரது செயற்பாடுகள், அவரது ஆக்கங்கள் என்பன பெரிதாக ஆவணப்படுத்தப்படவில்லை. ஆவணப்படுத்தலின்மையே மட்டக்களப்பு வரலாற்றின் சோகம். வயல் சஞ்சிகை எடுத்த சில முயற்சிகள் பாராட்டிற்குரியன. காலம் சென்ற சாருமதி அவர்கள் சுபத்திரன் கவிதைகளைத்தொகுத்து 1997 இல் வெளியிட்டார். தேசிய கலை இலக்கியப்பேரவை வெளியீடாக இன்னொரு தொகுதியும் வரவுள்ளது.



இவற்றால் இன்றைய தலைமுறைக்கு சுபத்திரனை ஓரளவாவது அறியும் வாய்ப்புக்கிட்டியுள்ளது.

சுபத்திரன் 50 களின் பிற்பகுதியில் பெரியார் ஈவேரா, அண்ணாதுரை ஆகியோர்களின் பகுத்தறிவுக்கொள்கைகளினால் ஈர்க்கப்பட்ட சமூக சீர்திருத்தம் பேசும் இளைஞனாகத் தம் வாழ்வை ஆரம்பிக்கிறார். அப்போது அவருக்கு வயது 15. பின்னாளில் தமிழரசுக்கட்சியினது தீவிர ஆதரவாளனாகி தமிழர் உரிமைக்காகப்பேசுகின்றார். 1960 களில் கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளனாகி தமிழ் - சிங்களத் தொழிலாளர் ஒற்றுமைக்காக வாதிடுகிறார்.

பின்னர் இவர் 1960 களின் பின்பகுதியில் கம்யூனிஸ்ட் கட்சியில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட சித்தாந்தப்பிளவின் பின் சீனப்பிரிவுக் கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளரானார். 1970 களில் கம்யூனிஸ்ட் கட்சியின் போக்கிற்கு மாற்றாக எழுந்த தீவிர இடதுசாரி இயக்கங்களின் பால் கவரப்பட்டிருந்தார்.

'தீவிரம்' என்ற பண்பு சுபத்திரனின் இயற்பண்பு. எப்போதும் தான் விசுவசிக்கும் கொள்கையினது தீவிர செயற்பாட்டாளராக (Activist) விளங்கியவர். அவரது இப்பண்பு

அவருக்கு வாழ்க்கையில் பல சோதனைகளையும், வேதனைகளையும் தந்ததுடன் இழப்புக்களையும் கூட ஏற்படுத்தியது.

சுபத்திரனோடு பழகும் வாய்ப்பு 1950 களின் பிற்பகுதியிலிருந்து வாய்த்தமையினால் அவரது குணாதிசயங்களை அறியும் வாய்ப்பு எனக்குக்கிட்டியிருந்தது. ஆழ்ந்த மனிதாபிமானமும், குறிப்பாக ஏழை மக்கள் மீது நிறைந்த வாஞ்சையும் கொண்டிருந்தவர் அவர். சமூகக்கொடுமைகளைக் கண்ணுற்ற அவரது இதயம் எப்போதும் அதற்கு எதிரான ஒரு கொதிநிலையிலேயே இருந்தது. எதையும் விமர்சனக்கண்ணோடு அணுகும் அவர், தான் சார்ந்திருந்த அமைப்புகளையும் விமர்சிப்பவராகவே தோற்றம் தந்தார்.

ஒரு காலகட்டத்தில் மாசேதுங்சின் சித்தாந்தங்களினால் வெகுவாகக்கவரப்பட்டிருந்த அவர் அனைத்தும் மக்களுக்கே என்பதிலும் அந்த மக்கள் கீழ்மட்டத்தில் வாழும் தொழிலாள விவசாய மக்களே என்பதிலும் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். அவ்வகையில் தான் அறிந்த அனைத்தையும் மக்கள் சேவைக்குப் பயன்படுத்தினார். தனக்குக்கைவந்த மேடைப்பேச்சு, தர்க்கத்திறன், உரையாடல் வன்மை, கவி எழுதும் திறன், எழுத்தாற்றல் அனைத்தையும் மக்களின் சேவைக்கு அர்ப்பணித்தார். கொள்கைப் பிரசாரத்திற்குக் கவிதையை உபயோகித்தார். கருத்துக்களை வெளிப்படுத்தக் கவி அரங்கைப்பாவித்தார். அவரது கவிதைகளிற் காணப்படும் ஓசைநயம், எளிமை என்பன மக்களுக்கு அவை நன்கு புரியவேண்டும் என்ற நோக்கில் அமைந்தவையாகும். சுருங்கச்சொன்னால் கவிதை பற்றி அவர் கவலைப்படவில்லை. கவிதையின் பயன்பாடு பற்றியே சிந்தித்தார். மக்களே அவரின் பிரதான இலக்கு. மக்களை மாபெரும் சக்தியாகக்கண்ட அவர் மக்கள் சக்தி பற்றிக்கூறுகையில்

மக்கள் என்ற வைத்தியர்கள் தான்
எனது ஊமைக்கவிதைகளைப்
பேசச் செய்தனர்.
குருட்டுக் கவிதைகளைப்
பார்க்கச் செய்தனர்.
செவிட்டுக் கவிதைகளைக்
கேட்கச் செய்தனர்.
முடக்கவிதைகளை
நடக்கச் செய்தனர்
கோழைக் கவிதைகளைப்
போராடச் செய்தனர்
நண்பர்களே !
உங்கள் கவிதைகளையும்
அந்த வைத்தியனிடம்
அனுப்பி வையுங்கள்

என்று பாடுகிறார்.

ஒரு கோடிக்கவிதைகள் பாடுவதை விட உரிமைப்போரில் சிந்தும் ஒரு துளி ரத்தம் மேல் என்றும் பாடுகிறார்.

1960களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுர கந்தசுவாமி கோயிலுக்குள் புக தாழ்த்தப்பட்ட மக்கள் போராட்டம் நடத்திய போது அவர்களின் போராட்டத்தை ஆதரித்து அவர்க்கு உற்சாகம் தரும் முகமாக அவரால் வெளியிடப்பட்ட 'இரத்தக்கடன்' எனும் நூல் முக்கியமான ஒரு நூல். கடுகு சிறிதாயினும் காரம் பெரிது என்பது போல் அதன் மூர்த்தம் சிறிதாயினும் கீர்த்தி பெரிது. அதில் அவர் பாடிய

சாதித் தமிழருடன் வாழும் தமிழன் - ஓர்
பாதித்தமிழனடா

என்ற பாடலும் 'சங்கானைக்கென் வணக்கம்' என்ற பாடலும் மக்கள் மத்தியில் புகழ் பெற்ற பாடல்களாகும். சங்கானைதான் அன்றைய அப்போராட்டத்தின் இதயமாக இருந்தது. சங்கானையைக்குறிப்பிட்டு யாழ்ப்பாணத்தில் ஒரு வியட்நாம் என்று பாராளுமன்றத்திற் கூட அன்று பேசப்பட்டதாக ஞாபகம்.

அவர் கவிதைகள் அடக்கப்படும் மக்கள் குரலாக ஒலித்தன. அடக்கப்படும் தொழிலாளர், அடக்கப்படும் தோட்டத்தொழிலாளர், அடக்கப்படும் சாதி, அடக்கப்படும் மாணவர், அடக்கப்படும் இனம் என்று அடக்கப்படும் மக்கள் பக்கம் நின்று அவர் கவிதைகள் பேசின.

சமூகக் கொடுமைகளை விமர்சனம் செய்யும் அவரது கவிதைகளில் கிண்டலும், கேலியும், கோப உணர்வும் நிறைந்து காணப்படுகின்றன.

மக்களுள் ஒருவராக நின்று பாடும் இயல்பு சுபத்திரனுடைய இயல்பாகும்.

இவரது கவிதைகளை மறைந்த கவிஞர் சாருமதி அவர்கள் தனது சிறப்புப்பட்டப்படிப்புக்கு பேராசிரியர் கைலாசபதியின் கீழ் ஆய்வு செய்துள்ளார். அவ் ஆய்வு அச்சில் வெளிவருமாயின் சுபத்திரன் பற்றிய செய்திகள் மேலும் தெரியவரும்.

மட்டக்களப்பின் எழுத்திலக்கியக்கவிதா பாரம்பரியத்தில் சமூக உணர்வுள்ள கவிதைகளைப்பாடிய முதல்வராக இலக்கிய கலாநிதி புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் திகழ்கிறார். சமூக விமர்சனக்கவிதைகளில் புலவர்மணியின் வாரிசாக சுபத்திரன் திகழ்கிறார். இருவரும் இருவேறு சித்தாந்தங்களினால் கவரப்பட்டவர்கள். எனினும் இருவரது கவிதைகளையும் அருகருகே வைத்துப்பார்க்கையில் புலவர்மணியின் சமூகவிமர்சனக்கவிதை வாரிசு சுபத்திரன் என்று சொல்வதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை. இது தனியாக எழுதப்படவேண்டிய ஒரு விடயமாகும்.


நல்வாழ்த்துக்கள்

அழகிற்சிறந்த தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்
நம்பிக்கை
நாணயம்
நேர்மை
இன்றே நாடுங்கள்

ஜோதி
நகை மாளிகை

இல.78, பிரதான வீதி,
மட்டக்களப்பு.

வாழ்த்துகின்றோம்



மட்டக்களப்பு
மூக்குக்கண்ணாடி
ஸ்தாபனம்

கொம்பியூட்டர் கண் பரிசோதனை செய்து 7 நாட்களில் கண்ணாடி வழங்கப்படும்.

கிளைகள்

**75 B,** *முனைவீதி, மட்டக்களப்பு.*
**195,** *திருமலை வீதி, மட்டக்களப்பு.*
*வைத்தியசாலை, கல்முனை.*
**51 B,** *பிரதானவீதி, திருகோணமலை.*

69A, முனைவீதி, மட்டக்களப்பு
(தனியார் பஸ் நிலையம் முன்பாக)
T.P : 065-22571,23704 Fax : 22571

# மட்டக்களப்பில் பறங்கியர் இனம்



*இரா.துரைரத்தினம்*

பல்லின கலாசார பாரம்பரியங்களைக் கொண்ட மட்டக்களப்பு மாநிலத்தில் பறங்கி இனத்தின் சமூக கலாசாரத்தன்மைகள் தனித்துவமானவை.

மட்டக்களப்பு மாவட்ட சனத்தொகையில் 0.82 % வீதத்தினராக வாழும் பறங்கி இனத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் தமிழ், முஸ்லீம் சமூகங்களுடன் சங்கமமாகி தமது சமூக அடையாளத்தை இழந்து விடாது இன்னமும் அதை நிலைநிறுத்தி நிற்பது பெரும் சாதனை தான்.

கி.பி. 1505 ம் ஆண்டில் இலங்கையின் காலித்துறைமுகத்தை வந்தடைந்த போர்த்துக்கேயர் அங்கிருந்து கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களை வந்தடைந்ததாக வரலாறு கூறுகிறது.

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின் தொழில் நிமித்தமும், வேறுகாரணங்களாலும் இங்கு குடியேறிய ஒரு சில குடும்பங்களின் பரம்பரையினரே மட்டக்களப்பில் வாழும் பறங்கி இனத்தவர்களாவர்.

கி.பி.1658 ம் ஆண்டு போர்த்துக்கேயரின் ஆட்சி வீழ்ச்சி கண்டு அவர்கள் நாட்டை விட்டு வெளியேறிய போதும் மூன்று, நான்கு சந்ததிகளுக்கு மேலாக இங்கு வாழ்ந்து இந்த மண்ணுடன் தம்மைப்பிணைத்துக் கொண்டவர்களால் எப்படி வெளியேற முடியும். இலங்கையில் பிறந்த பறங்கி இனத்தவர்கள் தமது வாழ்விடமாக தாம் பிறந்த இம் மண்ணையே நிலைநிறுத்திக் கொண்டனர். கடந்த 500 ஆண்டுகளுக்கு மேலாக மட்டக்களப்பில் வாழ்ந்து வரும் பறங்கி இனச்சமூகம் இம்மாநிலத்தின் வேருடனும், வேரடி மண்ணுடனும் எவ்வாறு பிணைந்திருக்கின்றனர் என்பது ஆய்வுக்குரியதாகும்.

இக்கட்டுரை பறங்கி இனச்சமூகம் பற்றிய ஆய்வாக அல்லாமல் இம்மண்ணில் 15 தலைமுறைகளுக்கு மேல்வாழும் ஒரு சமூகத்தின் வாழ்வியல் பற்றிய மேலோட்டமான கண்ணோட்டமாக அமைகிறது. எதிர்காலத்தில் ஆய்வு செய்ய விரும்புபவர்களுக்கு சில விடயங்களைத் தொட்டுக் காட்ட விளைகிறது.

போர்த்துக்கேயர் இலங்கையைக்கைப்பற்றி சுமார் 150 ஆண்டுகள் ஆட்சி செய்த காலத்தில் தொழில் நிமித்தம் இங்கு குடியேறிய ஒரு சில குடும்பங்களின் பரம்பரையினரே மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களில் வாழும் பறங்கி இனத்தவர்களாகும். காலி, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள பறங்கி இனத்தவர்களில் பெரும்பாலானவர்கள் சிங்கள சமூகத்தில் கலப்புத் திருமணம் செய்து கொண்டதால் அவர்களது பரம்பரை இன்று பெரும்பான்மை சமூகத்துடன் சங்கமமாகி விட்டது.

ஆனாலும் கொழும்பில் டச்சுப்பறங்கி இனத்தவர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என கூறிக்கொள்ளும் "டீ ஜோங்க்" குடும்பத்தினர் ஆங்கில மொழியையே தமதுதொடர்பு மொழியாகக் கருதுகின்றனர். தமக்கிடையில் ஆங்கிலத்திலேயே உரையாடுகின்றனர். இவர்களுக்கு ஆங்கிலத்தையும், சிங்களத்தையும் தவிர வேறு பாஷைகள் தெரியாது. ஆனால் மட்டக்களப்பில் அவ்வாறு இல்லை என்று தான் கூற வேண்டும். பெரும்பாலானவர்கள் தமது மொழியைப் பேசக் கற்றுக் கொள்கின்றனர்.

ஒரு சில கலப்புத்திருமணங்கள் நடைபெற்ற போதிலும் பெரும்பாலான பறங்கி இனத்தவர்கள் தங்கள் இனத்தவர்களையே திருமணம் செய்து கொள்ளும் சுயகட்டுப்பாட்டை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

பெரும்பான்மை இனத்துடன் மிகச்சிறுபான்மை இனத்தவர் கலப்புத்திருமணம் செய்வதால் அச்சிறுபான்மை இனம் தன் அடையாளத்தைத் தொலைத்து விடும் என்பதே யதார்த்தமாகும்.

மட்டக்களப்பிலும் அவ்வாறு கலப்புத்திருமணங்கள் பறங்கி இனத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தி இருக்கின்றன, என்பதை புள்ளி விபரங்கள் மூலமும் அறியமுடிகிறது. 1963 ல் 1.02 வீதமாக இருந்த பறங்கி இனம் 1971 ல் 0.93 வீதமாகவும், 1981 ல் 0.82 வீதமாகவும் காணப்பட்டது. 1981 க்குப்பின் குடிசன மதிப்பீடு எடுக்கப்படவில்லையாயினும், கடந்த 19 வருடகாலத்தில் இந்தவீதம் இன்னும் குறைந்திருப்பதாகவே புள்ளிவிபர ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பறங்கி இனத்தைச்சேர்ந்த ஒருவர் தமிழரையோ அல்லது சிங்களவரையோ திருமணம் முடித்தால் அவர்களின் பிள்ளைகள் தம்மைப்பறங்கி இனத்தவர் என அடையாளம் காட்டிக் கொள்வதில்லை, தம்மைத்தமிழராகவோ, சிங்களவராகவோ அடையாளம் காட்டிக் கொள்கின்றனர். இது எந்த ஒரு நாட்டிலும் கலப்புத்திருமணங்களில் சிறுபான்மையினருக்கு ஏற்படக்கூடிய பாதிப்புத்தான்.

மட்டக்களப்புப்பிரதேசத்தில் உள்ள இன வேறுபாடுகளுக்குள் தங்களது இன மேம்பாட்டை பிரித்துக் காட்டுவதில், அதைக்கட்டிக் காப்பதில் பறங்கிஇன மூதாதையர் காட்டும் ஆர்வம் பாராட்டப்படவேண்டியது.

## மொழி

மட்டக்களப்பு பறங்கிஇனத்தவர்களில் பெரும்பாலானவர்கள் தமது வீடுகளில் அவர்களது மொழியிலேயே உரையாடுகின்றனர்.

ஆனால் அந்த மொழி போர்த்துக்கல் நாட்டில் பேசப்படும் மொழியை விட சற்று வித்தியாசமானது எனக்கூறப்படுகிறது. கடந்த சில வருடங்களுக்கு முதல் போர்த்துக்கல் நாட்டிலிருந்து வந்த மொழி ஆராய்ச்சியாளர் ஒருவர் இங்குள்ள பறங்கிஇனத்தவர்களுடன் உரையாடிய பின் கருத்துத் தெரிவிக்கையில் இங்குள்ளவர்கள் பேசும் மொழிக்கும், போர்த்துக்கல்நாட்டைச் சேர்ந்தவர்கள் இப்போது பேசும் மொழிக்குமிடையில் நிறைய வித்தியாசம் உண்டு என தெரிவித்திருக்கிறார்.

கடந்த 500 வருடங்களுக்கு மேலாக மட்டக்களப்புப்பறங்கி இனத்தவர் வாய்மொழியாகவே தங்கள் மொழியை வளர்த்து வந்திருக்கிறார்கள். எழுத்து மூலம் தமது இளம் சந்ததியினருக்குத் தமது மொழியை கற்பிப்பதற்கு எந்த வாய்ப்புவசதியும் இல்லாத போதும் வெறும் வாய்மொழியாக மட்டும் கடந்த ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக 15 தலைமுறைகளாகப் பேணி வந்திருக்கிறார்கள் என்பது பெரும் சாதனைதான்.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பியநாடுகளுக்குச் சென்ற இலங்கைத்தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் பிள்ளைகள் தமிழ்மொழியைப்பேச, எழுதக்கற்றுக் கொள்ளவில்லை, ஆங்கில, ஐரோப்பியமொழிகளைத்தவிர தமிழ் அவர்களுக்குப் பேச வராது எனப் பெருமையாகக் கூறிவருகின்றனர்.

ஐரோப்பாவில் வாழும் இலங்கைத் தமிழர்களின் 2 வது தலைமுறையே தமிழ்மொழி தெரியாத தமிழர்களாக வாழ்கின்ற போது 15, 20 தலைமுறைகளாகத் தமது மொழியை, பாரம்பரிய கலாசார முறைகளைக் காப்பாற்றி வருகின்ற பறங்கி இனத்தவர்களின் இனப்பற்றையும், மொழிப்பற்றையும், ஐரோப்பா போன்ற நாடுகளில்

குடியேறியிருக்கும் இலங்கைத்தமிழர்கள் முன்உதாரணமாகக் கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பில் பறங்கிஇனத்தவர்களால் பேசப்படும் மொழிக்கும், கோவா, தாமோவா, திம்பு, மலாயா, சிங்கப்பூர் ஆகிய நகரங்களில் உள்ள ஒரு பகுதி மக்களால் பேசப்படும் மொழிக்குமிடையே ஒற்றுமை காணப்படுவதாக மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் இது பற்றித் தெளிவான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப படவில்லையாதலால் முடிந்த முடிவாக எதையும் கூற முடியாது.

மட்டக்களப்பில் பறங்கிஇனத்தவர்கள் தமது வீடுகளில் தாய்மொழியைப்பேசினாலும் ஆரம்ப வகுப்பு முதல் உயர்வகுப்பு வரை சிங்களத்தை அல்லது தமிழையே கற்கின்றனர். இது அவர்களுக்கு ஒரு நிர்ப்பந்தம் என்று தான் சொல்ல வேண்டும்.

1983 ம் ஆண்டிற்கு முதல் பெரும்பாலான பறங்கி இனத்தவர்கள் சிங்களமொழி மூலமே கல்வி கற்றனர். 1960 ம் ஆண்டிற்குப்பின் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட பின் சிங்களத்தைக்கற்றவர்களுக்குத்தான் அரச நியமனங்கள், பதவி உயர்வுகள் வழங்கப்பட்ட வேளையில் தமது கல்வி ஊடகமொழியாக அவர்கள் சிங்களத்தைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லை. மிகச்சிலரே தாய்மொழி மூலம் கற்றனர். ஆனால் 1983 க்குப்பின்னர் சிங்களமொழி மூலம் மட்டக்களப்பில் கல்விகற்கும் வாய்ப்பு இல்லாமல் போனதையடுத்து தமிழ்மொழியில் கல்வி கற்கத் தொடங்கினர்.

பறங்கி இனத்தவர்களைப்பொறுத்தவரை தமிழையோ, சிங்களத்தையோ கற்பது தமது பொருளாதாரமேம்பாட்டிற்காகவும், தொழில் வாய்ப்புகளுக்காகவும், ஏனைய சமூகங்களுடனான தொடர்புகளுக்காகவுமேயாகும்.

அவர்கள் தமிழையோ, சிங்களத்தையோ கற்பது ஒரு இயந்திரத்தன்மையானதே அன்றி ஏனைய சமூகங்களின் பண்பாட்டு கலாசாரங்களுடன் ஒன்றுபட வேண்டும், இணைய வேண்டும் என்பதற்காகவோ அல்லது இங்குள்ள ஏனைய சமூகத்தவர்களின் இலக்கியங்களை கலாசாரங்களை அறிய வேண்டும் என்பதற்காகவோ அல்ல, வெறும் இயந்திரத்தன்மையுடன் வேறு மொழிகளைக்கற்கின்றனர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் பறங்கி இனத்தவர்கள் தமிழ்மொழியைக் கற்றிருக்கின்ற போதிலும், தமிழ் இலக்கிய இலக்கணம் பற்றி யாரும் ஆர்வம் காட்டுவதில்லை.

இவர்கள் கலப்புத்திருமணம் புரிந்துள்ளனராயினும் அவர்களது மனதில் தமது பண்பாடும் பழக்கவழக்கங்களுமே கூடுதலாக நிறைந்திருப்பது போல வேறு மொழியைக்கற்றாலும் அம்மொழிகளில் பெரும் பற்றை அவர்கள் வைப்பதில்லை.

கலாசார சமயச்சடங்குகள்

கத்தோலிக்கசமயத்தைச் சார்ந்த அவர்கள் அச்சமய முறைப்படி குழந்தை பிறந்ததும் தமது பரம்பரைப் பெயர் ஒன்றை பிள்ளைக்குச்சூட்டுவர். ஞானஸ்ஞானம் பெறுவது தொடக்கம் பெரும்பாலான இவர்களது சடங்குகள் கத்தோலிக்க சமயச்சடங்குகளிலிருந்து வேறுபடவில்லை. ஆனால் திருமணம், மரணச்சடங்கு என்பன பறங்கி இனத்தவர்கள் தனித்துவமாகவே நடாத்துகின்றனர்.

பறங்கி இனத்தவர்கள் சிங்களவர்களையோ, தமிழர்களையோ கலப்புத்திருமணம் முடிப்பது உண்மை தான். ஆயினும் அவர்கள் தமது நியாயமான கொள்கைகளை விட்டுக் கொடுப்பதில்லை. வேறு இனத்தை, மதத்தைச் சேர்ந்த ஒருவரை கலப்புத்திருமணம் முடிப்பதாக இருந்தாலும் தங்களுடைய மதத்தைத்தழுவிய பின்பே திருமணம் முடிப்பதற்கு வற்புறுத்துவர். அவ்வாறு தமது மதத்தைச்சாராதவர்களை தமது சமூகத்துடன் ஏற்றுக் கொள்வது குறைவு.

அவர்களது திருமண ஆராதனை தேவாலயத்தில் போர்த்துக்கேய மொழியிலேயே நடைபெறும். தமது தாய் மொழியிலேயே கணவனும், மனைவியும் தேவாலயத்தில் ஆலயகுரு முன் தாம் ஒருவருக்கு ஒருவர் துரோகம் இழைக்காது ஒற்றுமையாக வாழ்வோம் என சத்திய வாக்கை வழங்குவர்.

திருமணத்தின் போது ஆணும் பெண்ணும் பாரம்பரிய உடையையே அணிந்திருப்பர். மணமகன்

கறுப்பு நீளக்காற்சட்டை, வெள்ளைக் கோட் அல்லது வெள்ளைக்காற்சட்டை கறுப்புக்கோட் அணிவர், மணமகள் வெள்ளை நிறத்திலான நீளச்சட்டை அணிவர். திருமண ஆராதனை மாலை வேளையிலேயே நடைபெறும். ஆராதனை முடிந்ததும் மணமகள் வீட்டிற்கே செல்வர்.

அன்று இரவு மணமகள் வீட்டில் மதுபானம், சிற்றுண்டி வகைகளுடன் இரவு போசனமும் இடம்பெறும். திருமண விழாவில் முக்கியமான விடயம் "பொல்க்கா" எனப்படும் பாரம்பரிய நடனமாகும், பொல்க்கா நடனத்தை ஆடுவதற்காக தங்களது சோடிகளை மிகக்கவனமாகத் தெரிவு செய்வர். இளைஞர், யுவதிகள், நடுத்தர வயதினர், வயது முதிர்ந்தோர் என அணி அணியாக இந்த நடனத்தை ஆடுவர்.

இந்நடனத்தின் போது "கோரஞ்ச நீதா சுர சுராமா" என்ற பாடலைப் பாடுவர். பாரம்பரிய இசை, நடனம், விருந்து இன்றி எந்தத்திருமணமும் நிறைவடைவதில்லை. மணமகனும், மணமகளும் இந்நடனத்தில் சிறிது நேரம் கலந்து விட்டு சென்று விடுவர். ஆனால் இளம் சோடிகளின் நடனம் நள்ளிரவுக்குப்பின்னும் தொடரும்.

இசைக்கருவிகள் வயலின், டமலின், மரக்காஸ் என்பனவாகும். ஒவ்வொரு நடன அசைவுக்கும் ஒவ்வொரு இசை உண்டு. இதனை "படா" என அவர்களது பாஷையில் குறிப்பிடுவர். ஒவ்வொரு இளைஞர், யுவதிகளும் நடனத்தைக் கற்றுக் கொள்வதிலும், ஆடுவதிலும் ஆர்வம் செலுத்த வேண்டும் என்பது அவர்களது முதியோரின் வற்புறுத்தலுமாகும்.

இதை அவர்களது சடங்கு ஒன்றாகவே கருதுகின்றனர். இது காலங்காலமாகப் பேணப்பட வேண்டும் என்பது அவர்களது மரபு வழியான நம்பிக்கையாகும். திருமண விழாக்களில் பெண்கள் அனைவரும் சட்டையே அணிந்திருப்பர், ஆண்கள் நீளக்காற்சட்டை கோட் அணிந்திருப்பர்.

மரணச்சடங்குகள்

மரணச்சடங்குகள் கத்தோலிக்கமத முறைப்படியே நடைபெறும். ஆனால் மரண ஊர்வலங்களில் செபங்கள் யாவும் போர்த்துக்கேய மொழியிலேயே செய்வர். மட்டக்களப்புப்பகுதியில் போர்த்துக்கேயமொழியில் ஆராதனைகளையும், செபங்களையும் செய்யக்கூடியவர்கள் ஒரு சிலரே இருக்கின்றனர். மரண ஊர்வலங்களில் அவர்கள் முன்னே செபம் சொல்லிச்செல்லும் போது பின்னே சவ ஊர்வலம் செல்லும்.

தொழில்


மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான தொழில் விவசாயம் எனினும் பறங்கி இனத்தவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவது மிகக்குறைவு, காரணம் அவர்கள் நகரை அண்டிய பகுதிகளிலும், கடற்கரைப்பிரதேசங்களிலுமே குடியேறியுள்ளனர்.

டச்பார், பார்வீதி, சின்ன உப்போடை பகுதிகளில் உள்ள பறங்கி இனத்தவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர், சிலர் தச்சுத் தொழில் செய்கின்றனர். தச்சுத் தொழிலில் சிறந்த விற்பன்னர்களாக அவர்கள் விளங்குகின்றனர். சிறந்த கைவேலைப்பாடமைந்த தளபாடங்களைச் செய்யக்கூடிய திறமை வாய்ந்தவர்களாக விளங்குவது அவர்களின் சமூகத்திற்குப் பெருமை தரும் விடயமாகும். சிலர் கல்வித்துறையில் முன்னேறி அரச உத்தியோகங்களையும் பார்க்கின்றனர். சிறந்த விளையாட்டு வீரர்களாகவும் திகழும் இவர்களில் சிலர் படையினராகவும் உள்ளனர்.

இறுதியாக ஒன்றைக்குறிப்பிட வேண்டும் ; பறங்கி இனத்தவர்களின் வாழ்க்கை வட்டம், சமூக கலாசார விழுமியங்கள், மொழியியல் தன்மை என்பன ஆராயப்படுவதன் மூலம் செழிப்பான சமுதாயம் ஒன்றைப்பற்றி நாம் கண்டுகொள்ளமுடியும். இவர்களின் பிள்ளைகளின் வேற்று மொழிக்கல்வியினால் சுயஅடையாளங்களை மட்டுமல்ல தாய்மொழி தெரியாத முகமிழந்த சமூகமாகவே மாறக்கூடிய பரிதாபநிலையே காணப்படுகிறது. இவர்களது பாரம்பரிய தாய்மொழியை எதிர்காலச்சந்ததியினரும் மறந்து விடாது கற்றுக் கொள்ள போர்த்துக்கேய ஆரம்ப மொழிப்பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டும். இதன் மூலமே அம்மொழியைக் காப்பாற்ற முடியும்.

# மட்டக்களப்பு பிரதேச

# சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி



செ.யோகராசா

சிறுவர் இலக்கியத்தினுள் முதன்மை பெறும் சிறுவர் பாடல் முயற்சி ஈழத்திலேயே முதன் முதல் நிகழ்ந்துள்ளதென்பதும் அவ்விதத்தில் (கல்வி அதிகாரியாகவிருந்த க.அருள்நந்தி அவர்களினால் தொகுக்கப்பட்டு) 1935 இல் வெளிவந்த 'பிள்ளைப்பாட்டு' தொகுப்பு தமிழில் வெளிவந்த முதற்தொகுப்பாகின்றதென்பதும் இலக்கிய ஆர்வலர் பலருமறிந்த விடயங்களாம். இத்தொகுப்பினுள் இடம்பெற்ற கவிஞர்களுள் பலரும் சிறந்த சிறுவர் பாடல்கள் இயற்றிய முன்னோடியான சோமசுந்தரப்புலவரும் யாழ்ப்பாணப்பிரதேசஞ் சார்ந்தவர்களாக அமைய, மட்டக்களப்புப் பிரதேச சிறுவர் பாடல் முன்னோடி யார் என்பது பற்றிச் சிந்தித்துப்பார்ப்பது பொருத்தமானது.

சில வருடங்களுக்கு முன்னர் 'மட்டக்களப்புப் பிரதேசத்தில் குழந்தைக்கவிதை வளர்ச்சி ' (மாஸ்டர் சிவலிங்கம் மணிவிழா மலர் - 1994) பற்றி எழுதிய கட்டுரையொன்றிலே மட்டக்களப்புப் பிரதேச சிறுவர் பாடல் முன்னோடிகளாக (சமகாலத்தில் எழுதியவர்களாகவுள்ள) ஆரையூர் அமரன், திமிலைத்துமிலன் ஆகியோரை இனங்கண்டு குறிப்பிட்டிருந்தேன். ஆயினும் இக்கவிஞர்களுக்கு முன்னரே எஸ் . இ . கமலநாதன் என்பவர் சிறுவர் பாடல்கள் எழுதியுள்ளதாக அண்மையில் அறிய முடிந்தது. எனவே இவரது சிறுவர் பாடல்கள் பற்றிக்கவனிப்பது பயனுடைய முயற்சியாகும். இதற்கு அனுசரணையாக சிறுவர் பாடல்களின் தனித்துவமான பண்புகள் பற்றி முதலில் நினைவு கூர்வது நன்று.

சிறுவர் பாடல்கள்

1. சிறுவர்களுக்கு விருப்பமான பொருள் பற்றியதாக (எடு : பறவை, மிருகம், பூக்கள்) அமைய வேண்டும்.
2. இன்னோசையும் இனிய சந்தமும் இசைத்தன்மையும் இடம்பெற வேண்டும்.
3. சொற்கள் எளிமையுடனும், இயன்றவரை சொற்புணர்ச்சியின்றியும் இடம்பெற வேண்டும்.
4. இனிமைக்கு ஊறு தரும் யாப்பமைதி தவிர்க்கப்பட வேண்டும்.
5. கவிஞர் குழந்தை உளவியல் பற்றிய அறிவுடையவராயிருக்க வேண்டும்.

மேற்கூறிய பண்புகளின் அடிப்படையில் எஸ்.இ.கமலநாதனின் சிறுவர் பாடல்கள் பற்றி சுருக்கமாக அவதானிப்போம்.

கவிஞரது பாடல்களுள் ஒருசில சிறுவர்களுக்கு நன்கு விருப்பமான மிருகங்கள் பற்றியன. இத்தகையவற்றுள் ஒன்றான 'புவனாவின்

பூனைக்குட்டி' என்ற பாடல் (தினகரன் 19-09-1948) பின்வருமாறு ஆரம்பிக்கிறது.

"புவனா வளர்த்த பூனைக்குட்டி
துள்ளி ஆடுதே - அதைப்
பார்த்திருந்த எலிகளெல்லாம் -
அள்ளி ஓடுதே"

சிறுவர்களுக்கு விருப்பமான மற்றொரு படைப்பு தின்பண்டம் பற்றியது. அது இரு பாடல்கள் மட்டும் கொண்டது :

"அண்ணா அக்கா பலகாரம்
ஆச்சி தந்த பலகாரம்
இ,ஈ,உ,ஊ என்றதால்
எனக்குத் தந்த பலகாரம்

அண்ணா அக்கா வாருங்கோ
ஆச்சியிடம் ஓடுங்கோ
இ,ஈ,உ,ஊ என்னுங்கோ
இனிய பலகாரம் தின்னுங்கோ"

(ஜூலை 1948)

சிறுவர் பாடல்கள் எழுதுவோர் பாடல்கள் ஊடே சிறுவர்களது மொழி ஆற்றல், எண் ஆற்றல் என்பவற்றை விருத்தி செய்ய விழைவதுண்டு. மேலுள்ள பாடலிலும் சிறுவரது மொழியாற்றலை வளர்க்கும் நோக்கு வெளிப்படுவது கவனிக்கத்தக்கது.

தவிர, கவிஞரது பாடல்களிலே பொதுவாக மோனையை விட, எதுகை முதன்மை பெறுவதனையும் அது இயல்பானதாகவும் பொருத்தமானதாகவும் அதிகளவிலும் இடம்பெறுவதனையும் அவதானிக்க முடியும். எ-டு :

"சின்னச் சின்னக் காலை வைத்து
மெல்லப் போகுதே - சோறு
தின்ன வந்த எலியை எல்லாம்
கொல்லப் போகுதே.

வட்ட வட்டக் கண்ணை அது
வெட்டிப் பார்க்குதே - சட்டி
பெட்டிக்குள் இருந்த எலிகள்
ஓட்டிப் பார்க்குதே"

(புவனாவின் பூனைக்குட்டி)

மேற்கூறியவற்றினை விட, இவரது பாடல்களில் பிறிதொரு சிறப்புமுள்ளது. நாட்டார் (விளையாட்டுப்) பாடல்களைப்பின்பற்றி எழுதுகின்ற முயற்சியே அதுவாகும். எ-டு :

"கீச்சிக் கீச்சித் தம்பலம்
கீயா மாயாத் தம்பலம்
ஆச்சி வாயில் தம்பலம்
அப்பா கையில் சம்பளம்"

மேற்கூறிய பாடலின் தொடர்ச்சியும் இவ்விடத்தில் எடுத்தாளப்பட வேண்டியது. அது பின்வருமாறு :

"ஏய்த்துப் போட்டேன் ஆச்சியை
ஒழித்துப் போட்டேன் குச்சியை
ஆச்சி தோற்றுப் போச்சுதே
எனக்கு வெற்றி ஆச்சுதே"

மேலுள்ள பாடலிலே இறுதி ஈரடிகளும் கவனத்திற்குரியன. இவற்றில் பேச்சு மொழிப்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளமையும் (மூன்றாம் அடியில்) ஆச்சியை அஃறிணையாகக் கருதுவதும் சிறுவர்களின் மன உணர்வு இயல்பான முறையிலே வெளிப்படுவதனை உணர்த்தி நிற்கின்றன.

கவிஞர் நளினமான - இனிமையான - உயர்வான கற்பனையாற்றலும் அதற்கேற்ற மொழியாட்சியும் கைவரப்பெற்றவரென்பதற்கு குழந்தை பற்றி அவரெழுதியதொரு பாடல் ஓரளவு சான்று பகர்கின்றது. 'இம்மையில் இன்பம்' என்ற அப்பாடலின் சில பகுதிகள் இவ்வாறு அமைந்துள்ளன.

"தேனிலே தோய்த் தெடுத்த
தீஞ்சுவைக் கீதமேற்றி
மேனி சிலுக்க வைத்தாய் - குழந்தாய்
நெஞ்சு கனிய வைத்தாய்

(குழந்தாய்)

கரும்பின் சுவை அமுதும்
கம்பன் கவி அமுதும்
அரும்பு முன் புன்னகை தான் -
குழந்தாய்
இம்மையில் இன்பமடி "

(குழந்தாய்)

பொதுவாகச் சிறுவர் பாடல்களில் போதனை இடம்பெறுதலென்பது தவிர்க்க இயலாததாகி விட்டது. இக்கவிஞர் பாடல்களிலும் (கிடைத்தவற்றுள்) கணிசமானவை அவ்வாற மைந்தவை.'உண்மையே சொல்லிடுவாய்' என்ற பாடலின் ஆரம்பப்பகுதி இதற்குதாரணமாக மட்டுமன்றி இன்னொரு காரணத்திற்காகவும் கவனத்திற்குரியது:

'சண்டைகள் வந்தாலும் - குழந்தாய்
குண்டுகள் வீழ்ந்தாலும்
மண்டையுடைந்தாலும் - குழந்தாய்
உண்மையே சொல்லிடுவாய்'

(1 - 6 - 1947)

மேலுள்ள பாடல் நாற்பதுகளளவில் ஜப்பானியர் குண்டு வீச்சு இலங்கையில் இடம்பெற்ற அச்சம் நிலவிய சூழலின் பிரதிபலிப்பாதல் வேண்டும்.

எஸ்.இ.கமலநாதனின் சிறுவர் பாடல்கள் அதிகம் இயற்றியதாக அறியமுடியவில்லை ஆயினும், அவரால் எழுதப்பட்டவை ஆய்வு நோக்கிலே கவனத்திற்குரியவை என்பது இதுவரை எடுத்துக்கூறியவற்றிலிருந்து புலப்படுமென்றே கருதுகின்றேன்.

எஸ்.இ.கமலநாதன் சிறுவர் பாடல் துறையிலே மட்டுமன்றி வேறு பல விதங்களிலும் குறிப்பாக கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் பல எழுதியவரென்ற விதத்தில் கவனத்திற் குள்ளாக்கப்படுவது அவசியமானது. எழுத்துலக நுழைவின் ஆரம்ப நிலையில் அவரெழுதிய 'தமிழ்' எழுத்துச்சீர்திருத்தம் (சுதந்திரன் 22-7-51 ல் வெளியான இவ்வாய்வுக்கட்டுரை பலரது கவனத்தைக்கவர்ந்தது என்பது ஒரு புறமிருக்க, ஈழத்தில் வெளியான முதல் ஆய்வுமாகலாம்) , பின்னர் எழுதிய 'இலக்கியத்திறனாய்வு' (கலை அமுதம் - 1964 அட்டாளைச்சேனை அ.மு.ஆ.ப.கலாசாலை) , அண்மையில் எழுதிய 'பாரத அம்மானை' (மட்டக்களப்பு பிரதேச சாகித்திய விழா நினைவுமலர் - 1993) என்றவாறு அத்தகைய பட்டியல் நீண்டு செல்லக்கூடியது என்புது குறிப்பிடத்தக்கது.

இதுவரை பேசப்பட்ட எஸ்.இ.கமலநாதன் என்பவர் வேறுயாருமல்லர். பலராலும் நன்கறியப்பட்ட வித்துவான் சா.இ. கமலநாதனே ஆவார்.


Best Compliments from

Saravanas Gold House
(& Fancy)

சரவணாஸ் நகை மாளிகை ( & பென்சி)
புத்தம் புதிய டிசைன்களில் 22 கரட்டில்
தங்க நகைகள் செய்து தரப்படும்.

26 1/2, Trincomalee Street,
Batticaloa.

Tel : 065 – 24631.



Best Compliments from

STUDIO JEYANI

80 நிமிட புகைப்பட சேவைக்கு

283, Trinco Road,
Batticaloa

T.P 065 – 23201

கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.

# மீட்டுத்தரும் தெய்வம்

எங்களூர் எல்லைக்
காளியம்மன் திருவிழா -

உச்சிக் கோவிலிலே
உறங்கும் ஒலிபெருக்கி உயிர் பெறும்
ஊர் சிலிர்க்கும் -

எலும்புப் பூசாரி
எல்லைக் காவலிட
மச்சம் தவிர்த்தெங்கும்
மனவலிமை தேங்கும்

இணையும் தனியுமாய்
கிழடுகள் தங்கள்
வயதைத் தொலைத்து
வசந்தத்தில் கூத்தடிக்க
எங்களூர் கன்னி கழியும் -

இளமையுள் அம்மனைத் தரிசிக்க
ஊருக்குள் புதுப்
பக்தர்கள் முளைப்பர் -

ரெட்டைக் கரத்தை கட்டிப்
பக்கத்து ஊர் திரளும்
உள்ளூர் வீடுகளோ
சத்திரங்க ளாய்த் திகழும் -

காவடியும் உடுக்கும்
சிந்தும் வேப்பிலையும்
காற்றில் கலந்து மணக்கும்

சூரியன் மட்டுமல்ல
மண்ணில்
சந்திரரும் மஞ்சள் குளிப்பதுண்டு -

கோவிலைச் சுற்றிக்
குச்சுக் கடைகள்
கூடவே நடுவில்
கூத்துக் களரி -

கூத்தில் சிருங்காரம் தலை நீட்ட
பூக்குவிந்து மனதெங்கும்
மருகும் யௌவனம்
விரகித் தவித்து
உரசத் துடிக்கும் -

கூத்தும் முடிய
மைதானம் வெறிச்சோடிக்
கடலைகள் கைவிட்ட
காகிதங்களாய்ப் பூக்கும் -

இரவில் தொலைத்ததைத்
தேடிப் பொறுக்கச் சிலர்
பகலில் வருவர் -

சில்லறையும், 'கிலிற்' தோடும்
தொங்கட்டானும் கிடைப்பதுண்டு -

இவைகளுக்கப்பால் சோலைக்குள்
'அது' தொலைந்த கணத்தை உணர்த்திப்
பூவும் வளையலும் சிந்திக் கிடக்கும் -

நேற்றுத் தொலைத்ததை மீட்டுத்தர
நாளையும் வந்து தொழுது நிற்பர்
இது
மீட்டுத்தரும் தெய்வமென்று நம்பி

*ச.அ.பாய்வா*
*திருமலை வீதி,*
*மட்டக்களப்பு*

# காத்தவராயன் கூத்து

## தோற்றமும் ஒப்பீடும்

### (ஆய்வு நோக்கு)

*க.சிவரெட்ணம்*

ஈழத்தமிழர் மத்தியில் பயில் நிலையிலுள்ள பல்வேறு வகையான நிகழ்கால வடிவங்களுள் ஒன்று காத்தவராயன் கூத்தாகும். இதனுடைய தோற்றமும் ஈழ, தென்னிந்திய காத்தவராயன்களுக்கிடையிலான ஒப்பீடும் சுவைபயப்பனவாகும்.

நாடகத்தோற்றத்தை ஆய்வு செய்த அறிஞர்கள் சடங்குகளினடிப்படையாகவே நாடகம் தோன்றியது என்பதனை விஞ்ஞானரீதியாக நிறுவியுள்ளனர். காத்தவராயன் நாடகமும் இதற்கு முரணானதாக இருக்க முடியாது. ஆனால் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை "சமயத்தொடர்புடைய ஆடல், பாடல்கள் கதை தழுவிய கூத்து வடிவங்களாகியமை போல் உடுக்கடி கதைகளும் காலப்போக்கிற் கூத்து வடிவங்களாகின. குறிப்பாக, வட இலங்கையில் ஆடப்படும் காத்தவராயன் கூத்து கோவலன் கூத்து என்பன உடுக்கடி கதைகளிலிருந்தே பிறந்தன'' எனக்கொள்ள இடமுண்டு என்பார்.

இவ்வாறு காத்தவராயன் கூத்தின் தோற்றத்தைத் தனியே உடுக்கடி கதையுடன் மட்டும் மையப்படுத்தி முடிவு காண்பது உலக நாடக வரலாற்றுடன் பொருத்தப்பாடானதாக அமையவில்லை.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் காத்தவராயன் நாடகம் பற்றி மூன்று விதமான படிநிலைகளை அவதானிக்கின்றார். சில இடங்களில் காத்தவராய சுவாமியாக உருக்கொண்டு ஆடும் ஒருவரை மேலும் உருவேற்றும் பொருட்டு அல்லது உற்சாகப்படுத்தும் பொருட்டு பூசாரிமாராற் காத்தவராயன் பாடல்கள் பாடப்படுகின்றன. இங்கு காத்தவராயன் பாடல்கள் முழுக்க முழுக்க ஒரு சமயச்சடங்காக நிகழ்த்தப்படுகின்றன.

இன்னும் சில இடங்களில் கோயில் சடங்கு வைபவங்களில் பலர் சூழ்ந்திருந்து கேட்க ஒருவரே உடுக்கடித்து தனியே தானே அபிநயித்து காத்தவராயன் பாடல்களைப்பாடி கதை விளக்கமளிப்பதைக்காணலாம். இங்கு சமயச்சடங்கிலிருந்து வளர்ச்சி பெற்ற கதாகாலேட்சபமாக ஒருவரே பல பாத்திரம் தாங்கி அபிநயிக்கும் தன்மையுடையதாகக் காத்தவராயன் கதை நிகழ்த்தப்படுவதைக்காணலாம்.

இன்னும் சில இடங்களில் கோயில் வெளியில் மேடை அமைத்து பலர் வேடமிட்டு பாத்திரங்கள் தாங்கி நடித்து கதை நிகழ்த்துவதைக் காணலாம். இங்கு சமயச்சடங்கிலிருந்து வேறுபட்டு ஒரு நாடகமாகக் காத்தவராயன் கதை மாறி விடுவதனைக்காணலாம். எனினும் இன்னும்

சமயத்தினின்றும் காத்தவராயன் கதை விடுபடவில்லை. கோயிற்சடங்கு, நேர்த்திக்கடன் இவற்றிற்காக நடாத்தும் நாடகமாகவே அது உள்ளது. முதலில் ஒருவரே எல்லாப்பாகத்தையும் நடித்துப்பின்னர் ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொருத்தர் நடிக்கத் தொடங்கிய தன்மையினை நாடகவளர்ச்சியில் காணலாம்.

இவ்வகையில் ஒரு நாடகத்தின் படிமுறை வளர்ச்சிப்போக்கினைக்காட்டும் தனித்துவம் கொண்டதொன்றாகக் காத்தான்கூத்து அமைந்துள்ளது. காத்தான்கூத்தினை நாடகநிலை நோக்குடன் இங்ஙனம் நோக்கல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

மட்டக்களப்பிலுள்ள வெல்லாவெளி எனும் இடத்தில் நிகழும் சடங்கினை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்றபோது மேலுள்ள காத்தவராயன் கூத்து வளர்ச்சியில் மேலும் இரு கண்ணிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பது தெரியவரும். எனவே காத்தவராயன் கூத்தின் பூரணமான படிநிலை வளர்ச்சியானது பின்வருமாறு இருந்திருக்கும்.

1. காத்தவராய சுவாமி உருக்கொண்டு ஆடுதலும் மேலும் உரு ஏற்றும் பொருட்டு காத்தவராய சுவாமி பாடல்கள் பாடப்படுவதுமான சமயச்சடங்கு.

2. காத்தவராய சுவாமியை மையப்படுத்திய ஐதீகக்கதையின் ஒரு பகுதி நிகழ்த்திக்காட்டுவதை அடிப்படையாகக் கொண்ட சமயச்சடங்கு.

3. பலர் சூழ்ந்திருந்து ஒருவரே உடுக்கடித்து காத்தவராயன் பாடல்களைப்பாடி கதை விளக்கம் அளிக்கும் நிலை. இது சடங்குளிலிருந்து வளர்ச்சி பெற்றது. கதாகாலேட்சபமாக ஒருவரே பல பாத்திரம் தாங்கி அபிநயிக்கும் தன்மை உடையதாகக் காத்தவராயன் கதை நிகழ்த்தப்படுவது.

4. மேடையமைத்துப் பாத்திரங்களை அடையாளப்படுத்தாமல் காத்தவராயன் பாடல்களைப்பாடி கும்மியாக ஆடுவது.

5. மேடையமைத்து பாத்திரங்களாக வேடமிட்டு நடித்துக்கதையை நிகழ்த்துவது. இது பொழுது போக்காக நிகழ்த்தப்பட்டாலும் கோயிற்சடங்கு நேர்த்திக்கடன் என்பவற்றிற்காகவும் நிகழ்த்தப்படுவதாக அறியக்கிடக்கின்றது.

இந்த 5 படிநிலையிலும் முதலாவது நிலையை வெல்லாவெளியில் நிகழும் 9 நாள் சடங்கில் இரண்டாம் நாளிலிருந்து ஏழாம்நாள் வரையும் பின்பு ஒன்பதாம் நாள் சடங்கிலும் அவதானிக்க முடியும். இரண்டாவது படிநிலையை 8 ம் நாள் சடங்கில் அவதானிக்கலாம்.

ஏனைய படிநிலைகள் புனிதத்தன்மை யிலிருந்து சிறிது விடுபட்டு நிற்பதால் அவற்றை சடங்கிலில்லாது சமூக அரங்க நிகழ்வுகளில் தான் அவதானிக்க முடியும்.

மூன்றாவது நிலையினை மட்டக்களப்பின் அரங்க நிகழ்வுகளில் காண முடியாது.

4 வது நிலையினை பழுகாமம், மண்டூர், வெல்லாவெளி பாலையடிவட்டை போன்ற இடங்களில் அவதானிக்க முடியும்.

5 வது நிலையே முதிர்ச்சியடைந்த காத்தான் கூத்து வடிமாக உள்ளது. இதனையே யாழ்ப்பாணம், முல்லைத்தீவு போன்ற இடங்களில் பார்க்கின்றோம்.

மட்டக்களப்பில் 4 வது நிலைக்கு வளர்ச்சியடைந்த காத்தான் கூத்து 5 வது நிலைக்கு செல்லாத நிலையினைக் காண்கின்றோம். இது ஏனெனில், இங்கு வளர்ச்சியடைந்து பிரபல்யம் பெற்றிருந்து வடமோடி, தென்மோடி என்பவை பூரணமான வெகுஜனக்கலை வடிவமாகத்திகழ்ந்தன. இவற்றின் செழுமைக்கு முன்னால் வேறு ஒரு கலை வடிவத்தின் தேவை பற்றி கலைப்படைப்பாளர்களால் சிந்திக்க முடியாமல் இருந்தது. இதே வேளை காத்தவராயனைப்பற்றிய ஐதீகக்கதையை வடமோடி வடிவத்திலோ அன்றி தென்மோடி வடிவத்திலோ படைத்திருக்க முடியும். அந்த முயற்சி தானும் இங்கு ஏற்படவில்லை. இதற்குக்காரணம் சமயரீதியான புனிதத்தன்மையில் இருந்து காத்தவராயன் விடுபடவில்லை. அவர் சமயத்துடனும், சடங்குடனும் பிணைக்கப்பட்டி ருந்தமையால் அந்த பிணைப்பை அறுத்து ஒரு

கலை வடிவத்திற்கான மூலக்கூறாக இதனைப்பயன்படுத்த படைப்பாளிகள் விரும்பவில்லை எனக்கூறலாம். கலாநிதி சி.மௌனகுரு "இந்திய தென்கிழக்காசிய இலங்கை சிங்கள மக்கள் நாடக வரலாறுகளினின்று நாம் முக்கியமான சில முடிவுகளுக்கு வரமுடிகிறது. அம்முடிவுகளை மூன்று பிரிவுக்குள் அடக்கலாம்.

1. அவ்வவ் நாட்டு சமயச்சடங்குகளும் நாடக வடிவங்களுக்குமிடையே நெருக்கமான உறவுகள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட சமயச்சடங்குகள் நாடகமாக உருவாகக்கூடிய சமூகச்சூழல் உருவாகுமிடத்து அச்சடங்குகளினின்று அவ்வவ் நாட்டுச்சூழல்களுக்கமைய நாடகங்கள் உருவாகின்றன.

2. நாடகங்களுக்கும் அவ்வவ் நாட்டுச்சமூக இயக்கங்களுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது.

3. வளர்ச்சியடைந்த நாடகவடிவங்களின் செல்வாக்கினால் வளர்ச்சியடையாத நாடகவடிவங்கள் சில மாற்றங்களைப் பெறுகின்றன. அல்லது வளர்ச்சி பெறாது அந்த அளவிலே நின்று விட்டன" என்கிறார்.

இக்காரணங்களினால்தான் காத்தவராயன் கூத்து மட்டக்களப்பில் வளர்ச்சியடையவில்லை போல் தெரிகிறது.

"வளர்ச்சியடைந்த கூத்தில் கூட சடங்கு முறையின் எச்சங்கள் ஒட்டிக்கொண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இக்காத்தான் கூத்து பொதுவாக மாரியம்மன் கோயில்களிலே ஆடப்படுகின்றது. கூத்திலே இடம்பெறும் தொட்டியத்துச்சின்னான், மாரியம்மன் முதலான பாத்திரங்கள் மேடையில் நடிக்கும் போதே உருவேறி ஆடும் நிகழ்வுகள் திருகோணமலை சல்லிச்சி அம்மன் ஆலயத்தில் இடம்பெறும் காத்தான் கூத்தில் அடிக்கடி நிகழல் வழக்கமாகும்" என கலாநிதி இ.பாலசுந்தரம் குறிப்பிடுவதையும் கவனத்தில் கொள்வது நன்று.

மட்/வெல்லாவெளி காத்தவராயனுடன் ஏனைய பிரதேச காத்தவராயன் ஒப்பீடு :-

வெல்லாவெளி காத்தவராயனை வடபகுதி, தென்னிந்திய காத்தவராயன்களுடன் ஒப்பிட முடியும். இம்மூன்று இடங்களிலும் காத்தவராயன் பிறப்புப்பற்றி வெவ்வேறுபட்ட கதைகளே நிலவுகின்றன.

வெல்லாவெளியில் வழங்கும் கதையானது உமை சிவனிடம் பாவவிமோசனம் பெறும் பொருட்டு நந்தவனம் அமைத்த போது அதனைக்காவல் செய்ய முருகன் காத்தவராயனாக அவதரித்தார் என வழங்குகின்றது. ஆனால் சி.கணபதிப்பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்ட 'மகமாரி திவ்விய கரணி' எனும் நூலில் உமை நந்தவனத்தைக்காவல் காக்க காத்தவராயன் என்பவனை நியமித்ததாகக் கூறப்படுகின்றது.

வடபகுதியில் வழங்கும் காத்தவராயன் பாடல்களில் மாரிக்காக சிவன் பெண்மானாகவும், விஷ்ணு ஆண்மானாகவும் உருவெடுத்து ஈன்ற மகவை மாரி எடுத்துத்தொட்டிலில் போட்டுத் தாலாட்டும் போது கங்கை ஆர்ப்பரித்துவர குழந்தை காலால் அதைத் தடுத்து நிறுத்தி விடுகின்றது. இதனால் இக்குழந்தைக்கு மாரி, காத்தான் எனப் பெயரிட்டாள் எனக்கூறப்படுகின்றது.

''தென்னிந்தியாவில் வழங்கும் காத்தவராயன் கதைகளில் முருகனே காத்தவராயனாக அவதாரம் எடுத்த செய்திகூறப்படுகிறது. காத்தவராயன் சண்டை எனும் காத்தமுத்து நாடகம் என்ற நூலில் சிவனது கட்டளைப்படி உமை பூலோகத்தில் பிறந்து நந்தவனங்களை அமைத்துத் தவம் இருந்த போது அந்த நந்தவனத்தில் காவலாளனாக முருகன் அவதரித்துக் காவல் காத்தமையால் 'காத்தவராயர்' என்ற பெயரைப் பெற்றதாகவும் கதை அமைந்துள்ளது'' என கலாநிதி இ.பாலசுந்தரம் குறிப்பிடுகின்றார்.

புகழேந்திப்புலவர் இயற்றிய 'காத்தவராய சுவாமி கதை' எனும் நூலில் சிவனால் நந்தவனக்காவலுக்காகப் படைக்கப்பட்டவர் தான் காத்தவராயன் எனக்கூறுகின்றது.

இவ்வாறு இவ் காத்தவராயன் பிறப்புப்பற்றி வேறுபாடு இருந்தபோதும் ஆரியப்பூமாலையை திருமணம் செய்தல், கழுவேறிச்சாகுதல் போன்ற அம்சங்களில் ஒத்துள்ளன.

இவற்றை அடிப்படையாகக்கொண்டு பார்க்கின்ற போது இது எந்தப்பிரதேசத்திலிருந்து மற்றப்பிரதேசங்களுக்குப் பரவலாக்கப்பட்டதென்றும் இக்கதை வேறுபாட்டிற்கான காரணம் என்ன என்பதும் ஆராயப்பட வேண்டியனவாக உள்ளன.

தென்னிந்தியாவின் தெலுங்குப் பிரதேசத்தில் நிகழ்ந்த ஒரு உண்மைச்சம்பவமாக இது இருக்கலாம். ஏனெனில் 'ராயர்' என்பது தெலுங்குப் பெயராகும்.

தமது சாதிக்கேற்பட்ட களங்கத்தையும் காத்தானைக் கொன்றதால் எழும் சாதி முரண்பாட்டையும் தவிர்க்கும் பொருட்டு புரோகிதர்களாலும் பிராமணர்களாலும் பிற உயர் சாதியினராலும் காத்தான் மேலோகத்துடன் தொடர்புபட்டவன் என்றும் அவன் கழுஏறிச்சாக வேண்டும் என்று சிவனின் சாபத்தை பெற்றதால்தான் இவ்வண்ணம் இறந்தான் என்றும் கதைகட்டி விட்டிருப்பர். இதனால் காத்தானின் குலம் காத்தானை தெய்வமாக எண்ணி வணங்கியிருப்பர்.

இவ்வாறு சமூகத்தில் குறைந்த அந்தஸ்தினையுடைய வரலாற்று நாயகர்கள் வீரர்கள் போன்றோரை அவர்களது இறப்பிற்குப்பின்பு அவர்களது குலம் தெய்வமாகக் கொள்ளும் போது உயர் குலத்தைச் சேர்ந்தவர்கள் அவதாரம் என்னும் கருத்து நிலையினூடாக அத்தெய்வங்களைத்தமது தெய்வங்களாக மாற்றி அவ்வழிபாட்டைத்தாமும் உள்வாங்கிக் கொள்கின்றனர். இதனால் ஒரு குறிப்பிட்ட குலதெய்வம் அனைவர்க்கும் பொதுவான தெய்வமாக மாறிவிடுகின்றது. காத்தானின் நிலையும் இதுதான்.

எனவே இக்காத்தவராயன் கதை தெலுங்குப்பிரதேசத்திலிருந்து சோழராட்சிக்காலத்தில் ஏனைய பிரதேசங்களுக்கும் சென்றிருக்க வேண்டும். ஏனெனில் சோழஅரசர்கள் பல்வேறு பிரதேசங்களையும் தமது ஆட்சிக்குட்படுத்திய போது ஏற்கனவே சோழர் ஆட்சியின் கீழ் இருந்தவர்கள் இச்சர்ப்பத்தில் சோழராட்சி அமைத்த இடங்களிலெல்லாம் சென்று குடியேறினர். இவ்வாறு ஈழத்தில் நடந்த குடியேற்றத்தை மட்டக்களப்புத்தமிழகம் மட்டக்களப்பு மான்மியம் என்பனவும் உறுதி செய்கின்றது.

"யாழ்ப்பாண அரசு 13 ம் நூற்றாண்டுக் குப்பின்னரே உருவாகின்றது. பேராசிரியர் கா.இந்திரபாலா தமிழர், கேரளர், கன்னடர், தெலுங்கர், சாவகர் இவ்வாறு பலர் ஒன்றாகக்கூடி அமைத்த அரசே யாழ்ப்பாண அரசு என்பர். மேற்குறிப்பிட்ட மக்கள் ஈழத்திற்கு வந்த போது அல்லது அவர்களுடன் தொடர்புடையோர் வந்த போது தம்நாட்டுப்பகுதிகளினின்று தம் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை இங்கு கொணர்ந்திருந்தனர். இத்தகைய வருகையின் போது தான் தமிழ்நாட்டுத் தெருக்கூத்து மரபும் யஷகானக் கூத்து மரபும், கதகளிக் கூத்து மரபும் ஈழம் வந்து சேர்ந்தன'' என கலாநிதி சி.மௌனகுரு குறிப்பிடுகின்றார். இது போன்றுதான் காத்தவராயன் வழிபாடும் ஈழத்திற்கு அறிமுகமாயிருக்க வேண்டும்.

ஈழத்தில் வடபகுதியில் காத்தவராயன் பிறப்பு வேறாக இருப்பதற்குக் காரணம் யாழ்ப்பாண சமூகச்சூழலேயாகும். ஆறுமுகநாவலரின் தீவிரமான சமயமறுமலர்ச்சி காரணமாக அம்மன் கோயில்கள் தேவி கோயில்களாக மாற்றமடைந்தன. இந்த மாற்றத்திற்குத்தக்க நடைமுறையில் இருக்கின்ற ஐதீகக்கதைகளும் மிக லாவகமாக மாற்றப்பட்டன. காத்தவராயன் பாடல்களைப்பாடிய புலவரும் காத்தவராயனின் பிறப்பை ஆகமத்தெய்வங்களான விஷ்ணுவுக்கும் சிவனுக்குமுரியதாக ஆக்கிவிட்டார்.

மட்டக்களப்பு நாவலரின் தாக்கத்திற்கு உட்படாததினால் இம்மாற்றம் நிகழாமல் தென்னிந்தியாவில் இருந்து வந்த அதே கருப்பொருளுடன் இயங்குகின்றது.

எனவே காத்தவராயன் பிறப்பு உயர்சாதியினரால் மாரியின் பிள்ளையாக முருகனின் அவதாரமாக ஆக்கப்பட ஆறுமுகநாவலரின் சமய மறுமலர்ச்சியினால் ஆகமத் தெய்வமாக்கப்படுகின்றது. எனவே இப்பிறப்பு வேறுபாடு இவ்வாறுதான் நிகழ்ந்ததாக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இவ்வாறு பிறப்பை மாற்றிய போதும் உயர் சாதியினர் காத்தவராயனை ஏற்றுக்கொள்வது கடினமாக இருந்திருக்கிறது. அங்கு உயர் சாதியினர் காத்தவராயன் கூத்தை ஆடுவது கிடையாது. அங்கு தச்சர்களே இதில் முக்கியம் பெறுவதாக அறியக்கிடக்கின்றது. இவர்கள் காளிகோயிலுக்குள் இருந்து கும்பம்

கொண்டுவந்து தான் நாடகத்தைத் தொடங்குவர். இக்கூத்தில் காத்தான் களுமரத்தில் தானாக ஏறுகின்றார். இது தென்னிந்தியக்கதைகளிலுமுள்ள ஒரு அம்சமாகும்.

மட்டக்களப்பில் உயர் சாதியினராகக் கொள்ளப்படும் வேளாளர், முக்குவர் என்போர்களில் வெல்லாவெளியில் முக்குவரே இச்சடங்குடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள் என்று ஏற்கனவே குறிப்பிட்டது நினைவிருக்கலாம். இங்கு காத்தான் தானாக களுமரத்தில் ஏறுவது கிடையாது. மாரி அவனை ஏற்றுவதாக அமைகின்றது. இது இங்குள்ள கதை வேறுபாட்டினால் எழுகின்றது. அதாவது அம்மன் பதினெட்டு முத்துவகை பெறுவதற்குச் சிவனை நோக்கித்தவமிருக்கச் செல்லும் போது அவளைத்தவமிருக்கச் செல்லாது தடுத்து தனக்கு ஆரியப்பூமாலையைத் திருமணம் முடித்துத் தருமாறு கேட்டு வற்புறுத்த மாரி தவமிருந்து வந்து திருமணம் முடித்துத் தருவதாகக்கூறியும் கேட்காததால் களுமரத்தில் ஏற்றிவிட்டு தவம் பெற்ற பின்னர் காத்தானை அவிழ்த்துத் திருமணம் முடித்துக் கொடுப்பதாக சடங்கின் கதை அமைகின்றது. ஆனால் சடங்கு நிகழ்த்துகையின் போது பாடப்படும் காத்தான் ஊர் சுற்றுக்காவியத்தில் மாரி தவமிருந்து வந்து திருமணம் முடித்துத் தருவதாகக்கூறுவது கிடையாது.

சிலவேளை இவ் ஊர்சுற்றுக்காவியம் ஏட்டுப்பிரதியில்லாமல் வாய் மொழி ரீதியாக பாடப்பட்டு வந்ததால் தகவல் தந்தவர் மிகுதி விடயங்களை மறந்திருத்தல் கூடும். கள ஆய்வில் இக்காத்தான் ஊர்சுற்றுக்காவியத்தை ஒலிப்திவு செய்யும் வேளையில் தமக்கு நினைவில் இருப்பதையே பாடித் தருவதாகக்கூறினார். இதனை அடிப்படையாகக் கொண்டு மேலுள்ள விடயத்தை ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது.

இது போன்று காத்தானுக்குத் திருமணம் செய்து வைத்தலும் சடங்கில் இடம்பெறுவது கிடையாது. மாரி தவத்திலிருந்து வந்து காத்தானை களுவிலிருந்து விடுவிப்பதுடன் இவ்ஜதீகக் கதை நிகழ்வு முடிகின்றது. சடங்காக இது இருக்கின்ற படியினால் இவ் அம்சம் விடுபட்டு இருக்கலாம்.

காத்தான் ஊர்சுற்றுக்காவியத்தில் ஆரியப்பூமாலை தான் காத்தானை களுவில் வைப்பாள் எனக்கூறுகின்ற மாரி சடங்கில் தானே காத்தானைகளுவில் ஏற்றுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது போன்றே நாட்டார் வழக்கில் ஆரியப்பூமாலை திருமணம் செய்தால் காத்தான் களு ஏறிச்சாவான் என்பது உள்ளது. ஆனால் சடங்கில் மாரியின் தவத்தை இடைமறித்ததால் மாரி களுவில் ஏற்றுவதாக அமைகின்றது.

இவ்வாறு நாட்டார் வழக்குக்கும் காத்தான் ஊர்சுற்றுக்காவியப்பாடலுக்கும் சடங்குக்கும் தர்க்கரீதியான தொடர்பைக் காண முடியாமல் உள்ளது. ஆனால் வடக்கில் உள்ள காத்தவராயன் பாடல்களுக்கும் நாட்டார் வழக்கிற்கும் காத்தவராயன் கூத்திற்கும் தர்க்க ரீதியான தொடர்பை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இது அங்கு சமய நம்பிக்கையில் இருந்து விடுபட்டு நாடக வடிவமானமையினாலும் இதற்கென்றோர் ஏட்டுப்பிரதி இருப்பதனாலும் ஏற்பட்டிருக்கலாம்.

எனவே காத்தவராயன் கூத்தின் மூலவடிவமான சடங்கும், அதிலிருந்து வளர்ச்சி பெற்ற கும்மி வடிவமும் காத்தவராயன் கதை வாய்மொழியாக வழங்கப்படுமாற்றையும் அடிப்படையாகக்கொண்டு பார்க்கின்ற போது சோழர்கள் திருகோணமலையினூடாக ஈழம் வந்த போது தான் இவ் காத்தவராய கதை மட்டக்களப்பில் அறிமுகமாகி பின்பு வடபகுதி சென்று அங்குள்ள சமூகச்சூழலில் முதிர்ச்சியடைந்த கூத்தாக அது முகிழ்ந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு. இதே போன்றே வடபகுதியில் நடைமுறையில் இருந்த காத்தவராயன் சடங்கிலிருந்தே காத்தவராயன் நாடகம் முதிர்ச்சியடைய காத்தவராயன் சடங்கு அருகிப்போய் இருக்கலாம். கிழக்கில் சடங்குகள் அருகிப் போவதற்கான சமூகச்சூழல் உருவாகாததாலும் கூத்தாக வளர்ச்சியடை வதற்கான சமூகச்சூழல் இல்லாததாலும் கிழக்கில் சடங்காக இருக்கிறதே தவிர கூத்தாக வளரவில்லை எனவும் ஊகிக்க இடமுண்டு. இதன் உண்மையான நிலையினை மேற்கொண்டு நிகழ்த்தப்படும் ஆய்வுகள் தான் தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறு பார்க்கின்ற போது காத்தவராயன் கூத்து தனியே வடபகுதிக்கு மட்டுமல்லாது கிழக்கிலிருந்து வடக்கு வரை காத்தவராயன் நாடக வளர்ச்சியில் ஒரு தொடர்ச்சியினைக்காண முடிகின்றது.

மலையகத்துப் பொன்னர் சங்கர் கூத்தும் காத்தவராயன் கூத்துப்பாடல்கள் போன்று பாடல்கள், பாடல் மெட்டுக்கள், நடை சடங்காசாரமாக நிகழ்த்தப்படுவது போன்ற ஒற்றுமைகளைக் கொண்டிருப்பதால் இவ்விரண்டையும் ஒப்பிட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்புகள் கண்டறியப்படுமாயின் காத்தவராயன் கூத்து இலங்கையில் வசிக்கும் அனைத்து தமிழர்களின் பொதுவான அரங்க வடிவமாக இருக்கிறது எனலாம்.

*முடியும் என்பது நம்பிக்கையின் ஆரம்பம்.*
*முயற்சிக்கு முன்னுரை.*
*எழுச்சிக்கு வித்து.*
*செயலுக்கு ஆதாரம்.*
*வெற்றிக்கு ஊன்றுகோல்*

*நெப்போலியன*


Best Compliments from

S.P.S
Enterprises

Dealers in Cement & Hardwares

310, Trinco Road
Batticaloa

T.P. 065 – 23119

**Best Compliments**
**From**

S.N.J GROUP
**Silvershine Enterprise**

**No. 211, Trinco Road,**
**Batticaloa.**

T.P No : 065 – 22565
Fax No : 065 – 24776

# மட்டக்களப்பில் மதம் சாராக்

# கட்டடக்கலை



*பிரஷாந்தி மகாலிங்கசிவம்*

மாகன் காலத்தில் மட்டக்களப்பு என்பது வெருகல் முதல் வீரமுனை வரை பரந்திருந்தது. அதன் முக்கிய நகரம் மண்முனை. தற்போதைய மட்டக்களப்பு அப்போது பிரபலமாகவில்லை. ஒல்லாந்தர் கோட்டை கட்டிய பின்பே அது நகரமாகியது. அதற்கு முன்பு 'புளியந்தீவு' எனும் சிறிய கிராமமாகவே அது இருந்ததாக அறிகிறோம்.

1978களில் மட்டக்களப்பைப்பாதித்த பலத்த சூறாவளியினால் மட்டக்களப்பின் ஆரம்ப காலக்கட்டடங்கள் பல அழிந்து விட்டன. இதனால் கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன்பு வரை இருந்த கட்டடங்கள் பற்றிய செய்திகளையே இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. 1978 இற்கு முன்னர் இருந்த களிமண், புற்றுமண், செங்கல் முதலிய பொருட்களாலான கட்டடங்கள் இயற்கை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் உருக்குலைந்து விட்டன. எனவே இன்று கட்புலரீதியாக எமக்குக் கிடைக்கும் கட்டடங்களை ஆதாரமாக வைத்தே மட்டக்களப்புக் கட்டடக்கலை பற்றி இங்கு கூறப்படுகின்றது.

மட்டக்களப்பு விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட நீர்வள நாகரீகமுடையது. ஒரு கட்டடத்தை அமைக்கும் போது , அது அமையும் அமைவிடத்தின் புவியியல் நிலைமையும் அதனால் கிடைக்கும் சீதோஷ்ண நிலையும் முக்கிய கவனத்தில் கொள்ளப்படுகிறது. மட்டக்களப்பிற்குக் கிடைக்கும் தென்மேற் பருவப்பெயர்ச்சிக்காற்று, வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காற்று என்பவற்றால், ஆறுமாதங்கள் கோடை வெயிலையும், ஆறுமாதங்கள் மாரி மழையையும் எதிர்நோக்கும் பிரதேசமாக இது விளங்குகிறது. இதனால் இச்சீதோஷ்ண நிலைக்கு ஈடுகொடுக்கக் கூடியதாகவே இப்பிரதேசத்தின் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன.

இந்தவகையில் மட்டக்களப்பில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களை நாம் வாழ்வியல் கட்டடங்கள், பொதுக்கட்டடங்கள் என இருவகையாகப்பிரித்துப்பார்க்க முடிகின்றது. வாழ்வியல் கட்டடங்கள் எனும் போது, மக்களின் வாழ்விடத்தேவைகளுக்காகக் கட்டப்பட்ட இல்லங்களே இங்கு முக்கியமாகின்றன. மட்டக்களப்பில் பொருளாதாரத்தில் பலநிலைகளையுமுடைய மக்கள் வாழ்வதால் இங்கே அவர்களது வாழ்க்கை வசதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ள வெவ்வேறுபட்ட இல்ல அமைப்புக்களை நாம் காண முடிகின்றது. இதனால் இவற்றை நாம், வசதி குறைந்த அடிமட்ட மக்களது இல்லங்கள், உயர்மட்ட அந்தஸ்திலுள்ள செல்வந்தர்களது வீடுகள் என மூன்றாகப்பிரித்துப் பார்க்க முடிகின்றது.

முதலாவது நிலையில், அதாவது பொருளாதாரத்தில் மிகவும் அடிமட்ட நிலையிலுள்ள மக்களின் வீடுகளாகப் பெரும்பாலும்

ஓலைக்குடிசைகளே காணப்படுகின்றன. மட்டக்களப்பு தென்னைப்பயிர்ச்செய்கைக்குப் பிரசித்தி பெற்றிருந்த காரணத்தினால், இங்கு ஓலைகள், கிடுகு, தட்டி, ஈர்க்கு, தென்னங் கைமரங்கள் போன்றனவற்றை மக்கள் இலகுவாகப் பெற்றுக் கொண்டனர். இதனால் இவற்றையே மூலப்பொருட்களாகக் கொண்டு இவர்களது இருப்பிடங்கள் அமைக்கப்பட்டன. இவ்வமைப்பு கட்டுவதற்குரிய இடத்தில், நிலத்தில் நாற்புறமும் கம்பு நடப்பட்டு, அவற்றில் நெருக்கமாகக் கிடைக்கம்புகள் வைத்துக்கட்டப்பட்டு, பின் இவை கிடுகு கொண்டு ஈர்க்குகளினால் கம்புகளுடன் இணைத்துக்கட்டப்படும். இவ்வாறு ஓலைகளால் நாற்புறமும் மறைக்கப்படும் பகுதியில் முன்புறம் மட்டும் ஒருவர் நுழையக்கூடியளவிற்கு வாயிலமைக்க இடைவெளி விட்டுக் கட்டப்படும். இக்குடிசைகளின் முன்புறத்தில் ஓலைகளைக் கொண்டமைக்கப்பட்ட தட்டி இறக்கப்பட்டிருக்கும். இவற்றினுள்ளே அறைகள் அமைக்கப்படாமல், தனியே ஒரு பகுதியாகவோ அல்லது ஓலைத்தடுப்பால் கூறாக்கப்பட்ட இருபகுதியாகவோ மட்டுமே பெரும்பாலும் இவை அமைக்கப்படும். இதனருகே சமையலுக்கென நாற்புறமும் ஓலையால் அமைக்கப்பட்ட ஒருபகுதி காணப்படும். இது பிரதான வசிப்புப்பகுதியிலிருந்து புறம்பாகவே அமைக்கப்பட்டிருக்கும். இது போலவே வீட்டின் பின்புறம் கோடி கட்டப்பட்டிருக்கும். இத்தகைய அமைப்புடையனவற்றை 'வீடுகள்' என்று சொல்வதிலும் பார்க்க 'குடில்' , அல்லது 'குடிசை' என்றே சொல்வது வழக்காயுள்ளது. ஓலைகளுக்குப்பதிலாகக் களிமண் சுவரெழுப்பியும் இத்தகைய அமைப்புக்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இரண்டாவதாக நிலங்களைச் சொந்தமாக உடைய நிலச்சுவாந்தர்களது வீடுகளை நோக்குவோம். இவை பெரும்பாலும் செங்கல், கருங்கல் என்பன கொண்டு கட்டப்பட்டனவாயுள்ளன. ஒல்லாந்தர் மட்டக்களப்பில் கோட்டை கட்டிய பின்பே, அது நகரமாக உருவாகியதால், இத்தகைய உறுதியான பொருட்களால் கட்டடம் கட்டும் முறை இவர்களது ஆட்சியின் பின்னரே மட்டக்களப்பில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இத்தகைய கல்வீடுகள் பெரும்பாலும் இருஅறைகளும், அவற்றின் முன்னே நீளமானதோர் மண்டபத்தையும் கொண்டதாகக் காணப்படுகின்றன. இவ்வீடுகள் நிலத்தில் அத்திவாரமிடப்பட்டு அதன்மேல் சீமெந்தும் மணலும் கலந்த கலவையினால், செங்கல் அடுக்கியெழுப்பப்பட்ட சுவர்களை உடையதாக இருக்கின்றன. கைமரம் போடப்பட்ட கூரைப்பகுதிக்கு ஓடு வேயப்பட்டிருந்தது. தரைக்குக் கல்லுப்பரவிப்பலப்படுத்தி, அதன்மேல் சீமெந்தினால் மெழுகப்பட்டிருந்தது. ஆனாலும் இவர்களிடமும் சமையலறை கோடி என்பன வீட்டிற்கு வெளியேயே அமைக்கப்பட்டிருந்தன.

ஆரம்பகாலங்களில் மட்டக்களப்பில் கட்டப்பட்ட சில போடிமார்களது வீடுகள், இன்றும் கூட நவீனமயமாக்கப்படாது, பழமையான அமைப்புகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றன.

இப்பழங்கால வீடுகள் பெரும்பாலும் மூன்று அறைகளைக் கொண்டதாகவும், இவ்வறைகளுக்கு முன்னும் பின்னும் நீளமான மண்டபங்களையும், முற்றத்தில் திண்ணையையும், வேலியோடிணைந்த படலையையும் கொண்டதாக உள்ளன. பொருளாதாரத்தில் சற்று வசதியுடையவர்கள் இப்படலைக்குப்பதிலாக, மரத்தாலான இரட்டைக்கதவு போட்டு, அக்கதவுகளுக்கு மேலே கூரைபோடும் 'தலைவாசல்' எனும் அமைப்பை இணைத்திருந்தனர். இக்கதவுகளின் இருபுறங்களிலும் நீளமான அரைக்கட்டுக்கள் கட்டப்பட்டிருக்கும். மட்டுநகருக்குப் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்த அக்காலங்களில், நெடுந்தூரம் இருந்து பொதிகளைச்சுமந்து வருவோர், இக்கட்டுக்களில் அவற்றை இறக்கி வைத்து இளைப்பாறிச் செல்ல, இத்தலைவாசல்கள் பெரிதும் பயன்பட்டன.

இத்தலைவாசல்களைக்கடந்து உள்ளே செல்கையில், வாசலுக்கும் வீட்டுக்கதவிற்கும் இடைப்பட்ட பகுதியில், வெண்குருத்து மணலைச்சற்று உயரமாகப்பரவி இருந்தனர். இது முற்றத்திலிருந்து சற்று உயர்ந்து 'திட்டுப்' போலக்காணப்பட்டதால் இதனைத் 'திண்ணை' என அழைத்தனர். வீடுகளுக்குள் வந்து போக அனுமதிக்கப்படாத சில சாதியினருடனான தொடர்புகள் இத்திண்ணையுடனேயே நின்று விட்டன. கடலும் கடல்சூழ் நிலமுமாகிய மட்டக்களப்புப்பகுதியில், கட்டட வேலைகளுக்கு சுடப்பட்ட கடற்சிப்பியிலிருந்து பெறப்பட்ட நீற்றின் பயன்பாடு அதிகமாயிருந்தது. ஆனால் கோடைகால உக்கிரங்களுக்கு இந்நீற்று வீடுகள் உகந்ததாயிருக்கவில்லை. இதனால்

இக்காலங்களில் திறந்த வெளியில் அமைக்கப்பட்டிருக்கும் இத்திண்ணையின் பயன்பாடு பெரிதும் வேண்டப்பட்டது.

இவ்வீட்டில் மூன்றாவதாக அமைந்துள்ள சுவாமியறையில் சுவர்களுக்கு மேலே கூரையை அடைத்ததாக 'மச்சி' பரவப்பட்டிருக்கும். மெல்லிய பலகையை கிடையாகப்பரவி இது அமைக்கப்பட்டிருக்கும். வீட்டினுள் உள்ள முக்கியமான பண்டங்கள், பாத்திரங்கள் என்பன இம்மச்சியினுள் பாதுகாக்கப்பட்டன.

இங்கு காணப்பட்ட நீளமான பின் மண்டபம், நெற்களைச் சேமித்து வைக்கும் நெற்களஞ்சியமாகப் பயன்பட்டது. மரங்களை இலகுவாகப்பெற முடிந்த அக்காலங்களில் மண்டபங்களை அழகிய வேலைப்பாடமைந்த, அகலமான மரத்தூண்கள் தாங்கி நின்றன.

மூன்றாவதாக இன்று நகரிலுள்ள செல்வந்தர்களது வீடுகளை நோக்கும் போது, இவை பெரும்பாலும் பலகணி முறை கொண்ட அடுக்குமாடிகளாகவே காணப்பட்டன. நடுவில் பிரமாண்டமான வரவேற்பறையும், அதனைச்சுற்றி சுவாமியறை, படிக்குமறை, விருந்தினரறை, படுக்கையறை, அலுவலக அறை, சேமிப்பறை, சமையலறை, சாப்பாட்டறை என்பன அமைக்கப்பட்டிருந்தன. மேற்கத்தேய பாணியில் இவ்வொவ்வோர் அறைகளுடனும் இணைந்ததாகக் குளிக்குமறை, கழிவறை என்பன கட்டப்பட்டன. இங்கே நீரைச்சேமித்து வைக்க நீர்த்தொட்டிகள் அமைந்திருந்தன. யன்னல், கதவுகள் கண்ணாடி இழைகளால் வடிவமைக்கப்பட்டிருந்தன. வீட்டின் மண்டபங்களை வில்வளைவுகள் (ARCH) இம்மூன்றாவது நிலையிலுள்ள வீடுகள் பெரும்பாலும் மேலைத்தேய செல்வாக்குடனேயே அமைக்கப்பட்டன.

மட்டக்களப்பில் பல்லினமக்கள் சமூகம் வாழ்கின்ற போதும் இன, மத, ரீதியாக வாழ்வியல் கட்டட அமைப்பில் இவர்களிடம் பாரிய வேறுபாடுகள் எதனையும் அவதானிக்க முடியாது. ஆனால் பொதுக்கட்டடங்களில் இன்று மட்டக்களப்பு முஸ்லீம்கள் காட்டி வரும் பேரார்வமும், இக்கட்டடங்களின் அமைப்பு முறையின் வளர்ச்சியும் குறிப்பிட்டுக்கூறத்தக்கன.

எனவே அடுத்து இங்குள்ள பொதுக்கட்டடங்கள் பற்றிப்பார்க்கும் போது, ஒரு காலத்தில் மட்டக்களப்பின் நிர்வாகக்கேந்திர நிலையமாக விளங்கிய மட்டக்களப்பு கோட்டை பிரதானமாகின்றது. மட்டக்களப்பின் மிகப்பழைய கட்டடம் என்ற பெருமையையும், இன்றும் பல அரசகருமங்கள் நிறைவேற்றப்படும் இடம் என்ற முதன்மையும் இதற்குண்டு.

முதலில் போர்த்துக்கேயர் கட்டிய இக்கோட்டையை, 1638 களில் ஒல்லாந்தர் கைப்பற்றி, மீண்டும் கபுக்கல் கொண்டு அதன் சுவர்களுக்குப்பலமேற்றினர். கோட்டையின் நாற்புறங்களிலும் உயரமான காவற்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 20' உயரமான மதிற்சுவரின் மேலே எட்டு அடி அகலமான பாதை உண்டு. இக்கோட்டையின் உள்ளமைப்பில், மேல்மாடி கொண்ட பிரதான கட்டடமும், வளைவான கதவுகளும், சாளரங்களும் உள்ளன. முன்புறம் சுமார் 20 அடி உயரமான பாரிய உருண்டைத்தூண்கள் கட்டடத்தைத் தாங்கி நிற்கின்றன. இங்கு கடமை புரிந்த உயர் அதிகாரிகளுக்காக அமைக்கப்பட்ட பல விடுதிகள் தற்போது, 'லேக் வீதி 2' என அமைக்கப்படும் இடத்தில் உள்ளன.

இதுதவிர இங்குள்ள பிற பொதுக்கட்டடங்கள் பற்றிப் பார்க்கும் போது 1985 வரை மட்டக்களப்புப் பொதுநூலகமும், பின்னர் C.W.E. நிறுவனமும் "பஸார் தெரு" விலுள்ள (தற்போது நூலகத்திற்கு முன்பாக) "கிட்டங்கி" எனும் கட்டடத்திலேயே இயங்கின. இக்கட்டடச்சுவர்கள் 2 அடி அகலமாயிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதுதவிர நீதிமன்றமும் மட்டக்களப்பின் முக்கிய கட்டடமாகும். நடுவில் நீதிமன்ற விசாரணைக்கூடமும், சுற்றிவர விறாந்தையும் கொண்ட மிகப்பதிவான இக்கட்டடம் 1978 சூறாவளியில் சேதமடைந்ததால் இன்று உள்ள கட்டடம் அதன் மீளுருவாக்கமே. மேலும் முக்கியமாகக் குறிப்பிட்டுக் கூறப்படக்கூடியது பிறீமன் தண்ணீர்ப்பந்தலாகும் ( Freeman Thanner Pandol ). பொதுநூலகத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள இக்கட்டடம் 1911 ம் ஆண்டு யூன் 22 ம் திகதி நிறுவப்பட்டுள்ளது. வட்டவடிவ அமைப்பும் கூம்பக வடிவிலான கூரையும் கொண்ட இச்சிறிய கட்டடம் பிரித்தானியர் ஆட்சியின் போது நிர்மாணிக்கப்பட்டதாகும்.

மட்டக்களப்பின் ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட கல்விக்கட்டடங்கள் வெறும் ஓலைக்கொட்டில்களாகவே அமைக்கப்பட்டன. கிறிஸ்தவமதத்தின் வருகையின் பின்பே இங்கு கல்விக்கென ஸ்திரமான கட்டடங்கள் தோன்றின. மட்டக்களப்பில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது பாடசாலை மெதடிஸ்த பாதிரியார் வண.வில்லியம் ஓல்ட் அடிகளார் ஸ்தாபித்த மெதடிஸ்த கல்லூரியாகும். சுமார் 100 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்கநாட்டுக்கட்டட நிபுணர்களாலும், பொறியியலாளர்களாலும் அமைக்கப்பட்ட இக்கட்டடச் சிற்பமுறையும், அதன் அழகியல் அம்சமும் அகில இலங்கைக்கும் ஒரு காட்சிப் பொருளாக இருந்தது. இதனைத் தொடர்ந்தே மட்டக்களப்பில் பாடசாலைகளுக்கெனத் தனிப்பட்ட கட்டட அமைப்பு உருவாகியது.

கலைகள் சிறந்து விளங்கும் மட்டக்களப்பில், கலை நிகழ்ச்சிகளையும், பொதுக்கூட்டங்களையும் நடாத்தவெனப்பல மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பில் காணப்படும் இத்தகைய பொதுமண்டபங்கள் பெரும்பாலும், அரசியல் தலைவர்களது ஞாபகார்த்தமாகவும், பெரியோர்களது ஞாபகார்த்தமாகவுமே அமைக்கப்பட்டிருக்கின்றன. செல்வநாயகம் மண்டபம், தேவநாயகம் மண்டபம், நகர மண்டபம், விபுலானந்த மண்டபம், கல்லடி இராமகிருஷ்ண மிஷன் மண்டபம், இந்து இளைஞர் மன்றக்கட்டடம், நாவற்குடா இந்துகலாசார மண்டபம், விபுலானந்த இசை நடனக்கல்லூரி, புனித மைக்கேல் கல்லூரி மண்டபம், இந்துக்கல்லூரி மண்டபம், மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்பக் கல்லூரி, சாள்ஸ் மண்டபம், வில்லியம் ஓல்ட் மண்டபம் என்பன இன்று மட்டக்களப்பின் முக்கியமான மண்டபங்களைக் கொண்ட கட்டடங்களாக விளங்குகின்றன.

மேலும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தவென அரசதிணைக்களங்களால் அமைக்கப்பட்ட மண்டபங்களையும் நாம் இங்கு குறிப்பிடுவது பொருந்தும். விவசாயத்திணைக்களத்தால் சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்டுள்ள கேட்போர் கூடம், தங்குமிடவசதிகளுடன் கூடியதாக கற்றல் சூழலைக் கொண்டதாக அமைந்துள்ளது. மேலும் கல்வித்திணைக்களத்தால், கல்லடியில் பொதுமண்டபம் மாடிக்கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் விசேடமாகக்குறிப்பிடக் கூடியதாக நவீனவசதிகள் பொருந்தியதாக அமைக்கப்பட்டுள்ள கேட்போர் கூடம் 'நோராட்' நிறுவன உதவியுடன் மட்டக்களப்பு ஒருங்கிணைந்த புனர்வாழ்வு புனரமைப்புத்திட்டத்தால் நிறுவப்பட்டதாகும். சுமார் 250 பேரை உள்ளடக்கக்கூடிய இருக்கைகளும் மேசைகளும், குளிரூட்டிகள், ஒலிவாங்கி இணைப்புக்கள், ஒலிவாங்கிகள் பொருத்தப்பட்ட மேசை - இருக்கைகளுடன் கூடிய மேடை அமைப்பு என்பனவும், ஏனைய பல்வேறு வசதிகளையும் கொண்டதான இக்கட்டடம் எமது மாவட்டத்துக்குப் புதிதான அமைப்பாக உள்ளது.

இவை தவிர மட்டக்களப்பில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரங்களும், வரவேற்பு வளைவுகளும் முக்கியமான கட்டடக்கலை அம்சங்களைக் கொண்டுள்ளன. இத்தகைய கட்டடங்களில் தமிழர் தம் கலாசார பண்பாட்டு வெளிப்பாட்டம்சங்களை நாம் ஓரளவு காணலாம். நகரமத்தியிலுள்ள கோபுரத்தைப் பூரண நிறைகுடங்களும், இராமகிருஷ்ணபுரச் சந்தியிலுள்ள கோபுரத்தை நீரர மகளீரும், அரசடியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தை அநுமார் சிலைகளும் அலங்கரிக்கின்றன. ஆனாலும் இக்கோபுரங்களின் கூரையமைப்புக்களில் பௌத்த இஸ்லாமிய மதச்செல்வாக்குகள் இணைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவற்றுடன் ஊறணியில் அமைக்கப்பட்டுள்ள வரவேற்பு வளைவும் நீரரமகளீராலும் காத்தான்குடியில் இஸ்லாமிய மதக்குறியீடுகளால் அலங்கரிக்கப்பட்ட வரவேற்பு வளைவினையும் காணலாம்.

இவை தவிர மட்டக்களப்புக் கட்டடக்கலை பற்றிப்பார்க்கும் போது கட்டடக்கலை தொடர்பாக இன்று காணப்படும் சில இடர்களையும் நாம் இனங்காட்ட வேண்டியுள்ளது. மட்டக்களப்பில் மண், கல், மரம் என்பவற்றைப் பெறுவதில் இன்று பல பிரச்சனைகள் எதிர்நோக்கப்படுகின்றது. கலைஞர்களுக்குப் போதிய வருமானமின்மை, அருகி வரும் கட்டடப்பொருட்களுக்கு ஏற்ப மாற்றீட்டுப் பொருட்கள் பாவனைக்கு வராமை, மூலப்பொருட்களைப் பெறுவதில் ஏற்படும் காலதாமதம் என்பன இங்கு கட்டடக்கலையைப் பாதிக்கும் முக்கிய பிரச்சனைகளாகும்.

ஆனால் இச்சிக்கல்களையும் தாண்டி இன்று மட்டக்களப்பு முஸ்லீம்களின் கட்டடக்கலை

மிகத்துரிதமாக வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இஸ்லாமிய கட்டடங்கள் இன்று பெருமளவிற்கு அவர்களது கலாசாரத்திற்கும், அழகியலுக்கும், பண்பாட்டம்சங்களுக்கும் முக்கியம் கொடுத்துக் கட்டப்படுகின்றன. ஆனால் இன்று மட்டக்களப்புத் தமிழர்களது கட்டடங்களில் ஏன் இத்தகைய பண்பாட்டம்சங்களுக்கும், அழகியலுக்கும் முக்கியம் கொடுக்கும் நிலைமையை நாம் காண முடியவில்லை என்பது நோக்கத்தக்கது. தமிழர் மத்தியில் அமைக்கப்படும் கட்டடங்களில், பாரிய அளவுத்திட்டத்திற்கும், உறுதியான அமைப்புகளுக்கும் கொடுக்கும் முக்கியத்துவம் போல, தமிழரின் அழகியலம்சங்களுக்கும், கலாசார வெளிப்பாட்டுணர்விற்கும் முக்கியம் கொடுத்துக்கட்டடங்களை அமைத்தாலன்றி, மட்டக்களப்பைப் பொறுத்தவரை, தமிழர்களது மதம்சாராக் கட்டடங்களில் தமிழர்களது தனித்துவத்தைப் பேணவோ, பாதுகாக்கவோ முடியாமல் போய்விடும் என்பது தெளிவு. எனவே இதனைச்செய்தெடுக்க வேண்டிய பணி மட்டக்களப்பு மக்களிடமும், மட்டக்களப்பின் கட்டடக்க லைஞர்களின் கைகளிலுமே தங்கியிருக்கின்றது. இனிவரும் காலங்களில் இப்பகுதியில் அமைக்கப்படும் கட்டடங்களிலாவது இத்தகைய நோக்கில் அமைத்துக் கொள்வதும் அல்லது இத்தகைய விடயங்களை இணைத்துக் கொள்வதும் மட்டக்களப்பின் மதம்சாராக் கட்டடக்கலையைப் பொறுத்தளவில் அவசியமான பணியாகும்.

*ஒரு நூல்நிலையம் திறக்கப்படும் போது*
*சிறைச்சாலையின் கதவு ஒன்று*
*மூடப்படுகிறது*

*விவேகானந்தர்*

நாம் அறியமுடியாதவை நான்கு :

வானத்தில் திரியும் பருந்தின் போக்கு.
மலைமீது ஊரும் பாம்பின் போக்கு.
நடுக்கடலில் அகப்பட்ட மரக்கலத்தின் போக்கு.
ஒரு பெண்ணின் காதல் வயப்பட்ட ஆணின் போக்கு.


Best Compliments from

# Wijaya Motor Stores

**Dealers in & Tractor Spares**

182, Trinco Road,
Batticaloa.

Tel .No : 065 – 25121

Best Compliments from

**National Panasonic**

Stereo Cave & Video Filiming

*All kinds of Electric goods are available*

239 A. Trinco Road ,
Batticaloa.
(Opposite of Hindu College Ground)

# மட்டக்களப்புக் கவிகளும் நானும்

*வ.சிவசுப்ரமணியம் B.A*



மட்டக்களப்புத்தமிழ் மாநிலத்தில் தோன்றிய நாட்டார் பாடல்களை இரண்டு பெரும் பிரிவில் அடக்கலாமென்பது என் கருத்து. முதல்வகை சாதாரண மக்களின் வாய்மொழியாகத் தோன்றியவை. மற்றவை பூசாரிகள் மரபின் மூலம் தோன்றியவை.

கவிகள், குழந்தைப்பாடல்கள், தாலாட்டு, ஊஞ்சற்பாடல்கள், கோலாட்டப்பாடல்கள், வசந்தன் பாடல்கள், கும்மிப்பாடல்கள், அம்மானை, பழமொழிகள் , நொடிகள் முதலியவை முதல்வகையைச் சார்ந்தவை.

மந்திரங்கள், காவியங்கள், தெய்வங்களைப்பரவும் அகவல், தோத்திரம், தாலாட்டு (தாராட்டு), கரகப்பாடல்கள், காவடிப்பாடல்கள், கண்ணகி இலக்கியங்கள் போன்றவை இரண்டாம் வகையைச் சார்ந்தவை.

தொல்காப்பியம், பிசி (நொடி) , முதுமொழி, மந்திரம், குறிப்பு மொழி என இசைவகுக்க முடியாத நாட்டாரிலக்கி யங்களைக்குறிப்பிட்ட பின் "பண்ணத்தி" என்ற இசைப்பாடல் ஒன்றையும் எடுத்துக்கூறுகிறது. தொல்காப்பியருக்கு நீண்ட காலத்தின் பின் தோன்றிய உரையாசிரியர்களால் பண்ணத்தியைச் சரியாக இனங்காண முடியவில்லை எனத் தெரிகிறது. உரையாசிரியர் கருத்துக்களைத் தொகுத்து நோக்கினால் பண்ணத்தி என்பது இசைத்தமிழ் வகையைச் சேர்ந்த பாடலென்பதும் ஒவ்வொன்றும் நாற்சீர் கொண்ட இரண்டடிகளால் அமைந்த சிறிய இசைப்பாடலென்பதும் அவர்கள் கருத்தெனத் தெரிகிறது. இளம்பூரணர் பண்ணத்திக்குக்காட்டும் உதாரணச்செய்யுள் வருமாறு :

*கொன்றை வேய்ந்த செல்வன் அடியினை*
*என்றும் ஏத்தித் தொழுவோம் நாமே*

இது பிற்கால நூலாகிய கொன்றைவேந்தனின் காப்புச்செய்யுள் என்பதைப் பலர் அறிவர்.

மட்டக்களப்புக் "கவிகள்" ஒவ்வொன்றும் நாற்சீர் கொண்ட இரண்டடிப்பாக்களாகவே அமைந்துள்ளன. கவிகளுக்கென்றே தனித்த ஒரு இசையுண்டு. ஆகவே கவிகளைப் பண்ணத்தி மரபில் தோன்றிய இசைப்பாடல்கள் என்று கொள்வதில் தவறில்லை.

இப்பாடல்களுக்கு "கவி" என்றும், தெய்வத்தைப்போற்றும் உருக்கம் நிறைந்த இன்னொரு பாடல் வகைக்குக் "காவியம்" என்றும் பெயரிட்டுள்ளனர். கவி, காவியம் என்ற சொற்கள் தற்காலத்தில் என்ன பொருளில் வழங்கப்படுகின்றனவோ அப்பொருளைக்குறியாமல் அகவற்பா, வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்பவற்றைப் போன்று ஒரு வகை ஓசை என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் அறுபது வருடங்களுக்கு முன் மட்டக்களப்பு மாநிலத்தின் தென்பகுதிக்

கிராமமொன்றில் வாழ்ந்து கொண்டிருந்தேன். அங்கு மக்கள் பாடும் கவிகளைக் கேட்டேன். நாளடைவில் கவிகளின் சொல்லழகிலும் பொருளழகிலும் இசை அழகிலும் நெஞ்சைப்பறி கொடுத்தேன்.

1943ஆம் ஆண்டிலிருந்து கவிகளைச் சேகரிப்பதில் ஈடுபட்டேன். சுமார் முந்நூறு கவிகளைச்சேகரித்த பின் மீண்டும் மீண்டும் எழுதப்பட்டவையும் பல காரணங்களினால் பொருத்தமற்றவையென நான் கருதியவையுமான கவிகளை நீக்கிவிட்டு 153 கவிகளடங்கிய ஒரு கையெழுத்துப்பிரதியைத் தயாரித்தேன். அவற்றைப்பல முறை படித்துப்பார்த்தேன். காதல் உணர்வு கொப்பளிக்கும் அக்கவிகளில் அவை தோன்றிய காலத்து அரசியல், வரலாறு, சமயம், சமூகம், பொருளியல் சம்பந்தமான கருத்துக்கள் ஆங்காங்கு மிளிர்வதையும் கண்டேன். அவற்றின் கலையழகு என்னைப் பெரிதும் கவர்ந்தது. அதனைக்குறிப்பிட்டு நான் எழுதிய முதல் கட்டுரை "பெண்மையின் கனிவு" என்ற தலைப்பெயரில் 05.08.1945 இல் "ஈழகேசரி" வாரப்பதிப்பில் வெளிவந்தது. மட்டக்களப்பு நாட்டாரியல் பற்றி முதன்முதல் வெளிவந்த கட்டுரை இதுவாகத்தான் இருக்க வேண்டும் என்பது பின்னால் தெரியவந்தது. 1945 - 1949 ஆம் ஆண்டுகளுக்கிடையில் "ஈழகேசரி" "தினகரன்" வாரப்பதிப்புகளில் எனது நான்கு கட்டுரைகள் வெளிவந்தன.

கவிகள் பெரும்பாலும் ஈரசைச்சீர் அல்லது மூவசைச்சீர் நான்கு நான்கு கொண்ட ஈரடிகளாக அமைந்திருக்கும்.

உதாரணத்துக்கு ஒரு கவி :

*பொடு பொடுத்த மழைத்தூறல் பூங்காரமான நிலா*
*கடுமிருட்டு மாலை வெள்ளி கதவுதிற கனத்திருப்போம்.*

சில கவிகளில் நாலாஞ்சீரின் இறுதியில் தனிச்சொல் ஒன்று வருவதுண்டு.

*இஞ்சி கிண் டப்போன இளமயிலே தாராவே -*
*உன்ர*
*கண்கள் சிவந்து கடுங்கோப மானதென்ன !*

தனிச்சொல் ஆறாஞ்சீரின் முடிவில் வருவதுமுண்டு

*கட்டிக் கரும்பே கணையாழி மோதிரமே*
*பூமத்தம் பூவே - உங்கட - பூமனதுங்கல்*
*லானதென்ன.*

கவியைப்பாடுகிறவர் தனிச்சொல்லுக்கு முந்திய சீரில் இசையைச் சிறிது நிறுத்தி தனிச்சொல்லைத் தனியாக இசைத்துவிட்டு பாடலைத் தொடர்வார்.

தான் சொல்ல வந்த கருத்தை ஒரே கவியால் சொல்லமுடியாமல் போனால் இன்னொரு கவியையும் சேர்த்துப்பாடுவர். "இரட்டைக்கவிகள்" அருமையாகவே காணப்படும். இதைப்பற்றிய என் அநுபவத்தைப் பின்னால் கூறுகிறேன்.

ஆண்களின் கூற்றாக உள்ள கவிகளுக்கு "ஆண்கலை" என்றும் பெண்களின் கூற்றாக வரும் கவிதைகளுக்குப் "பெண்கலை" என்றும் இம்மக்கள் பெயரிட்டுள்ளனர்.

ஒருவர் பாட அதற்கு விடையாக இன்னொருவர் பாடுவதுமுண்டு. இவற்றை "வாதுகவிகள்" என்பர். இக்கவிகளில் நையாண்டியும் குத்தலும் மலிந்திருக்கும். அவசரத்தில் இட்டுக்கட்டிப்பாடுவதால் கவிகளுக்குரிய இயல்பான இனிமை மறைந்து ஒரு செயற்கைத்தன்மை காணப்படும். உதாரணத்துக்கு இரண்டு பாடல்களைத்தருகின்றேன். ஒருவர் கவிபாடி மற்றவரை வாதுக்கு அழைக்கிறார். இரண்டு மூன்று கவிகளைப்பாடிப்பார்த்தார். மற்றவரிடமிருந்து வாதுகவி புறப்படவில்லை. முதலாமவர் எரிச்சலடைந்து மீண்டும் ஒரு கவி பாடுகிறார்.

*எத்தனை பாட்டை எடுத்தெடுத்து நான்படிக்க*
*கல்லுருவம் போலதம்பி கண்சிமிட்டா தேனிருக்காய்.*

இரண்டாமவருக்கு ஆத்திரம் வந்து விடுகிறது ; தப்பித்தவறி ஒரு கவியும் பிறந்து விடுகிறது.

*எண்ணைத் தலையழகா எழுத்தாணிக் கூரழகா*
*சுருட்டைத் தலையழகா சொல்லுமடா உன்கவியை*

மீண்டும் முதலிலிருந்து வாதுக்கழைக்கிறார். என்ன பாடினாரோ தெரியவில்லை.

தலைவன் - தலைவி, தலைவி - தோழி, தலைவன்

- தோழன், தலைவி - தாய் இவ்வாறு இருவருக்கிடையில் சம்பாஷணை வடிவிலும் சில கவிகள் காணப்படுகின்றன. இவை இரண்டு அல்லது மூன்று கவிகளுக்குமேல் நீடிப்பதை நான் அறியவில்லை. இங்கு தலைவிக்கும் அவளது மாமிக்கும் இடையே ஒரு சம்பாஷணை : காதலியைச்சந்திக்க அவள் குறிப்பிட்ட இடத்தில் இரவில் வந்து நிற்கிறான் தலைவன். நித்திரையின்றிப்படுத்திருந்த மாமிக்கு ஆளரவம் கேட்டுவிடுகிறது. தனது மருமகளின் காதல் பற்றியும் அவள் சாடையாக அறிந்திருந்தாள்.

மருமகளைப்பார்த்துக் கேட்கிறாள் :

*திடுதிடென்று மழைபொழிய திட்டியெல்லாம் தண்ணி நிக்க*
*மதுரையடி நாய் குலைக்க வந்தகள்ளன் ஆர்பொடிச்சி ?*

மருமகளிடமிருந்து விடைவருகிறது.

*கள்ளனு மில்லைமாமி காவாலியு மில்லைமாமி - நம்மட*
*காராம் பசுவோட கண்டுவந்து போகுதுகா*

'போகுதுகா' என்பது காதலனுக்கு ஒரு சமிக்ஞை.

இதைப்போலல்லாமல் நீண்ட சம்பாஷணைகள் இருந்திருக்கலாம். கவிதைகள் சிதறிப்போய் அவை தனிக்கவிதைகளாக வழங்கியிருக்கலாம். மறந்து விடப்பட்டுமிருக்கலாம். மேலே கூறிய ''எத்தனை பாட்டை........'' "எண்ணைத் தலையழகா......... " என்ற கவிகள் எனக்குத்தனித்தனியாகவே கிடைத்தன. இப்படிப்பல நீண்ட சம்பாஷணைக்கவிதைகள் இருந்தமையாற் போலும் தனித்தனிக்கவிகளை "சொரியல் கவிகள்" என்று அழைத்தார்கள்.

கவிகள் இரண்டு பக்கமும் திறந்துவிடப்பட்டுள்ள கலை வடிவங்கள். கவியில் கூறப்பட்ட உணர்ச்சிமயமான சம்பவத்துக்கு முன் நடந்த கதையும் பின்னர் ஏற்பட்ட விளைவும் நமது கற்பனைக்கே விடப்பட்டுள்ளன. நீண்டகாலமாக வழங்கிவரும் கவிகள் மறதியினாலும் சரியான பொருள் அறியப்படாத காரணத்தினாலும் தவறாகப்பாடப்படுவதுமுண்டு. சரியான வழியிற் சிந்தனை மூலமும் கற்பனை மூலமும் தவறுகளைத் திருத்திக் கொள்ளமுடியும். ஒப்பிட்டுப்பார்ப்பதும் இதற்கு ஒரு சிறந்த வழியாகும். சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட கவிதைத்தொகுப்பு ஒன்று வெளிவரவேண்டியது அவசியம்.

இப்பாடல்களைக் காதல் வயப்பட்ட ஆணும் பெண்ணும் தாமாகவே பாடினார்களா அல்லது மூன்றாம் ஆளின் கற்பனையா என்பது ஒரு கேள்வி. நிச்சயமாக இவை தன்னுணர்ச்சிப்பாடல்களே. இவை சுய அநுபவத்தின் வெளிப்பாடே. காதல் வயப்பட்டவர்கள் தங்கள் உணர்ச்சிகளைத் தமக்கு இன்பந்தரும் அநுபவங்களை நெருங்கிய தோழி, தோழனிடம் கூறுவது மனித இயல்பு. எதற்கும் கவிதை எங்கும் கவிதை என வாழ்ந்து வந்த மட்டக்களப்புக்கிராமமக்கள் தமது காதலுணர்ச்சியைக் கவிதையாக்கி தமக்கு நெருங்கியவர்களிடம் பாடிக்காட்டினார்கள். காலஞ்செல்லச் செல்ல இவை மெல்ல மெல்லக் கசிந்து வெளிவரத் தொடங்கின. அப்பொழுது இது யார் பாடிய கவி எப்பொழுது பாடியது என்ற பேச்சுக்கே இடமில்லாமற் போய்விடுகிறது. நான் சிறுவயதில் பெற்ற அநுபவமொன்று இக்கருத்தை வற்புறுத்துவதாக அமைந்துள்ளது.

அப்பொழுது எனக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும். அழகானதும் பிரமாண்டமானதுமான ஒரு தென்னந்தோட்டத்தில் என் பெற்றாரோடு சிலகாலம் வாழ்ந்தேன். தோட்டச் சொந்தக்காரர் பெரிய முதலாளி. இதைப் போன்ற பல தென்னந்தோட்டங்களுக்கும் நெல் வயல்களுக்கும் ஆட்டு மாட்டு மந்தைகளுக்கும் அவர் சொந்தக்காரர். தோட்டத்திலேயே குடிசைகளை அமைத்துக் கொண்டு தொழிலாளர்கள் வாழ்ந்தார்கள். அது ஒரு அழகான சுறுசுறுப்பான கிராமம் போல் இயங்கியது.

தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையும் சம்பளம் வழங்கப்படும். எனினும் இது பெயரளவில் தான். முதலாளிக்கு வசதிப்பட்ட நேரத்தில் மட்டுமே சம்பளம் வழங்குவார். அடுத்த ஊரில் கூடும் ஞாயிற்றுக்கிழமைச் சந்தைக்குச்சென்று தமக்குத் தேவையானவற்றைத் தோட்டத்து மக்கள் வாங்கி வருவர். சம்பளம் கொடுபடாத பொழுது கடனுக்கு வாங்கி வருவர். கடனாகக்கிடைக்குமென்றால் தேவைக்கு அதிகமாக

வாங்கிவிடுவது மனித இயல்பு. சம்பளப்பாக்கி கிடைத்ததும் அது கடனை அடைக்கவே போதுமானதாயிருக்கும்.

அந்தத்தோட்டத்தில் வாழ்ந்த நல்ல பண்புகள் நிறைந்த குடும்பம் ஒன்றில் ஒரு இளம் பெண் இருந்தாள். அப்போது அவளுக்குச்சுமார் பதினெட்டு வயதிருக்கும். அவளுக்கு இந்த நடைமுறை அடியோடு பிடிக்கவில்லை. சொத்துடைமையே உயர்ந்த அந்தஸ்தையும், அதிகாரத்தையும் படைக்கும் அக்காலத்தில் இந்த இளம் பெண்ணால் என்ன செய்ய முடியும். எனினும் முதலாளியின் மரியாதையைக்குறைக்காத, குறைகளைச் சுட்டிக்காட்டாத சொற்களை உபயோகித்து தன்னுணர்ச்சிகளுக்கு வடிகாலாகச்சில கவிகளைப் பாடினாள். தன் தோழிகளைக் கூட்டி கவிகளைப்பாடிக் காட்டினாள். சில நாட்களின் பின் அப்பெண்கள் இச்செய்தியை என் தாயாரிடம் வந்து சொன்னார்கள். ஒரு நாள் என் அன்னை என்னையும் அழைத்துக் கொண்டு அப்பெண் வீட்டிற்குச் சென்றார். அவருடைய தலைமையில் அப்பெண்வீட்டில் ஒரு கவியரங்கு கூடிற்று. எல்லோரும் பெண்கள் - என்னைத்தவிர. சிறுவன் என்றமையால் அங்கு என் பிரசன்னத்தை யாரும் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை என நினைக்கின்றேன். அப்பெண் கவிகளைப்பாடத் தொடங்கினாள் :

*மாணிக்கக் கல்பதித்த மகராசா வந்திருந்து*
*சம்பளம் போட்டதொரு சந்தோசம் இல்லையாகா*
*சம்பளத்தை எடுத்துச் சந்தையிலே கொண்டுவைச்சி*
*கடனைக் கொடுக்க - எங்கட கைசோர்ந்து போகுதுகா !*

'மாணிக்கக்கல் பதித்த' என்ற தொடரை மாற்றி "மரகதக்கல் பதித்த", "நீலக்கல் பதித்த" என்று அவள் தொடர்ந்து பாடிய பாடல்கள் இப்பொழுது என் ஞாபகத்திலில்லை. நான் முன்பு கூறிய "இரட்டைக்கவி" க்கு இதனை உதாரணமாகக் கொள்ளலாம். மாணிக்கக்கல் பதித்த மகராசா என்னும் போது மாணிக்கக்கல் பதித்த மோதிரம் நமது மனக்கண்ணில் தோன்றுகிறது. கவிகளில் சொற்செட்டு அதிகம். அங்கு சமிக்ஞைகள் காணப்படும்.

கவிகளைப்பற்றிக் கட்டுரை எழுதியவர்கள் சிலர் தவறான முறையில் பொருள் விளக்கஞ்செய்துள்ளதையும் கண்டேன்.

*பாலும் அடுப்பிலகா பாலகனும் மடியிலகா*
*அவரும் அருகிலகா - ஆராரோ ஆரிவரோ*

என்பது ஒரு கவி. இந்திய அன்பர் ஒருவர் தாலாட்டுப்பாடல்கள் என்ற தலைப்பெயரில் ஒரு சிறு தொகுதியை வெளியிட்டுள்ளார். அத்தொகுதியில் இக்கவியும் இடம்பெற்றுள்ளது. பாடலை அனுப்பியவரும் அதனை வெளியிட்டவரும் "ஆராரோ ஆரிவரோ" என்ற தொடரைக்கண்டதும் இது தாலாட்டுப்பாடல் எனத்தீர்மானித்து விட்டார்கள். இந்தக்கவியில் அழகான ஒற்றையங்க நாடகம் ஒன்று நடந்து முடிந்துள்ளது என்பது என் தாழ்மையான அபிப்பிராயம்.

அது ஒரு இளங்குடும்பம் - கணவன் மனைவி பச்சிளம் குழந்தை. வியாபாரமோ விவசாயமோ வேறுதொழிலோ காரணமாக வெளியூர் சென்ற கணவன் இரண்டு மூன்று மாதங்கள் அங்கு தங்கியிருக்க வேண்டி வந்தது. தனித்துப் போன அந்த இளம்பெண்ணிற்கு உதவியாக இருந்தவள் அவள் தோழி அடுத்த வீட்டுக்காரி. ஒரு நாளிரவில் கணவன் வீட்டுக்கு வந்துவிட்டான். விடிய எழுந்ததும் அப்பெண் பரபரப்புடன் வீட்டு வேலைகளில் ஈடுபடத்தொடங்கினாள். முதல் வேலையாகப் பாலைக்காய்ச்சுகிறாள். அவளது கணவன் வந்து விட்டதை அறியாத அடுத்த வீட்டுத்தோழி கடப்பில் வந்து நின்று தன் சிநேகிதியைப் பெயர் சொல்லி அழைக்கிறாள். அந்த அழைப்புக்கு அளித்த பதில்தான் மேலேயுள்ள கவி. அடுப்பில் பால் பொங்கிக் கொண்டிருக்கிறது. கண்விழித்து விட்ட குழந்தையை மடியில் போட்டுக் கொண்டே பால் காய்ச்சுகிறாள், அன்புக்கணவனோ பக்கத்தில் வந்து குந்திக் கொள்கிறான். குழந்தை சிணுங்கத்தொடங்குவது போலவும் காட்டி அதை அரவணைப்பதற்காக ஆராரோ ஆரிவரோ என்றும் இசைக்கிறாள். தோழியை இப்பொழுது சந்திக்கமுடியவில்லை என்பதை நாசூக்காகத் தெரிவிக்கும் இப்பாடலை மீண்டும் பாடிப்பாருங்கள்.


❖ இக்கட்டுரை ஆசிரியர் எழுதிக் கொண்டிருக்கும் "மட்டக்களப்பு நாட்டாரியல்" என்னும் நூலின் ஓர் அத்தியாயத்தின் சுருக்கம்.

# வல்ல சபதமொன்று மங்கையரே செய்திடுவோம்

*திருமதி. ராஜினி புண்ணியமூர்த்தி*

எங்களுக்குப் பரம்பரையாய் எட்டேக்கர் காணியுண்டு
தங்கம் பொன் விளையும் தரையென்று சொல்வார்கள்
உழைப்பாளி எங்களப்பா உதிரத்தை நீர்ப்பாய்ச்சி
மழை வெயிலைப் பாராமல் வயலிலே நெல் விளைத்துச்
சிக்கனமாய் வாழ்ந்து சேர்த்த பணத்தினிலே
பக்கத்து நெற் காணி பத்தேக்கர் அதை வாங்கி
அப்பாவின் தம்பி அவரும் உதவி செய்ய
இப்போ நெல் விளைச்சல் இருடமங்கு மும்மடங்கு
கன்று பசுக்களுடன் காட்டெருமை மாடுகளும்
இன்று பெருஞ்செல்வர் எனும் நிலையில் வாழுகிறோம்
என் அண்ணனொருவர் இருவருமே பிள்ளைகள் நாம்
அன்னை தந்தை எங்களை அன்பாய் வளர்த்திடுவார்
பத்தாம் வகுப்பில் எட்டுப் பாடமும் நான் சித்தியெய்தி
ஒத்தாசையாய் அன்னை உடன் வீட்டு வேலைகளில்
கையுதவி செய்து காய்கறித் தோட்டமொன்றும்
செய்து வருகிறேன் தவறாது தினம் தோறும்
திக்கெட்டும் புகழ்பரப்பும் வானொலி தன்னை
ஆவலுடன் கேட்பேன் அறிவை வளர்ப்பதற்காய்
புத்தகங்கள் படிப்பேன் புதினத்தாள் வாசிப்பேன்
சித்திரங்கள் வரைவேன் சிறுகதையும் எழுதுவேன்
கவிதை புனைவேன் களைத்து வரும் அப்பாவின்
செவிக்கு விருந்தாகத் திருமுறைகள் பாடிடுவேன்
பட்டணத்துக் கல்லூரியிலே படித்தவன் என் அண்ணன்
கெட்டிக்காரன் அப்பா கேட்டவுடன் பணம் கொடுப்பார்
நாங்கள் வசிப்பதோ நாட்டுப்புறம் அங்கு
ஆங்கிலம் அறிந்தவன் அண்ணன் ஒருவன் தான்
வேலையெதுவு மில்லை மேல் நாட்டு உடையுடனே
காலை முதல் மாலை வரை கால் கடுக்கச் சுற்றுகிறான்
விண்ணப்பம் போட்டு வேலைக்கு அலைந்திடுவான்
அண்ணனுக்கு நானுரைத்த அறிவுரைகள் ஏறவில்லை
வறுமையிலே எமக்கு வாழ்வளித்த உழுதொழிலை
சிறுமையென எண்ணிச் செய்ய மறுக்கின்றான்
தொழுதுண்டு வாழும் தொழிலை மதிக்கின்றான்
உழுதுண்டு வாழ உழவன் மகன் மறுத்தால்

உயிர் காக்கும் தொழிலின் உயர்வை மதிப்பவர் யார்
பயிர் காத்துச் சேர்த்த பணத்தினிலே வாழ்கின்றோம்
அறுபத்து மூன்று வயது ஆனாலும் அப்பாவின்
சுறுசுறுப்புக் குறையவில்லை துர்ப்பழக்கம் ஏதுமில்லை
தள்ளா வயதிலுமுன் தந்தை உழைக்கின்றார்
எள்ளாதே நீயும் ஏர்த்தொழிலே செய்கவென
கண்டால் என் அண்ணனைக் கட்டாயம் சொல்லுங்கள்
மன்றாடிக் கேட்கின்றேன் மங்கையரே உங்களை நான்
சற்றே உயரம் அவன் தலைசுருட்டை மாநிறந்தான்
முற்றாய் வெளி நாட்டு மோஸ்தரிலே உடையணிவான்
உங்களுக்கும் அண்ணன்மார் உண்டாயின் அவர்களும்
அங்குமிங்கும் தொழில் தேடி அலையாமல் உழுதொழிலை
நாடிப் புரிந்தால் நம் நாட்டில் பசியகலும்
தேடிப் பொருள் குவியும் செப்புங்கள் அவர்களிடம்
நல்ல உழவனையே நாம் மணப்போமென்று
வல்ல சபதமொன்று மங்கையரே செய்திடுவோம்
அன்பு வணக்கங்கள் அனைவருக்கும் என் கருத்தை
என் கதைபோற் கூறினேன் இவையாவும் கற்பனையே.

*உங்கள் பிள்ளைக்கு*

*நீங்கள் வழங்கக்கூடிய*

*மிகச்சிறந்த அன்புப்பரிசு*

**டிக்கிரி**

**கணக்குகள்**

*மேலதிக விபரங்களுக்கு மட்டக்களப்பு செலான் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.*

**SEYLAN**

BANK LIMITED

*THE BANK WITH A HEART*

# மட்டக்களப்புக் கல்விநிலை



*திருமதி . தி. ஹரிதாஸ்* **B.A . Dip in Edu**

மாண்புறு அறிஞர் பெருமக்களை ஈன்ற மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் மறுமலர்ச்சி காண்பது கண்கூடாகும். "அகிலத்து அணையாத ஜோதியே கல்வி" என்று சோக்கிரட்டீஸ் அவர்கள் கல்விக்கு வரைவிலக்கணம் வகுத்துள்ளார். அவ்வகையில் எமது மட்டக்களப்பு மாவட்டமானது பொருளாதாரம், விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து, சுகாதாரம் போன்ற இன்னோரன்ன துறைகளில் வளர்ச்சி கண்டு வரும் அதேவேளையில் இவையாவற்றையும் விட வளர்ச்சிகளுள் முதுகெலும்பாகிய கல்வியிலும் வளர்ந்து வந்துள்ளது. 1998 ம் ஆண்டு கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப்பரீட்சைப் பெறுபேற்றில் எமது மாவட்டம் இலங்கையில் இரண்டாவது மாவட்டமாக முன்னணியில் திகழ்வது பாராட்டுக்குரியதாகும்.

கல்வி வளர்ச்சி என்னும் போது பாடவிதான நடவடிக்கைகள், இணைப்பாடவிதான நடவடிக்கைகள், பாடசாலைக்கட்டடங்கள், தளபாடங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், மாணவர்கள், ஊழியர்கள் போன்ற சகலதுறைகளிலும் முன்னேற்றம் காண்பதனையே குறிக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டமானது பௌதீகவளம் உட்பட சகலவளங்களும் தசாப்த காலத்திற்குள் வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இக்கட்டுரையிலே மாணவர்களின் பரீட்சைப்பெறுபேறுகளின் புள்ளிவிபரங்களைக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் அடைந்துள்ள வளர்ச்சி பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டமானது வாகரைப்பிரதேசம் தொடக்கம் துறைநீலாவணைப் பிரதேசம் வரையிலான 34309 சதுரகிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்டது. இம்மாவட்டம் பன்னிரெண்டு கல்விப்பிரிவுகளாகப்பிரிக்கப்பட்டுச் செயற்பட்டு வந்தது. ஆயினும் புதிய கல்விச்சீர்திருத்தத்தின் பிரகாரம் மிகக்குறைந்த வள ஆளணியினருடன் 01.10.1998 முதல் மூன்று கல்விவலயங்களாக வகுக்கப்பட்டுச்செயற்படத் தொடங்கியுள்ளது. மட்டக்களப்பு வலயக்கல்வி அலுவலகமானது ஏறாவூர் பற்றில் 26 பாடசாலைகளையும், ஏறாவூர் நகரில் 10 பாடசாலைகளையும், காத்தான்குடி 16 பாடசாலைகளையும், மண்முனைப்பற்று 22 பாடசாலைகளையும், மண்முனை வடக்கு 45 பாடசாலைகளையும், மண்முனை மேற்கு 25 பாடசாலைகளையும் கொண்டதாக மொத்தம் 144 பாடசாலைகளைக் கொண்டு காணப்படுகின்றது. இவற்றுள் 137 பாடசாலைகளே இயங்கும் பாடசாலைகளாக உள்ளன. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 322 பாடசாலைகள் உள்ளன. 1998 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் 109867 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இடைவிலகல் விகிதாசாரத்தை எடுத்து நோக்கும் போதும் கூட படிப்படியாகக் குறைந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

1993 ம் ஆண்டு 13.7 %
1994 ம் ஆண்டு 13.1 %
1995 ம் ஆண்டு 12.7 %

1996 ம் ஆண்டு 12.0 %
1997 ம் ஆண்டு 11.6 %
1998 ம் ஆண்டு 11.4 %

இத்தரவிலிருந்தும் மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் வளர்ச்சியடைந்து வருவதை அவதானிக்கக்கூடியதுடன் எமது மட்டக்களப்பு மாவட்ட சமூகம் கல்வியில் கொண்டுள்ள விழிப்புணர்வையும் உணரமுடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் அடைந்துள்ள வளர்ச்சியை கீழ்க்காணப்படும் க.பொ.த சாதாரணதரப்பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி பயில்வதற்குத்தகுதியானோரின் புள்ளிவிபரம் மூலமும் அறிந்து கொள்ள முடியும்.

| ஆண்டு | க.பொ.த.(சாதாரண) பரீட்சைக்குத் தோற்றியோர் | க.பொ.த.(உயர்) தரத்துக்கு தகுதியானோர் |
|---|---|---|
| 1994 | 4850 | 1096 |
| 1995 | 4970 | 1154 |
| 1996 | 5081 | 1701 |
| 1997 | 4993 | 1688 |
| 1998 | 2788 | வலயம் 1389 |

மேலும், இதைவிட க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதியானோரின் தரவிலும், பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றோர் தரவிலும் இருந்து கல்வி வளர்ச்சியைக் காண முடிகின்றது. அத்தரவுகள் கீழ்க்காணப்படும் இரு அட்டவணைகளிலும் உள்ளது.

பல்கலைக்கழகத்திற்குச் செல்லத் தகுதியானோர் விபரம்

| ஆண்டு | கணிதம் தகுதி/ | உயிரியல் தகுதி/ | வர்த்தகம் தகுதி/ | கலை தகுதி/ |
|---|---|---|---|---|
| 1994 | 112/28 | 271/92 | 301/201 | 444/309 |
| 1995 | 116/47 | 276/104 | 357/262 | 544/453 |
| 1996 | 181/54 | 259/115 | 425/277 | 674/559 |
| 1997 | 140/39 | 252/106 | 395/259 | 812/687 |
| 1998 | 138/78 | 257/180 | 268/223 | 518/476 |

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றோர் தொகை

| துறை | 1994 | 1995 | 1996 | 1997 |
|---|---|---|---|---|
| மருத்துவம் | 11 | 11 | 10 | 09 |
| பல்மருத்துவம் | 02 | 01 | 02 | 02 |
| மிருகவைத்தியம் | 01 | - | 02 | 01 |
| விவசாயம் | - | 06 | 02 | 04 |
| விவசாய விஞ்ஞானம் | 04 | 11 | 05 | 02 |
| உயிரியல் விஞ்ஞானம் | 09 | 01 | 07 | 09 |
| பொறியியல் 1 | 12 | 08 | 09 | 07 |
| பொறியியல் 11 | 02 | 02 | 01 | 02 |
| பொறியியல் (புடவை) | - | - | | 01 |
| பௌதீக விஞ்ஞானம் | 07 | 22 | 15 | 21 |
| முகாமைத்து-1 | 15 | 13 | 19 | 16 |
| முகாமைத்து-11 | - | 05 | 06 | 03 |
| வர்த்தகம் | 12 | 11 | 09 | 14 |
| சட்டம் | 19 | 08 | 08 | 11 |
| கலை | 70 | 69 | 74 | 119 |
| கனிய அளவையியல் | - | 01 | 01 | 01 |
| நில அளவை விஞ்ஞானம | - | 04 | 04 | - |
| பிரயோக விஞ்ஞானம் | - | 06 | 02 | 03 |
| பிரயோக விஞ்ஞானம் 3 | - | 11 | 03 | 03 |
| பிரயோக விஞ்ஞானம் 4 | - | 01 | - | 03 |

மட்டக்களப்பு மாவட்டம் முறைசாராக் கல்வியிலும் வளர்ச்சியடைந்து வருகின்றது. பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்குக் குழாய் பொருத்துதல், கேக் ஐசிங், தையல், ஆங்கிலச் சுருக்கெழுத்து போன்ற பல்வேறு பயிற்சிகளையும் வழங்கி வருகின்றது. தற்போது கணனிப்பயிற்சியை வழங்கக்கூடிய அளவிற்கு விஸ்தீரணம் அடைந்து விட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியிலே பௌதீக வளமானது கடந்த ஐம்பது வருடகாலங்களில் அடைந்த வளர்ச்சியை விட

கடந்த ஐந்து வருடங்களில் அடைந்து விட்ட வளர்ச்சி எண்ணிலடங்காததாகும். கட்டட வசதி அதிகரித்துக்காணப்பட்டதைப் போல தளபாட வசதிகளும், ஆசிரியர் வளமும் ஓரளவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் வளர்ச்சி காண்கின்றதென்றால் அதற்குப்பல காரணங்கள் உள்ளன. சேவைக்காலப்பயிற்சி வகுப்புகள், விசேட கருத்தரங்குகள், குழுமேற்பார்வை, பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒத்தாசைகள், அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, கல்வி அமைச்சின் நடவடிக்கைகள், மாகாணக் கல்வி அமைச்சின் நடவடிக்கைகள், கல்வி அதிகாரிகளின் ஒழுங்கான திட்மிடலும் வழிகாட்டல்களும், விஞ்ஞான மூலவள நிலையத்தாரின் பங்களிப்பு, அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்பு, மாணவர்களின் ஊக்கம், பெற்றோரின் கவனம், கல்விப்பணிப்பாளர்களின் ஒத்துழைப்பு போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மட்டக்களப்பு மாவட்டம் மேலும் கல்வியில் வளர்ச்சி காண வேண்டுமாயின் கல்விசார் தொடர்புடைய அனைத்து மட்டங்களிலும் அர்ப்பணிப்பு சிந்தனையுடன் பாடசாலையில் சேவை செய்யும் போது அவர்களின் கல்வி அறுவடை இரட்டிப்புப்பயனை அடையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

*தகவல் :- கல்வித்திணைக்களம் - மட்டக்களப்பு*

> அதிர்ஷ்டம் எதிர்ப்பட்டால் அதன் முன்முடியைப்பிடித்து வசப்படுத்து. ஏனெனில், அதன் பின்புறம் வழுக்கை.
>
> *லெனார்டோ டாவின்சி.*

> நீ நூறு வருடம் வாழ்பவனைப்போல் வேலை செய். நாளையே இறந்து விடுபவனைப்போல் சிந்தனை செய்
> பல்கேரியப்பழமொழி


Best Compliments from

**Dress Well**

Trinco Road,
Batticaloa.

T.P : 065 – 22079



Best Compliments from

AHILA HARDWARE

Bullding Materials Supplier

16, Station Road
Batticaloa.



# இது ஒன்றும் புதிய கதை அல்ல

*திரு . ஏ. நவரெத்தினராசா குரூஸ்*
*36/9, வைத்திசாலை வீதி,*
*மட்டக்களப்பு.*

மாசி பத்திற்குப்பிறகு சிவராத்திரிக் குழப்பத்தை விட்டால் அடைமழை பெய்வதற்கு சாத்தியம் இல்லை தான். ஆனால் இந்த வருடம் மாசி இரண்டாந்திகதி பிரதமையோடு பிடித்த மழை, பனிரெண்டு நாட்களைத் தாண்டியும் பெய்து கொண்டு தான் இருந்தது. இருபத்தினாலாம் திகதி சிவராத்திரி அது மட்டும் பெய்து விட்டுத்தான் ஓயும் போலும் …………… நிம்மதி இல்லாத மனத்தோடு ஒப்புக்கு இரா உணவை முடித்து விட்டு மனைவி விரித்த பாயில் இருந்து சுருட்டுப்புகைத்துக் கொண்டிருந்தார் மணியம் மாமா.

வெளியே மழை தூறலாகப் பெய்து கொண்டிருந்தது. என்ன உண்மையான உறவு முறை என்று யாருமே சிந்திப்பதில்லை. மணியத்தார் எல்லோருக்குமே மாமா தான். கதிரவெளிக்கிராமமே அவரை மாமா என்று தான் அழைத்தது. அவர் பிறந்து பருவம் தெரிந்த நாளிலிருந்து வயல் வாய்க்கால், மாடு கன்று என்று வாழ்ந்து வருபவர். உலக நிர்வாகம், நாட்டு நடப்பு வீட்டு நிர்வாகம் எதுவுமே அறியாதவர். மனைவியின் சாமர்த்தியத்தால் வீட்டு நிர்வாகம் ஒழுங்காக நடைபெற தானுண்டு, தன் வயலுண்டு என்று வாழ்ந்து வருபவர். குளத்து வெளிக்குள் மூன்று மாத்தையான் "வீஜிலெவனும்" வெருகம்புலைக்குள் மூன்றரை மாதத்தையான் "கொழுக்கிக் கொட்டானும்", முகவணைக்குள் மூன்று மாதத்தையான் "மாப்பிள்ளையும்" விதைத்து இன்று நூற்று இருபது நாட்களைத் தாண்டிவிட்டன. எல்லாக்கண்டமும் வெட்டிச்சூடு வைத்து அடித்து முழுச்சோலியும் முடித்து 'அப்பாடா' என்று இருக்க வேண்டிய நேரம் இது.

ஆனால் மழை தான் எல்லாவற்றையும் கெடுத்துப்போட்டுது……… வெட்டுக்கூட்டம் எல்லாம் வேலையற்று கிடக்குது. ஆனால் மழை விட்டிச்சோ……. ஒரு மனிசரையும் காண ஏலாது. பொங்கலுக்குக் காசு குடுத்தவனுகளிட வயலே கிடந்து அழியுது, புதுசாப்புடிச்சி அறுப்பானுகளோ…….. எல்லா வெள்ளாமையும்

பாடத்தில் கிடக்கு, கொட்டுப்பட்டது போக மிச்சம் முளைச்செழும்பும்... ஆரிட்ட போற........ இந்த மழை இல்லாட்டி வட்டை இந்தளவில ஒருமாதிரி கரைப்பட்டிருக்கும்...... எப்ப இந்த மழை ஓயும்....... நீண்ட பெருமூச்சு வெளிப்பட சுருட்டுத்துண்டைத் தூக்கி எறிந்தார் மணியம்மாமா. கண்களை மூடி மழையில் அமிழ்ந்து கொண்டிருக்கும் தனது விளைந்த வயல்களை கனாக்கண்டு கொண்டிருந்தவர் கண் அயர்ந்து போனார்.

சுருட்டுத்தவனத்தில் சாமத்தில் கண் விழித்தவர் வெளியே மழை பெய்யும் அரவம் கேட்காததை உணர்ந்து வாரிச்சுருட்டிக் கொண்டு கதவைத்திறந்து கொண்டு முற்றத்திற்கு வந்து வானத்தை அண்ணாந்து பார்த்தார். வானம் வெள்ளி பூத்து வெளித்துக் கிடந்தது. மழை முகில்களைக்காணவில்லை. இனி வெளிக்கும். இந்தமுறை சிவராத்திரி மழை முன்னுக்குப் பேஞ்சி போட்டு. தன்னை அறியாமலே முணுமுணுத்தார் மணியம்மாமா. எப்படித்தான் கணக்குப் போட்டுப்பார்த்தாலும் வெளித்த வானம் இப்படியே வெளித்து விட்டால் சிவராத்திரிக்கு பத்து நாட்கள் இருக்கிறது. அதற்குள் கரைப்பட்டு விடலாம் என்று கணக்குப் போட்டுப்பார்த்தது அவர் மனம். மீண்டும் படுக்கையில் சரிந்தவருக்குத் தூக்கம் வரும் என்ற நம்பிக்கை இல்லாது போய் விட்டது. பொழுது கிளம்பப்புறப்படவேணும், பள்ளக் கண்டத்துக் காரனுகள் நாளைக்கு வெட்ட மாட்டானுகள். தண்ணிவடிய நாலஞ்சி நாளாகும். ஆனா திடல்பகுதிக்காரனுகள் எப்படியும் நாளைக்கு வெட்டத்தான் பாப்பானுகள். இந்த நாலஞ்சி நாள் இடைவெளிக்குள்ள எப்பிடி எண்டாலும் ஒரு வெட்டுக்கூட்டத்த அமத்தவேணும். தனக்குள் திட்டமிட்டார் மணியம் மாமா, இவன் சதாசிவம் கூட்டத்திற்கு கனக்கையா வெள்ளாம இல்ல எண்டு கேள்வி, விடிய சதாசிவத்த படுத்தபாயிலயே அமத்த வேணும். எப்போது விடியும் என்று காத்துக்கிடந்த மணியம்மாமா, நிலம் தெரியும் முன்னமே காலைக்கடன்களை முடித்துவிட்டு மனைவி கொடுத்த தேனீரைக்குடித்துக் கொண்டு நிலம் தெரியும் மட்டும் காத்திருந்தார். ஒழுங்கையில் ஆள்நடமாட்டம் தெரிய வேகமாகப் புறப்பட்டு சதாசிவத்தின் வீட்டை நோக்கி நடந்தார்.

அவர் மனம் நிம்மதி இழந்து கிடந்தது. செய்த வெள்ளாமைத்தொழில் கைவிட்டுப்போனால் அடுத்த போகத்திற்கு வெள்ளாமை செய்யமுடியாது. பட்டகடனை எப்படி கொடுப்பது ? யாரிட்டயும் கையேந்த எனக்கு விருப்பமில்லை என்ற அவருடைய கொள்கை அடிபட்டுப்போய் விடும்.
'சதாசிவம்'........... 'சதாசிவம்'...............
ஓம்......... ஓம்..........
பதில் சதாசிவத்தின் இருப்பைத் தெரிவித்தது.

மணியத்தார் திண்ணையை நெருங்கும் போது, நீளக்காற்சட்டையும், நீளக்கை சேட்டும் அணிந்து வாயில் ஒட்டி இருந்த சீனியைத்தட்டி விட்டுக் கொண்டே வெளியில் வந்தான். வேளாண்மை தரும் அரிப்பைத்தவிர்க்க யாரிடமாவது பழைய நீளக்காற்சட்டை வாங்கி அணிந்து கொள்வது வெட்டுக்காரர்களுக்கு இப்போது வாடிக்கையான விடயம்.
"என்ன அம்மாச்சி......... பொழுது காரிக்க முன்ன"
என்ன சதாசிவம்............. வெட்டப் போகத்தானோ........
ஓம்........ இனி ஒரு மாதிரி வெட்டாரும் புடிச்ச வயல் எல்லாம் சும்மா கிடக்கு அஞ்சாறு ஏக்கர் உப்பட்டியும் பட்டுத்து வாங்கின காசும் திண்டொழிஞ்சி....... வெட்டத்தானே வேணும் ?

மணியத்தார் வீடுதேடி வந்த விடயம் விளங்கித்தான் சதாசிவம் போடுகிறான் என்பது மணியத்தாருக்கு விளங்காமலில்லை. இனிப்படுத்தென்ன செய்யிற...... வட்ட கிடந்து அழியுது...... மௌனம்.......

இது சிறிய இடைவெளிதான் ஆனால் இச்சிறிய இடைவெளிக்குள் பொதிந்திருக்கும் அர்த்தமோ மிக அகலமானது. "வந்திட்டான் போடி வாசலடிக்கு எண்ட நடப்பை நான் காட்டவேணும் உருவுறத்துக்கு இதை விட்டால் இனி ஏலாது என்றது வெட்டுக்காரனின் மனம். இந்த நாயிட வாசல் எல்லாம் நான் மிதிக்க வேண்டி வருவது வருஷா வருஷம் வீடு தேடி வருகிற எங்கட பரம்பரை வெட்டுக்கூட்டம் இந்தப்பிரச்சினையால் வராம விட்ட புறகு நமக்கு கணகாட்டுத்தான்....... என்ன செய்யிற எப்படியும் வயலை வெட்டி கரையேற வேண்டும் என்றது போடியின் மனம்.
"என்ன சதாசிவம் எண்ட வயல் வெட்டிற இல்லையா" ?
'ஏன் இல்ல, வெட்டத்தான் வேனும் இல்ல எண்டு சொல்லலாமா....'"?

'அப்ப எப்ப இறங்கிற எண்ட வயலுக்க'.........?
'எப்ப எண்டு சொல்லுற? இழுத்தான் சதாசிவம்,
'வாற, புதன்கிழமை இறங்க ஏலாதா........?
'புதன்கிழமை....... சிரித்தான் சதாசிவம்,
மணியத்தார் பேசவில்லை ஆழம் பார்த்தார்,

"நான் மட்டும் செய்யிற வேலையா........ நான் மட்டும் என்றால் சட்டுப் புட்டென்று செய்து தருவன் கூட்டத்தில் பதினைஞ்சி பேர் இருக்கிறான் எல்லாரிட்டையும் கேட்டுத்தான் சொல்லலாம்...."
"நீ மோனக்காரன். சொன்னாக் கேக்கத்தானே வேனும், அதைப்பிடி காசு வாங்கின வயல் எல்லாம் சும்மா கிடக்கு........ சரி எனக்கும் ஒரு நாளச் சொல்லி நாளுக்கு இண்டைக்கு வந்து அறுத்துப் போட்டு வா........."

"சே......... கூட்டக்காரணிட்ட கேக்கணும் ராவைக்கு வாங்க முடிவு சொல்லுறன்." சதாசிவம் தீர்மானமாகக் கூறிவிட்டான்.

மணியத்தாரின் நெஞ்சம் குமுறியது. "கூலிக்காற நாய்..... என்னிட்ட நடப்புக்காட்டுது.... வெட்டு முடிஞ்சால் மம்பட்டியோட நக்கித்திரியும்...... இவ்வளவுக்குள்ளையுந்தான் இவண்ட நடப்பு இருந்தாலும்......

அவரது தேவை ஆத்திரத்தை அடக்கியது. "சரி, சதாசிவம் கேட்டுவை ராவைக்கு வாறன்" மணியத்தார் திரும்பி விட்டார். இந்நாயை மட்டும் நம்ப ஏலாது அவரது மனம் அவரை எச்சரித்தது. வெட்டுக்கூட்டத்தின் தலைவன் மோனைக்காரன் ராவுக்கு வா என்றால் அதன் அர்த்தமே வேறு என்பது மணியத்தாருக்குத் தெரியும். தனது முல்லைக்காரனிடம் அரைப்போத்தல் வடிசாராயத்தைக் கொடுத்து சதாசிவத்தின் வீட்டிற்கு அனுப்பிய அரைமணி நேரத்தால் இருட்டையும் பொருட்படுத்தாமல் எழுந்து சதாசிவத்தின் வீட்டைப் போயடைந்தார் மணியம் மாமா.

போடியாரைக்கண்ட முல்லைக்காரன் எழுந்து மரியாதையாக ஒதுங்கிவிட, "வாங்க, அம்மாச்சி," என்று அழைத்தான் சதாசிவம், நல்ல பருவம் அவனுக்கு.
"இருங்களன்"
'நேரமில்லை..... சாப்பாடு போட்டாப்பில கிடக்கு......"
"எங்களுக்கு பதினைஞ்சு ஏக்கர் தான் கிடக்கு எப்பிடியும் ஐஞ்சி நாளையில முடியும் பொறுத்ததோடு பொறுத்துக்குங்க, வாற சனிக்கிழமை, கட்டாயம் உங்கட வயலில தான் இறங்கிற...... ஆனா முப்பது மரைக்கால்....... தந்திடனும்'' சிரிப்பு அவனுக்குள். வாற சனியெண்டால்" இண்டைக்குத் திங்கள்...... ஏன் சதாசிவம் அதக்கிடையில் இறங்க ஏலாதோ....." முப்பது மரைக்கால் கூலி அவரது இதயத்தை முள்ளாய் குத்தியது.

'ஏலாது அம்மாச்சி....... எதுக்கும் இடையில் பாப்பம், ஒவ்வொரு நாளும் அரைப்போத்தலுக்கு அடிகோலுகிறான் சதாசிவம் என்று மணியத்தார் புரிந்து கொண்டார் சரிவாறன்" என்று புறப்பட்டார் மணியம்மாமா......

அவர்மனம் வேதனையால் கனத்தது. ஆனால் சதாசிவம் நிறைவெறியில் அழியட்டும் அப்பதான் தெரியும் இவனுகளுக்கு எங்கட அருமை சிரித்தான் சதாசிவம். எவ்வளவு குடுத்தெண்டாலும் சித்தாண்டிக்கூட்டத்தையாவது பிடிச்சி எண்ட வெள்ளாமைய வெட்ட வேணும்...... அதக்குப்புறகு காட்டிறன் நான் ஆர் எண்டு மனதுக்குள் கறுவிக் கொண்டு நடந்தார் மணியத்தார். ஒரு கிழமையாக ஓடி, ஓடி எல்லா வெட்டுக்கூட்டத்தையும் விசாரித்தும், கெஞ்சியும் தோற்றுப் போய் கடைசியாக இரண்டாயிரம் ரூபா ஏக்கருக்குக் கொடுத்து வயல் முழுவதையும் வெட்டியும் முன்மாதிரியில் நட்டப்பட்டுப் போனார் மணியம்மாமா.

பொல்லாத ஆத்திரம் மனத்துக்குள் திட்டம் போட்டு தன்னுடைய பிழைப்பில் மண் போட்டு விட்டார்கள் என்று நினைத்தார் அவர். ஊரில் யாருமே உதவி செய்யவில்லை. இனிமேல் தானும் யாருக்கும் உதவி செய்வதில்லை. வரம்பு வேலைக்கும் இனி ஆள் வெளியில் இருந்தே கொண்டு வர வேண்டும்.

முன் மாரிக்குத்தான் இந்த சேட்டை சித்திரைக்குப்பிறகு மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு தன்னிடம் தான் வரவேண்டும். காலபோகப்பாய்ச்சல் காணி தனக்கே அதிகம் என்ற பிடிமானத்தில் சிந்தித்தார் மணியத்தார்.

சித்திரை வருஷம் கொண்டாடிய கையோடு முல்லைக்காரன் வாசலில் வந்து நின்றான்.

'போடியார்...... வரம்பு வேலைக்கு சதாசிவம் ஆக்கள் வாறானுகளாம் நாளைக்கு ஆக்கள் இறக்கையோ........?

''ஆரு சதாசிவம் கூட்டமோ...... ஆத்திரம் தெரிந்து......

''ஓம் போடியார்..... தொழில் இல்லாம கஷ்டப்படுகிறானுகள், சித்தாண்டி ஆக்கள் வேலைக்கு வந்தவனுகள் நாட்கூலியாக நூற்றம்பது கேக்கிறானுகள்...... சதாசிவம் ஆக்கள் என்றால் நூற்றி இருபத்தஞ்சி ருபா,'' பேசாமல் இருந்தார் மணியத்தார்.

சிறிய இடைவெளிக்குப்பின் திரும்பவும் கேட்டான் முல்லைக்காரன்,

"சதாசிவம் ஆக்கள நாளைக்கு வரச்சொல்லயோ," அவன் முகத்தைப்பாராமலே 'ம்'..... என்று சம்மதம் தெரிவித்தார்.

சதாசிவம் கூட்டம் வருடம் முழுவதும் உழைப்பதுமில்லை, வருடம் முழுவதும் சாப்பிடுவதுமில்லை. அவர்கள் உழைப்பதும் வயிறு நிறையச்சாப்பிடுவதும் குடிப்பதும் வருடத்தில் கொஞ்ச நாட்கள்தான். இந்த ஞானம் ஏற்பட்டதால் மணியத்தார் சரி என்று சொல்லவில்லை, முன்மாதிரி நட்டத்தை எப்படியும் காலபோகச் செய்கையில் ஈடு செய்ய வேண்டும். ஆத்திரம் என்னவோ மாறாமலே இருந்தது.

ஊரின் அடுத்த மூலையில் நாளைக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் சதாசிவம் தன் மகனை சுந்தரத்தின் கடைக்கு அனுப்பினான், ஒரு கொத்தரிசி கடனாக வாங்கி வர.

பிறந்த திகதியில் இறந்த
உலகப்புகழ் பெற்ற கவிஞர் -
ஷேக்ஸ்பியர்

ஆண்களின் பருவங்கள் ஐந்து.

| | |
|---|---|
| சைசவம் | 5 வயது வரை |
| வாலிபம் | 15 வயது வரை |
| கௌமாரம் | 30 வயது வரை |
| யௌவனம் | 40 வயது வரை |
| வார்த்திகம் | 40 க்கு மேல் |


Best Compliments from

RELYN AGENCY

For New & Re-conditioned Motor Cycles and Genuine Spare Parts

132/3A, Trinco Road
Batticaloa.

T.P : 065-22903

Best Compliments from

HARANS AUTO STORES

261 / 1, Trinco Road
Batticaloa.

# வாழ்த்துப்பெறும் கலைஞர்கள்



| | |
|---|---|
| இயற்பெயர் | கந்தப்பன் விநாயகமூர்த்தி |
| புனைபெயர் | வைத்தியர் விநாயகமூர்த்தி |
| பிறந்த திகதி | 1919 . 08 . 10 |

கௌரவிக்கப்படும் துறை சித்தவைத்தியம்

தகைமைகளும் பணிகளும்

- கிழக்கு மாகாண சித்தவைத்திய சங்கத்தின் ஆரம்ப கால உறுப்பினராகவும், தற்போது அதன் தலைவராகவும் பதவியேற்று, பாரம்பரிய சித்தவைத்தியத்தின் முன்னேற்றத்துக்காக உழைத்து வருகின்றார்.
- மட்டக்களப்பில் நடந்த தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் "மட்டக்களப்புத்தமிழரின் பழக்கவழக்கங்களும் அவற்றில் சுகாதாரமும்" என்னும் தலைப்பில் ஆராய்ச்சிக்கட்டுரை ஒன்று வாசித்து வைத்தியத்துறைக்கு மெருகூட்டிய சிறப்புத்துவம் கொண்டவர்.
- இயற்கை மூலிகைகளால் பல்வேறுபட்ட நோயாளிகளைக் குணப்படுத்தும் தனித்துவம் இவரது வைத்தியமுறைகளின் சிறப்பம்சமாகும்.

வேறுதகைமைகள்

- ஆரம்பகாலத்தில் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.
- 1955 ம் ஆண்டில் நொத்தரிசுக்கான பரீட்சையில் சித்தி எய்தி, நொத்தரிசாகவும் பணியாற்றி வருகின்றார்.
- சமய வளர்ச்சிக்காகப்பெரும் தொண்டாற்றி வருவதுடன், 1960 - 1971 ம் ஆண்டு வரை பூசகராகவும் பணியாற்றியுள்ளார்.
- விளையாட்டுத்துறையிலும் ஈடுபாடு கொண்டுள்ளதோடு 1947 ம் ஆண்டில் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் நடத்தப்பட்ட மல்யுத்தப்போட்டியில் முதலிடத்தைப் பெற்று கலாசாலைக்குப்பெருமை சேர்த்தவர்.

பெற்ற பாராட்டுக்கள்

- கிழக்கு மாகாண சித்த வைத்திய சங்கத்தினால் 1997 ம் ஆண்டில் 'வைத்தியத்திலகம்' என்னும் பட்டமளித்துப் பாராட்டுப்பத்திரம் வழங்கியுள்ளது.



| | |
|---|---|
| இயற்பெயர் | வெற்றிவேல் விநாயகமூர்த்தி |
| புனைபெயர் | வெற்றிமகன், பன்குடாவெளிமூர்த்தி, வேவி, வள்ளி, விநாயகி |
| பிறந்த திகதி | 1924.09.15 |
| முகவரி | 14, சுப்பையா வீதி - மட்டக்களப்பு |
| கௌரவிக்கப்படும் துறை | ஆக்க இலக்கியம் |

தகைமைகள்

- சிறந்த ஆசிரியராக, அதிபராக மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றியவர்.
- பழந்தமிழ் இலக்கியங்கள், சமயம், அரசியல் எனப்பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்ட பன்முக ஆய்வாளர்.

பணிகள்

- எழுத்தாளராக, கவிஞராக, நாடக ஆசிரியராக, ஆய்வாளராக, பேச்சாளராக, வானொலிக் கலைஞராகத் தம்மை இனங்காட்டி அதன் மூலம் மட்டக்களப்பு மாண்பை வெளியுலகுக்கு வெளிக்காட்டியவர்.
- கவிதை, கட்டுரை, இலக்கிய இதிகாச ஆய்வுகள், குடியியல், குடும்பவியல், சிறுவர், சித்திரம் எனப் பல்வேறு துறைகளிலும் இவரின் புலமை பரந்து விரிந்தது.

வெளியிட்ட நூல்கள்

- பாலர் பாமாலை (கவிதை)
- பாட்டும் விளையாட்டும் (சிறுவர்)
- கடவுள் எங்கே (தத்துவ ஆய்வு)
- பொன்னாச்சி பிறந்த மண் (சிறுகதை)
- பொதுப்பாமாலை (கவிதை)
- கண்ணகையும் தன்னகையும் (இதிகாச ஆய்வு)
- மாறிவரும் மட்டக்களப்புத் தமிழகம் (ஆய்வு)
- கையெழுத்துப்பிரதிகள் பலவும் இவரால் வெளியிடப்பட்டு பலரது பாராட்டையும் பெற்றுள்ளன.
- இவை தவிர சஞ்சிகைகள், பத்திரிகைகளில் பாலர் சிறு கதைகள், கவிதை, கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

வேறு பணிகள்

- 1951 ம் ஆண்டு ஆசையின் வேகம் என்னும் பேச்சோடு இலங்கை வானொலியில் வானொலிக்கலைஞராக இடம்பிடித்துக் கொண்டதோடு தொலைக்காட்சியிலும் பல நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.
- இலக்கியத்துறையோடு மாத்திரமல்ல சமூகப்பணியிலும் அயராது உழைத்தவர்.
- பகுத்தறிவுச்சிந்தனை வட்டம் என்ற அமைப்பின் தலைவராகப் பணிபுரிந்து வருகிறார்.
- பஞ்சவர் முத்தமிழ்ப்பண்ணை, சைவ சமயமுத்தமிழ்ப்பண்ணை, பாலகி வாலிபர் சபா என்ற அமைப்புக்களின் முன்னோடியாகவும், முற்போக்குச் சிந்தனாவாதியாகவும், செயல் வீரராகவும் சமூக முன்னேற்றத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.
- கூட்டுறவுத்துறையில் வெள்ளி விழாக் கொண்டாடிய மூத்த தலைவர்.
- கமநலச்சேவையில் பல பதவிகள் கண்டவர்.
- கிராம அபிவிருத்திச்சங்கம், ஐக்கிய நாணய சங்கம் என்பவற்றைத்தமது பகுதிக்கு உருவாக்கித் தந்தவர். ஊர்ப்பஞ்சாயத்தை நடத்திய தர்ம சிந்தனையாளன்.
- எல்லாவற்றுக்கும் மேலாக விஞ்ஞான பூர்வமான விவசாயியுமாவார்.
- அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் நேரத்தையும் பொருளையும் செலவிட்டு மட்டக்களப்பு வரலாற்றில் மறக்க முடியாத இலக்கியவாதிகளில் ஒருவராகத் தம்மை இணைத்துக் கொண்ட சமூக நலன் விரும்பியுமாவார்.

பெற்ற பாராட்டுக்கள்

- மாண்புமிகு ஜனாதிபதியவர்களால் 'கலாசூரி' பட்டம் பெற்றவர்.



இயற்பெயர் சோமசுந்தரம் ஸ்ரீகமலச்சந்திரன்
பிறந்த திகதி 1950.10.06
முகவரி பார் வீதி, மட்டக்களப்பு

கௌரவிக்கப்படும் துறை ஓவியம்

அனுபவம்

- ஓவியப்பணியில் 34 வருடங்கள். ஓவியக்கலை
- ஆசிரியராக 24 வருடங்கள்.

தகைமை

- தேசிய சித்திரக்கலைத்தராதரம்

பணிகள்

- சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை கல்வியியற் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளர்.
- இவற்றின் மூலம் மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களது ஓவியக் கலையின் வளர்ச்சிக்குப் பெரும்பணியாற்றியுள்ளார்.

சாதனைகள்

- ஓவியக் கண்காட்சிகள் பல நடத்தியமை (1981, 1991, 1998)
- சர்வதேச அனைத்திலங்கை, மாவட்ட ரீதியில் பரிசில்களும், பாராட்டுப்பத்திரங்களும், தங்கப்பதக்கமும் பெற்றமை.
- ஓவியக்கலையில் தேர்ச்சிமிக்க பல மாணவர்களை உருவாக்கியுள்ளமை.
- சர்வதேச ரீதியில் தங்கப்பதக்கம் யப்பானிய நாட்டின் வெள்ளிப்பதக்கங்கள் என்பன இவரது மாணவர்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆக்கிய நூல்கள்

- சித்திரக்கலை க.பொ.த (சா.த)
- வர்ணப்பயிற்சி
- சித்திரம் ஆண்டு 6 - 11
- மட்டக்களப்பு மாவட்டப்பாடசாலைகளுக்கான சித்திரக்கலைப் பாடத்திட்டத்தைத் தொகுத்து வழங்கியது.

வேறு பணிகள்

- சலுசல நிறுவனத்துக்கும் காத்தான்குடி சீத்தை அச்சிடும் நிறுவனத்துக்கும் சீத்தைச் சேலை அலங்காரங்கள் நூற்றுக்கணக்கில் வடிவமைத்துக் கொடுத்தமை.
- விளம்பரப்பலகைகள், திரைச்சீலைகள் வரைந்துள்ளமை.
- சிலைகள் பலவற்றை உருவாக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்க பணிகளாகும்.



| | |
|---|---|
| இயற்பெயர் | திருமதி சாந்தாவதி நாகையா |
| புனைபெயர் | ஔவையார் |
| பிறந்த திகதி | 1935.08.25 |
| முகவரி | திசவீரசிங்கம் சதுக்கம் - மட்டக்களப்பு |

கௌரவிக்கப்படும் துறை இசை

தகைமைகள்

- 1957 - 1960 அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் இசைப்பயிற்சி
- பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் இசைத்துறையில் விசேட பயிற்சி

பணிகள்

- 1972ல் இசை ஆசிரியையாக நியமிக்கப்பட்டு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள பாடசாலைகளிலும் பணியாற்றி பல்வேறு இசைக்கலைஞர்களை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு.
- 1992ல் மட்டக்களப்பு ஆசிரிய ஆலோசகராகவும், கல்வியியற் கல்லூரி, தொலைக்கல்வி நிறுவனம் ஆகியவற்றில் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணிபுரிந்து பலதிசைகளிலும் தனக்கென இசை மாணவர்களை உருவாக்கியுள்ளார்.

சாதனைகள்

- இஸ்லாமிய இசை நிகழ்ச்சிகளில் கலந்து இசைநிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.
- இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம், தொலைக்காட்சி ஆகியவற்றில் பாடிய சிறப்புத்துவம் பெற்றுள்ளார்.
- 1963-1964 ம் ஆண்டுகளில் கொழும்பு ஆடிவேல் விழாவில் கச்சேரிகள் நடத்தியுள்ளமை.

வேறுபணிகள்

- ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனைகள்
- பொது நிறுவனங்களில் பண்ணிசை, கவிப்பிரசங்கம், கச்சேரிகள் நடத்துதல்
- சமய வளர்ச்சிக்காக உழைத்தல்.
- விஷ வைத்தியம் செய்வதிலும் சிறப்புப் பெற்றுள்ளார்.
- சமாதான நீதவானாகவும் பணி புரிகிறார்.

பெற்ற பாராட்டுக்கள்

- இந்துக்கலாசாரத் திணைக்களத்தினால் 'கலை மணி'
- மட்/கலாலயத்தினால் கலாபூஷணம்
- வாழைச்சேனை பொலிஸ்பிரிவு தங்கப்பதக்கம் வழங்கி "இசைக்குயில்" என்ற பட்டத்தை அளித்துள்ளது. "இசைச்செல்வி", "ஈழத்து ரமணியம்மாள்", "ஈழத்துச் சுந்தராம்பாள்" என்ற பட்டங்களைப் பெற்றுள்ளார்.



| | |
|---|---|
| இயற்பெயர் | கணபதிப்பிள்ளை நல்லதம்பி |
| புனைபெயர் | சாத்திரியார் |
| பிறந்த திகதி | 1928.06.31 |
| முகவரி | பார்வீதி, மட்டக்களப்பு |
| கௌரவிக்கப்படும் துறை | சோதிடம் |

கல்வி

- ஆரம்பக்கல்வி பயின்றவர்
- சோதிடக்கலையைப் பிரபல சோதிடராக விளங்கிய இவரது தகப்பனார்
- கணபதிப்பிள்ளையிடம் பயின்றவர்.

பணிகள்

- 1956 ம் ஆண்டிலிருந்து சுயமாக இப்பணியில் ஈடுபட்டவர்.
- மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமல்ல நாட்டின் பல்வேறு பகுதி மக்களின் நம்பிக்கைக்குரியவராக விளங்குகிறார்.
- பலதரப்பட்ட மக்களது நல்வாழ்க்கைக்கும், மனோவியல் ரீதியாகத் தன்னம்பிக்கையூட்டி, இப்பகுதி மக்களது வாழ்க்கையோடு இணைந்த ஒருவராகத் திகழ்கிறார்.
- கைரேகை பார்த்தல், மை பார்த்தல் என்பன இவரது சோதிடக்கலையில் சிறப்பம்சங்களாகும்.
- முதிர்ந்த அநுபவத்தால் இவர் இணைத்து வைத்து மகிழ்ச்சியுடன் இல்லறம் நடத்தும் குடும்பங்கள் ஏராளம்.
- துயரப்பட்டவர்களுக்குத் தன்னம்பிக்கையூட்டி, வாழ்வில் ஒளியூட்டிய நம்பிக்கை நட்சத்திரம்.
- பரம்பரைத்தொழிலான இதனை இவரின் பின் முன்னெடுத்துச் செல்வதற்குத் தனது புதல்வர் ஒருவரைத்தயாரித்து வருகிறார் 43 வருட அநுபவங்கள் கொண்ட இந்தச்சோதிடக்கலைஞர்.
- இவர் வசிக்கும் வீதிக்கு சாத்திரியார்வீதி என மாநகரசபை பெயர் சூட்டியிருப்பது இவரது பணிக்குச்சிறந்த சான்றாகும்.

**இத்தகைய அரும்பணியாற்றும் பெரும் கலைஞர்கள் பல்லாண்டுகள் தொடர்ந்து பணிபுரியவேண்டுமென கலாசாரப்பேரவை வாழ்த்துகின்றது.**

**தகவல் : கலாசாரப்பேரவை**

**தொகுப்பு : நிர்மலா ஜெயராஜா**

# நீண்ட கால நேரசூசி

*எ . நவரத்தினராஜா குரூஸ்*

ஊர் ஓரமாய் ஓராயிரம் நிலப்பரப்பில்
செந்நெல் செழிக்க
மாடு பூட்டிப் போரடித்து மனம் மகிழ்ந்து போயிருந்தோம்
பட்டியடி இத்திமரம் கட்டி விட்ட வீட்டிற்குள்ளே
கோகுலத்துக் கடவுளுக்கு கொத்தரிசிப் பொங்கலிட்டு
குதூகலித்துப் போயிருந்தோம்........

கார்கொண்ட மேகம் கதிர் அறுக்க ஓடிவிடும்;
நேர் கொண்டல் வீசும், நிம்மதியாய்த் தூக்கம் வரும்
சித்திரைக்கு ஊஞ்சல்கட்டி சின்னன் பெரிசெல்லாம்
"உத்தி" க் கிளப்பும்
ஊஞ்சல் ஊரெல்லாம் பார்த்து வரும்
வைகாசிப் "பருவம்" வயது வந்த குமரிகளை
கைபிடித்தழைத்து, நல்ல கணவன்மாரைக் கூட்டி வரும்
வீட்டிற்குள்ளே "சோறு" போட
நாங்கள் வெளியிருந்து குதூகலிப்போம்.
அடங்காத "புளுக்கம்" வரும் அதை அடக்கும் நேரம் வரும்
கச்சான் அடிக்கும்.
கண்ணகி கோயில் கதவெல்லாம் திறந்து விடும்
தீக்குளித்து, தீராத நோய்களையும் தீர்த்து வைப்போம்........
கொம்புடைப் போம் மீண்டும்
குடைபிடித்து வயல் நடப்போம்........
எங்கு தொலைந்ததிந்த நெடுங்கால நேரசூசி..........?
ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்தாலும்
ஒரு கோட்டில் கோள்கள் எல்லாம்
ஒன்றாய் வருவதாலும்
சீ... என்று மனம் நொந்து சிதைந்ததா......... ?
எங்கு தொலைந்ததிந்த நெடுங்கால நேரசூசி....... ?
சொல்லுவார் யாருமில்லை......
சொல்கின்றார் வேறு ஒன்று.
புது நேரசூசியா.......
புகுத்தியவர் யாரிங்கே......
அன்றாடம் எங்கள் அந்நியமாய்......
"அகதியம்" எங்கள் வாழ்க்கையாய்......
புகுத்தியவர் யார் இந்த புது நேரசூசியை....... ?

ஓம்... ஓம்.... ஓசோன் படலம் தான்
இல்லை என்று சொல்லாத பிள்ளை குட்டிக்காரன் நான்.
இருந்தும்.......
எங்கு தொலைந்ததெங்கள் நெடுங்கால நேரசூசி....... ?

# விசேட விருதுகள் பெற்ற மூத்த கலைஞர்கள்

**மண்முனை வடக்குப்பிரதேசக்கலைஞர்கள் மூவர் அண்மையில் விசேட விருதுகள் பெற்றுப்பாராட்டப்பட்டுள்ளனர். அவர்களைப்பாராட்டிச்சிறப்பிப்பதில் கலாசாரப்பேரவை பெருமை கொள்கிறது.**



**கிழக்குப்பல்கலைக்கழகத்தினால் இலக்கியக்கலாநிதி பட்டம் பெற்றுள்ள தமிழ் ஒளி வித்துவான் சாமுவேல் இமானுவேல் கமலநாதன்**

- தமிழ் ஒளி வித்துவான் சா.இ.கமலநாதன் அவர்கள் தமிழ் ஆராய்ச்சி உலகுக்கும், கல்வி உலகுக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் மிகுந்த கணிப்புக்குரியவை.
- பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, சு.வித்தியானந்தன், வீ.செல்வநாயகம் ஆகியோரின் கீழ் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் தமிழ் வித்துவான் கல்வியைப்பயின்ற இவர் பேராசிரியர் எம்.என்.ராயின் கீழும் பயின்றுள்ளார். இவர் தமது மரபுவழித் தமிழ்க்கல்வியினை பண்டிதர் செ.பூபாலப்பிள்ளை இலக்கியக்கலாநிதி மகாவித்துவான் F.X.C. நடராஜா, முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி ஆகியோரிடமும் பயின்றுள்ளார். பின்னர் இவர் கலைமாமணி ( B.A ) பட்டத்தினைப் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார்.
- தமிழ் ஆராய்ச்சி உலகுக்கு இவரது மிகக்குறிப்பிடத்தக்க பணிகள் அவரது பதிப்பு முயற்சிகளாகும். அவரால் பதிப்பிக்கப்பட்ட தமிழ் ஆராய்ச்சி மட்டக்களப்பு மாநாட்டு மலர், விபுலானந்தர் நூற்றாண்டு விழா மலர், சாகித்திய விழா மலர் என்பனவும், அவர் முக்கிய பதிப்பாளராக இருந்து பதிப்பித்த விபுலானந்த அடிகளாரின் எழுத்துக்களைத் தொகுத்துத்தரும் நான்கு தொகுதிகளும் தமிழ் ஆராய்ச்சி உலகுக்கு மிகுந்த பயன்தருவன.
- இவரது இத்தொகுப்பு முயற்சிகள் விபுலானந்தர் இயல் என்ற இயலினை உருவாக்க அடித்தளமிடும் பாரிய முயற்சிகளாகும்.
- இதற்கும் அப்பால் அவர் தமிழ் இலக்கியம், இலக்கணம் கலாசாரம், பிரயாணம் சம்பந்தமாக எழுதிய கட்டுரைகள் அதிகம். இவற்றோடு இவர் சிறுகதை ஆசிரியராகவும், கவிஞராகவும், நாடக நெறியாளராகவும் இருந்துள்ளார். பேராசிரியர் சு.வித்தியானந்தன் தயாரித்தளித்த நாடகத்திலும் நடித்துள்ளார்.
- அதன்பின் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்த காலத்தில் இந்நாடக மரபை ஈழத்தில், குறிப்பாக மட்டக்களப்பில் வளர்த்தெடுத்துள்ளார்.
- 1960 களில் பேராசிரியர் சு.வித்தியானந்தனின் ஈழத்துத்தமிழ் நாடகத்திருப்பு முனைகளாக அமைந்த கூத்துக்களுக்குப்பின்னணியில் இருந்து இவர் செய்த பணிகள் அளப்பரியன. சு.வித்தியானந்தன்

அவர்களுடன் இணைந்து ஈழத்துத்தமிழ் நாடக மரபின் மீள் கண்டுபிடிப்பு இயக்கத்தின் மூலவர்களுள் ஒருவரானார்.

- மட்டக்களப்பின் கல்வி வளர்ச்சிக்கு இவராற்றிய பணிகள் அதிகம். 1960 களில் மட்டக்களப்பின் பல்கலைக்கழக புதுமுகவகுப்புக்களை ஆரம்பித்த ஆசிரியர்களுக்கு கல்வி பயிற்றி இன்றைய கல்விமான்கள், புகழ் பெற்ற அதிபர்கள், வெளிவாரிப்பட்டதாரிகள் கிழக்கு மாகாணத்தில் உருவாகவும் அத்திவாரமிட்டார். தமது உடல் நிலை, பதவியுயர்வுகள், வசதியான வாழ்வு என்பதைக்கணக்கில் கொள்ளாது கல்வி அபிவிருத்திக்காக அர்ப்பணிப்போடு ஆற்றிய சேவைகள் எல்லோராலும் கௌரவத்தோடு நினைவுகூரப்படுகிறது.
- மட்டக்களப்பிற்கு நீண்டகாலம் பணிகளுக்காகவரும் வெளிநாட்டவர்கள், ஆய்வுக்காக வரும் வெளிநாட்டுப்பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தவர்கள் இவரிடமே தமிழ்க்கல்வியை மாத்திரமல்ல ஆய்வுக்கான ஆலோசனைகளையும் பெறுகிறார்கள்.
- கிழக்குப்பல்கலைக்கழக உருவாக்கலிலும், வளர்ச்சியிலும் இவருக்கு அதிக
- பங்குண்டு. கிழக்குப்பல்கலைக்கழகம் தோற்றுவிப்பது பற்றி அறிக்கை சமர்ப்பிக்க அப்பாப்பிள்ளை ஆணைக்குழு மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டபோது, தங்குமிடத்தை மாத்திரமல்ல, உத்தியோக பூர்வமற்ற முறையில் ஆலோசனைகள், பல்வேறு உதவிகள் தந்து பின்னணியில் நின்று இயக்கியவர் இவர்.
- கலைப்பீடம் ஒன்று கிழக்குப்பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்க வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தியதுடன் 1992 ல் அப்பீடம் ஆரம்பிக்கப்பட்ட போது, கலைப்பீடச்சபை அங்கத்தவராக நியமிக்கப்பட்டு இன்று வரை பணிபுரிந்து வருகின்றார். இவரது ஆலோசனைகள் கலைப்பீடத்தின் கல்வி வளர்ச்சிக்கு மிகுந்த உதவிபுரிகின்றன.
- தமிழ்ப்புலமையாளரான இவர் தமிழ்த்துறை சம்பந்தமான விடயங்களில் அதிக பங்களிப்புச்செய்வதுடன் கிழக்குப்பல்கலைக்கழக பாடவிதான உருவாக்கத்திலும் கணிசமான பங்களிப்புச்செய்துள்ளார்.
- தற்சமயம் அவர் செய்து கொண்டிருக்கும் பாரத அம்மானை பதிப்புப்பணியும், ஆராய்ச்சிப்பணியும் மிக முக்கியமானவை. மட்டக்களப்பில் வழக்கிலுள்ள பாரதஅம்மானை என்ற ஏட்டினைப்பிரதிகளாகக்கண்டெடுத்து அதனைப்பதிப்பிப்பதற்கு ஆயத்தம் செய்தும், அந்நூலை மட்டக்களப்புலகுக்கும் ஏனைய அம்மானைப்பாடல்களோடு ஒப்பிட்டும் ஆய்வு செய்கிறார். இவ்வாய்வு மட்டக்களப்பில் ஒரு செந்நெறி இலக்கியப்பாரம்பரியம் இருந்து வந்தது என்பதை உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய ஆய்வாகும்.
- மட்டக்களப்பு மான்மியம் சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளார். தமிழ் ஆய்வு இவரது ஒரு கண்ணாயின் கல்வியைப்பரப்புதல் மறுகண்ணாகும்.
- சிறந்த பேச்சாளரான இவர் தமது பேச்சு மூலம் கல்விஅறிவினைப் பொதுமக்கள் மத்தியிலும் பரப்பி வருகின்றார். இதுவரை இவர் பேசியவைகள் ஆயிரத்துக்கும் மேலிருக்கும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கட்டுரையாக வடிக்கத்தக்கன.
- தமது 74 வது வயதிலும் தமிழ்ப்பணியாற்றும் இவரது சேவையினைக் கௌரவித்து கலாசார அமைச்சு 1993 ல் தமிழ் ஒளி என்ற பட்டம் கொடுத்துள்ளது. 1998 ல் வடக்கு கிழக்கு ஆளுநர், ஆளுநர் விருது வழங்கி கௌரவித்துள்ளார்.
- மட்டக்களப்பின் தமிழ்க்கல்வியின் முதற்தலைமுறை சார்ந்தவர்களான மகாவித்துவான் F.X.C நடராஜா, வித்துவான் பண்டிதர் வீ.சி.கந்தையா, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோருக்கு இலக்கியக்கலாநிதிப்பட்டம் அளித்து கிழக்குப்பல்கலைக்கழகம் அவர்களைக்கௌரவித்துள்ளது.
- இரண்டாந்தலைமுறையைச்சேர்ந்த அறிஞர்களுள் முதலிடம் பெறுபவராக தமிழ் வித்துவான் சாமுவேல் இமானுவேல் கமலநாதன் திகழ்கிறார். அவர் தமிழ்மொழிக்கும், மட்டக்களப்பின் கல்வி உலகுக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய தொண்டுகள் கௌரவத்துக்குரியன.

வித்துவான் சா.இ.கமலநாதன் அவர்களின் பணிகள் தொடரவும், பல்லாண்டு காலம் நீடூழி வாழவும் மனமுவந்து வாழ்த்துகிறோம்.



## கலாசார அலுவல்கள் அமைச்சினால் கலாபூசணம் விருதுபெற்ற மாஸ்டர் சிவலிங்கம்

மாஸ்டர் என்ற சொல்லுக்குத் தனி அகராதியாக தனிப்பெரும் சிறப்பு வாய்ந்தவர் மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள். பல்துறை ஆற்றல்மிக்க பிறவிக்கலைஞரான மாஸ்டர் சிவலிங்கம் அவர்கள் மண்முனை வடக்கு கலாசாரப்பேரவை ஆரம்பித்த காலமிருந்து இன்றுவரை அரும்பணியாற்றி வருபவர்.

பிறப்பு — 1933 மார்ச் 28 ம் நாள்

பிறப்பிடம் — மஞ்சந்தொடுவாய்

வசிப்பிடம் — கல்லடி

கல்வி

- கல்லடி சிவானந்தாக் கல்லூரி
- மட்டக்களப்பு அரசினர் கல்லூரி
- தென்னிந்தியா 'சந்தனு' கலைக்கல்லூரியில் கார்ட்டூன் சித்திரக்கலை சிறப்புப்பயிற்சி

ஆற்றல்கள்

- பல குரல்களில் பேசுதல், சித்திரக்கலை, நடிப்பு, நகைச்சுவைத்திறன், எழுத்துவன்மை, வில்லிசைக்கலை, பத்திரிகைத்திறன்.

பதவிகள்

- தினபதி, சிந்தாமணிப்பத்திரிகைகளின் துணை ஆசிரியராக 17 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.
- மட்டக்களப்பு மாநகரசபையின் பொதுநூலக கதை சொல்லும் கலைஞராக (Story Narrator) பணியாற்றி வருகின்றார்.

கலைப்பணி

- மட்டக்களப்புப்பகுதிக்கு வில்லிசையை முதலில் அறிமுகப்படுத்தி 1960ம் ஆண்டிலிருந்து 125க்கும் அதிகமான வில்லிசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார்.
- வில்லிசை வளர்வதற்கு இளைஞர்கள், சிறுவர்களுக்குப் பயிற்சியும் ஒத்துழைப்பும் வழங்கிவரும் ஒப்பில்லாக் கலைஞர்.
- சிறுவர் மேம்பாட்டில் அக்கறையும், கவனமும் செலுத்தி வரும் சமூகசேவையாளன்.
- பாலர் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், பொது நூலகங்கள், மேலும் ஏனைய அமைப்புக்களிலும் கதை சொல்லுதல் மூலம் சிறுவரின் உள விருத்திக்குப்பெரும் பங்களிப்புச் செய்கின்றார்.
- வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தொடர்ந்து சிறுவருக்கான கதை சொல்லும்

நிகழ்ச்சி மூலம் சிறுவர்களை மட்டுமல்ல பெரியவர்களையும் தன்பால் ஈர்த்துக்கொண்டவர்.

- ❑ சிறுவர் இல்லங்கள், வலது குறைந்த சிறுவர்கள் அனைவரையும் அரவணைத்துக் கலைநிகழ்வுகளில் பயிற்சியளித்து சிறுவர் மேம்பாட்டில் தனிக்கவனம் செலுத்துபவர்.

இலக்கியப்பணிகள்

- ❑ ஈழத்து, தமிழகப்பத்திரிகைகளில் நகைச்சுவை ஆக்கங்களில் அநேகமானவை வெளிவந்துள்ளன.
- ❑ சிறுவர் கல்வி வளர்ச்சியைக்கருத்திற் கொண்டு மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசக்கதைகளை சுவைபட எளியநடையில் பல பத்திரிகைகளிலும் தொடராக எழுதி வருகிறார்.
- ❑ 1993 ல் உதயவெளியீடாக வெளிவந்த இவரது "பயங்கர இரவு" என்ற நூல் சிறுவருக்கான தரமான இலக்கியப்படைப்பாகும்.

பெற்றுள்ள பட்டங்கள்

- ❑ நகைச்சுவைக்குமரன், நகைச்சுவை மன்னன், வில்லிசை வேந்தன், அருட்கலைத்திலகம், கனித்தமிழ்க்கலைஞர் எனப்பல பட்டங்கள் இவரது தமிழ்ப்பணிக்கு முத்திரை பதித்துள்ளன.
- ❑ அண்மையில் லண்டனிலுள்ள பட்ஸ் (BUDS) கழகம் மாஸ்டரை அழைத்துக் "கதைமாமணி" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

மணிவிழாக்கண்ட மாஸ்ரர் சிவலிங்கம் அவர்களது கலைப்பணி
மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.


Greetings from............

**MYOWN**

**COMPUTER SYSTEMS (PVT) LTD.**

No. 4, Lloyds Avenue,
Batticaloa.
T.P. 065-23407



**Head Office :**
No. 243, Dam Street,
Colombo 12.
T.P. 337547
Fax. 423289
Email. myowntrad@euveka.lk



**கலாசார அலுவல்கள் அமைச்சினால் கலாபூசணம் விருதுபெற்ற திருமதி இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இசைப்பாரம்பரியத்தில் புதிய சகாப்தமொன்றை உருவாக்கியிருக்கும் விபுலானந்தா இசைநடனக்கல்லூரியின் ஆரம்ப வளர்ச்சியோடு இணைந்து நினைவுகூரப்பட வேண்டிய வரலாற்றுப்பெருமைக்குரியவர், அதன் அதிபராகப்பணியாற்றிய இசைக்கலைஞர் திருமதி இராஜேஸ்வரி தெட்சணாமூர்த்தி அவர்கள்.

பிறப்பு 1937 ஆடி 19ம் நாள்

பிறப்பிடம் நல்லூர்

வதிவிடம் திருகோணமலை

வசிப்பிடம் மட்டக்களப்பு

கல்வி

- சென்னை சர்வகலாசாலை - டிப்ளோமா பட்டம் (வாய்ப்பாட்டு, வீணை)
- தமிழ்நாடு மத்திய இசைக்கல்லூரி - சங்கீத வித்துவான்

ஆற்றல்

- பாடல்கள் இயற்றுதல், இசை அமைத்தல், வீணை, புல்லாங்குழல் என்பவற்றைக் கையாளுவதில் தனித்திறமை.

பதவி

- 1963 ம் ஆண்டிலிருந்து இசை ஆசிரியையாகக் கடமையாற்றியவர்.
- மட்டக்களப்பு விபுலானந்தா இசைநடனக்கல்லூரியின் அதிபராகப்பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

கலைப்பணி

- மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமன்றி, அகில இலங்கை ரீதியில் இசை ஆசிரியர்கள், இசைப்பட்டதாரிகள் அனேகரை உருவாக்கியுள்ளார்.
- தாமே பாடல்களை இயற்றி, அவற்றிற்கு இசையமைத்து மாணவர்கட்குப் பயிற்றுவித்துள்ளார்.
- விபுலானந்தா நூற்றாண்டு விழா நிகழ்வுகளில் இவரால் ஆக்கப்பட்டு இசையமைக்கப்பட்ட பல பாடல்கள் மேடையேற்றப்பட்டு பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இந்து கலாசார அமைச்சினால் ஆண்டுதோறும் நடத்தப்பட்ட சாகித்திய விழாக்களில் இவரால் இயற்றி மட்டக்களப்பை மையமாகக் கொண்ட பாடல்களுடன் இசைந்த நடனங்கள்

பாராட்டுக்களையும், பரிசுகளையும் வென்றெடுத்துள்ளன.

- வீணை, புல்லாங்குழல் போன்ற வாத்தியங்களைக் கையாள்வதில் திறமைமிக்க பல மாணவர்களை உருவாக்கிய சிறந்த இசைஞானி.
- மாவட்ட மட்ட கலை நிகழ்வுகள், பலவற்றுக்கும் போதிய ஒத்துழைப்பு வழங்கி கலை வளரக்கரம் கொடுக்கும் இனிய பெண்மணி.
- கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளுக்குப் பிரதம பரீட்சகராகக்கடமையாற்றியுள்ளதோடு, மாவட்ட மட்ட நிகழ்வுகள் பலவற்றில் நடுவராகக்கடமையாற்றி வருகிறார்.
- இவற்றுக்கு மேலாக விபுலானந்தா இசைநடனக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் பெருகூட்டியவர்.
- உயர்ந்த எண்ணக்கருக்கள் மூலம் கல்லூரியின் உயர்ச்சிக்கும் அழகூட்டலுக்கும் அடிநாதமாய் இருந்தவர்.

இலக்கியப்பணிகள்

- பாடசாலை நாட்களில் சஞ்சிகைகளுக்கு நல்லாக்கங்கள் வழங்கியவர்
- 'சுருதி' மலர் வெளியீடுகளில் இவரது பங்களிப்பும் ஒத்துழைப்பும் குறிப்பிடத்தக்கது.

தற்போது மட்டக்களப்பின் மகளிர் மேம்பாட்டில் ஈடுபாடு
கொண்ட சமூகசேவகியாகப்பணியாற்றும் திருமதி
இராஜேஸ்வரி தட்சணாமூர்த்தி அவர்களின் இசைப்பணி
மேலும் தொடர வாழ்த்துகிறோம்.

தொகுப்பு :- நிர்மலா ஜெயராஜா




IIP®
Institute for Certification of Computing Professionals

Our Full Circle Operations

Professional Computer Trainning

Computer & Electronics Equipments Repairs, Service and Maintenance

Customer Oriented Software Developement

Computer Accessories Sales & Marketing

1987 - 1997
ANNIVERSARY

No. 415, Trinco Road,
Batticaloa.
e-mail : batti_ibs@hotmail.com
microsoftasian@usa.net

FOUNDER MEMBER OF
ACTOS

Head Office : No. 40 2/1, Edward Lane, Colombo -3, Srilanka.

# மட்டக்களப்புக்கலை இலக்கிய வரலாற்றில் மண்முனை வடக்குக் கலாசாரப்பேரவையின் ஐந்தொகை

*காசுபதி நடராசா.* **B. A (Cey)**
*( கலாசாரப்பேரவை உறுப்பினர் )*

இலங்கையின் ஆட்சியமைப்பில், நிருவாகப் பரவலாக்கலின் ஓர் அங்கமாகக் கருதப்பட்டு உருவாக்கப்பட்டவை பிரதேச செயலகங்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் முதன்முதல் உருவாக்கப்பட்ட பிரதேச செயலகம் மண்முனை வடக்கு. இது 1992 ல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் நிருவாகசேவையில் முதுநிலை அதிகாரியாக வடகிழக்கு மாகாண சபையில் கடமை புரிந்தவரும், தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச அதிபராகவும், மாவட்டச்செயலாளராகப் பணியாற்றுபவருமான திரு.அ.கி.பத்மநாதன் அவர்கள் இதன் முதல் பிரதேச செயலாளரானார்கள்.

ஆவணங்களிலிருந்த பிரதேச செயலகத்தை வடிவமைத்துச் செயலுருவாக்க அவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அவரின் உருவாக்கத்தில் மண்முனை வடக்குப் பிரதேச செயலகக்கலாசாரப் பேரவை இப்பிராந்தியத்தின் கலை இலக்கிய வரலாற்றில் ஒரு மையப்புள்ளியாக அமைந்தது. இருபதாம் நூற்றாண்டின் இறுதித்தசாப்தத்தின் அளவிடும் கருவியாகவும் அமைந்துள்ளது. தற்போதைய தலைவரும் பிரதேச செயலாளருமான திரு.செ.புண்ணியமூர்த்தி அவர்களும் பேரவை உறுப்பினர்களும் செயலக உத்தியோகத்தர்களும் இன்று இதனை வலுவூட்டிக்கொண்டு வருகின்றனர்.

1993ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கலைவிழாக்களை இச்சபை நடத்திவருகின்றது. அதன் ஆவணப்பதிவுகளாக முதல் மூன்றும் "முத்தமிழ் விழா மலர்" என்றும், இறுதி மூன்றும் "தேனகம்" - என்றும் பெயர்தாங்கி வெளிவந்துள்ளன. கிடைத்த தகவல்களைத் தொகுத்து கலாசாரப்பேரவையின் செயற்பாடுகள் இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன. இவைகள் நிறைவு செய்ய, பின்புலமாக நின்றுழைத்த பல்வேறு உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், நிதியுதவிகள் செய்தோர், பத்திரிகையாளர்கள், தளர்வினில் துணைநின்று கைகொடுத்தோர் என்று பலரும் பக்கபலமாயிருந்து வழிகாட்டியுள்ளனர். அவர்கள் என்றென்றும் நன்றிக்குரியவர்கள். இவர்களில் அமரத்துவம் பெற்ற தமிழறிஞர் பி.வி.கணபதிப்பிள்ளை, கவிஞர் க.யோகநாதன் (சாருமதி) ஆகியோரைக் குறிப்பிடல்தகும்.

கலாசாரப்பேரவையின் பணிகள் பின்வருமாறு பட்டியலிடப்பட்டுள்ளன.

1. கட்டமைப்பு
2. செயல்
3. காட்சி
4. ஆவணம்
5. நிகழ்வுகள்

1. கட்டமைப்பு

| | |
|---|---|
| ஆண்டு | 1993 |
| தலைவர் | திரு.அ.கி.பத்மநாதன் (பிரதேச செயலா) |
| செயலாளர்கள் | திரு.மா.உதயகுமார் (உதவிப்பிரதேச செயலர்) |
| | திருமதி. வாசுகி அருள்ராஜ் (உதவிப்பிரதேச செயலர்) |
| இணைப்பாளர் விடய எழுதுனர் | திரு.செ.சிசில் |
| உறுப்பினர்கள் | செ.குணரெத்தினம் |
| | செல்வி கபீபா இஸ்மாயில் |
| | க.யோகநாதன் (சாருமதி) |
| | ஐ.நடேசன் |
| | கே.மங்களராஜ் |
| | அன்பழகன் குரூஸ் |
| | எஸ்.தங்கவேல் |
| | த.சிவலிங்கம் |

செழியன் ஜே.பேரின்பநாயகம்
அ.அந்தோனிமுத்து
ஜீவன் ஜோசப்
அ.இருதயநாதன்
பி.வி.கணபதிப்பிள்ளை
வே.இராசமாணிக்கம்
மாஸ்டர் சிவலிங்கம்

| | |
|---|---|
| ஆண்டு | 1994 |
| தலைவர் | திரு.அ.கி.பத்மநாதன் (பிரதேச செயலர்) |
| செயலாளர்கள் | செல்வி. கலாமதி பாலசிங்கம் (உதவிப்பிரதேச செயலர்) |
| | திருமதி. வாசுகி அருள்ராஜ் (உதவிப்பிரதேச செயலர்) |
| இணைப்பாளர் | திருமதி. நிர்மலா ஜெயராஜா |
| விடய எழுதுனர் | செல்வி. மதிவதனி ஆறுமுகம் |
| உறுப்பினர்கள் | செ.குணரெத்தினம் |
| | செல்வி. கபீபா இஸ்மாயில் |
| | க.யோகநாதன் (சாருமதி) |
| | ஐ.நடேசன் |
| | அன்பழகன் குரூஸ் |
| | கதிர். பாரதிதாசன் |
| | எஸ்.தங்கவேல் |
| | த.சிவலிங்கம் |
| | செழியன். ஜே.பேரின்பநாயகம் |
| | அ.அந்தோனிமுத்து |
| | அ.இருதயநாதன் |
| | வே.இராசமாணிக்கம் |
| | மாஸ்டர் சிவலிங்கம் |
| | எம். இராசரெத்தினம் |
| மலர்க்குழு | எஸ்.தங்கவேல் |
| | (திமிலை மகாலிங்கம்) |
| | கவிஞர் செ.குணரெத்தினம் |
| | நெல்லை. நடேஸ் |

| | |
|---|---|
| ஆண்டு | 1995 |
| தலைவர் | திரு. செ.புண்ணியமூர்த்தி (பிரதேச செயலர்) |
| செயலாளர்கள் | திருமதி. வாசுகி அருள்ராஜ் (உதவிப்பிரதேச செயலர்) |
| | திருமதி. கலாமதி பத்மராஜா (உதவிப்பிரதேச செயலர்) |
| இணைப்பாளர் | திருமதி. நிர்மலா ஜெயராஜா |
| விடய எழுதுனர் | செல்வி. மதிவதனி ஆறுமுகம் |
| உறுப்பினர்கள் | கலாநிதி சி.மௌனகுரு |
| | காசுபதி நடராசா |
| | க.தங்கவேல் |
| | கதிர்.பாரதிதாசன் |
| | மாஸ்டர்.சிவலிங்கம் |
| | இரா.துரைரெத்தினம் |
| | திருமதி.கபீபா காதர் |
| | செல்வி. ரஜனி நடராசா |
| | வி.தவராசா |
| | கே.லோறன்ஸ் |
| | எஸ்.நவநீதன் |
| | க.குருநாதன் |
| | க.சரவணபவன் |
| | அ.இருதயநாதன் |
| மலர்க்குழு | கலாநிதி சி.மௌனகுரு |
| | காசுபதி நடராசா |
| | வி.தவராசா |
| | இரா.துரைரெத்தினம் |
| | எஸ்.தங்கவேல் |
| | கே.லோறன்ஸ் |

| | |
|---|---|
| ஆண்டு | 1996 |
| தலைவர் | திரு. செ.புண்ணியமூர்த்தி (பிரதேச செயலர்) |
| செயலாளர்கள் | திருமதி. கலாமதி பத்மராஜா (உதவிப்பிரதேச செயலர்) |
| | திருமதி. வாசுகி அருள்ராஜ் (உதவிப்பிரதேச செயலர்) |
| இணைப்பாளர் | திருமதி. நிர்மலா ஜெயராஜா |
| விடய எழுதுனர் | செல்வி. மதிவதனி ஆறுமுகம் |
| உறுப்பினர்கள் | காசுபதி நடராசா |
| | எஸ்.தங்கவேல் |
| | கதிர்.பாரதிதாசன் |
| | மாஸ்டர்.சிவலிங்கம் |
| | க.குருநாதன் |
| | க.சரவணபவன் |
| | அ.இருதயநாதன் |
| | திருமதி.கபீபா காதர் |
| | இரா.துரைரெத்தினம் |
| | கே.லோறன்ஸ் |
| | எஸ்.லோகநாதன் |
| | மு.கணேசராசா |
| | க.கணேசானந்தம் |
| | ஏ.எஸ்.யோகராசா |
| | பால.சுகுமார் |
| மலர்க்குழு | இரா.துரைரெத்தினம் |
| | காசுபதி நடராசா |
| | கே.லோறன்ஸ் |
| | எஸ்.லோகநாதன் |
| | பால.சுகுமார் |
| | க.சரவணபவான் |

| | |
|---|---|
| ஆண்டு | 1997 |
| தலைவர் | திரு. செ.புண்ணியமூர்த்தி (பிரதேச செயலர்) |
| செயலாளர்கள் | திருமதி. கலாமதி பத்மராஜா (உதவிப்பிரதேச செயலர்) |
| | திருமதி. வாசுகி அருள்ராஜ் (உதவிப்பிரதேச செயலர்) |
| இணைப்பாளர் | திருமதி. நிர்மலா ஜெயராஜா |
| விடய எழுதுனர் | செல்வி. மதிவதனி ஆறுமுகம் |
| உறுப்பினர்கள் | காசுபதி நடராசா |
| | கதிர்.பாரதிதாசன் |
| | க.தங்கவேல் |
| | மாஸ்டர்.சிவலிங்கம் |
| | திருமதி.கபீபா காதர் |
| | கே.லோறன்ஸ் |
| | ச.வைரமுத்து |
| | ஐ.நடேசன் |
| | கே.குருநாதன் |
| | கே.கணேசானந்தம் |
| | செல்வி. பாரதி சந்திரசேகரம் |
| | அ.நேசதுரை |
| | பொ.கோவிந்தராசா |
| | க.சரவணபவன் |
| மலர்க்குழு | காசுபதி நடராசா |
| | கே.லோறன்ஸ் |
| | ஐ.நடேசன் |
| | பொ.கோவிந்தராஜா |
| | க.தங்கவேல் |
| | செல்வி. பாரதி சந்திரசேகரம் |

| | |
|---|---|
| ஆண்டு | 1998 |
| தலைவர் | திரு. செ.புண்ணியமூர்த்தி (பிரதேச செயலர்) |
| செயலாளர்கள் | திருமதி. கலாமதி பத்மராஜா (உதவிப்பிரதேச செயலர்) |
| | திருமதி. வாசுகி அருள்ராஜ் (உதவிப்பிரதேச செயலர்) |
| இணைப்பாளர் | திருமதி. நிர்மலா ஜெயராஜா |
| விடய எழுதுனர் | செல்வி. மதிவதனி ஆறுமுகம் |
| உறுப்பினர்கள் | காசுபதி நடராசா |
| | கதிர்.பாரதிதாசன் |
| | க.தங்கவேல் |
